பெப்ரவரி 18, 2001 ~~ரூபா 14.00~~ அறிமுக விலை ரூபா 12.00

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI සුඩර් ඔළි வார மலர்



## அடுத்த கட்டம் பற்றி ஆழ்ந்த சிந்தனை



திகிலூட்டும் சம்பவங்கள் நிறைந்த ஆந்தையாரின் 'க்ரைம் டயறி'



# ஐ.தே.க. போர்க் கொடி!

# இருட்டறையில் அப்பாவி தோட்டத் தொழிலாளர்கள்!

## நம்பிக்கை நிதிய நன்மைகள் எல்லாம் அவர்களுக்கு மூடிமறைப்பு

**ஊ**ழியர் நம்பிக்கை நிதியத்தின் மூலம் கிடைக்கும் பல நன்மைகள் தோட்டத் தொழிலாளர்களுக்குக் கிடைப்பதில்லை, விஷயம் அவர்களுக்கு இருட்டடிப்பு செய்யப்பட்டுள்ளது.

தோட்டத் தொழிலாளர்களும் வெளிநாடு சென்று சிகிச்சைபெற வாய்ப்பு உண்டு. ஓய்வு பெறும் காலத்திற்கு முன் இறந்தால் நஷ்டஈடு அவர்களுக்கும் உண்டு. குணமாக்க முடியாத நோய்களினால் பாதிக்கப்பட்டு இடை நடுவில் தொழில் இழக்க நேரிட்டால் ஒரு வருட சம்பளம் அல்லது ஒரு லட்சம் ரூபாவுக்கு மேற்பட்டாத தொகை அவர்களுக்கு இழப்பீடாக வழங்கப்படும்.

இந்த வரப்பிரசாதங்கள் அனைத்தும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் இலவச காப்புறுதித் திட்டத்தின் மூலம் கிடைக்கின்றன.

தோட்ட நிர்வாகம் (துரைமார்) இந்த நன்மைகளைத் தோட்டத் தொழிலாளர்களுக்குக் கொடுப்பதில்லை. தொழிலாளர்களின் சந்தாப்பணத்தில் வாழும் தொழிற்சங்க வாதிகளும் இதில் அக்கறை செலுத்துவதில்லை.

ஊழியர் நம்பிக்கை நிதியச் சபை தோட்டத் துரைமாருக்கும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும் இத் திட்டம் தொடர்பாகப் பல கருத்தரங்குகளை நடத்தி உள்ளது. ஆனால் இச் செய்தி தோட்டத் தொழிலாளர்களுக்குச் சென்றடைந்ததா என்பது சந்தேகம்.

ஊழியர் நம்பிக்கை நிதியச் சபையின் சப்ரகமுவ பிராந்திய முகாமையாளர் எச் கொடிப்பிலியிடம் இந்த இலவசக் காப்புறுதித் திட்டம் தொடர்பாகக் கேட்ட போது அவர் கூறியதாவது.

பென்ஷன் திட்டத்தின் கீழ் நியமனம் பெற்றவர்களைத் தவிர்த்து ஊழியர் சேமலாப நிதிக்கட்டளைச் சட்டத்தின் கீழ் தொழில் வாய்ப்புக்களைப் பெற்ற அனைத்து ஊழியர்களும் இத்திட்டத்தின் மூலம் நன்மை அடைவர். தனியார் துறையைச் சார்ந்த தொழிலாளர்கள் முதல் உயர் அதிகாரிகள் வரை பதவி, தரம், அந்தஸ்து, பாகுபாடு இன்றி இந்த இலவசக் காப்புறுதியைப் பெற முடியும்.

ஊழியர் சேமலாபநிதி செலுத்தும் ஒவ்வொரு ஊழியருக்கும் அவர்களுடைய மொத்தச் சம்பளத்தில் மூன்று சதவீதத்தை தொழில் வழங்குநர்கள் (நிர்வாகம்) அந்த ஊழியரின் பெயரில் ஊழியர் நம்பிக்கை நிதியக் கணக்கில் வைப்பில் இட வேண்டும். இது கட்டாயம். இத்தொகை ஊழியர் நம்பிக்கை நிதியத்தில் அவர் பெயரில் வரவு வைக்கப்பட்டு அவர் சேவையில் இருந்து விலகும் போது வட்டியுடன் அவருக்கு வழங்கப்படுகிறது.

ஊழியர்களுக்கான காப்புறுதிக் கட்டணம் அறவிடப்படுவதில்லை. முற்றிலும் இலவசமாகவே ஊழியர் நம்பிக்கை நிதியச் சபையில் இக்காப்புறுதி வழங்கப்பட்டுள்ளது.

கடமை நேரத்தில் ஏற்படும் விபத்துக்களுக்கும் பாதிப்புகளுக்கும் மட்டுமே இந்த இழப்பீடுகள் வழங்கப்படும் என்று பிரசாரம் செய்யப்படுவதில் எந்த உண்மையும் இல்லை. இந்த இலவசக்காப்புறுதி 24 மணி நேரத்தையும் உள்ளடக்கியுள்ளது.

கடமை நேரத்தில் ஏற்படும் பாதிப்புக்களுக்கு தொழிலாளர் நஷ்டஈடு வழங்கப்படுகிறது. இது தொழில் தருநர்கள் மூலம் செய்யப்பட்டுள்ள தொழில் காப்புறுதியாகும்.

இதற்கும் இலவசக்காப்புறுதித் திட்டத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை.

ஒரு ஊழியர் நோய்வாய்ப்பட்டு ஆஸ்பத்திரியில் தங்கிச் சிகிச்சை பெற்றால், அரசாங்க ஆஸ்பத்திரியானால் நாள் ஒன்றுக்கு 200/= ரூபாவும் தனியார் மருத்துவ மனையாயின் 350/= ரூபாவும் கிடைக்கும். 25,000/- ரூபாவுக்கு மேற்படாத தொகை வைத்திய செலவுகளுக்காக வழங்கப்படுகிறது.

இதே நேரத்தில் ஓய்வு பெறும் வயதை அடையும் முன் விபத்துகளினாலோ அல்லது நோய்வாய்ப்பட்டோ நிரந்தரமாகத் தொழில் செய்ய முடியாத நிலை (Disabled) ஏற்பட்டால் அவர்களுக்கு ஒரு வருட சம்பளம் அல்லது ஒரு லட்சம் ரூபா நஷ்டஈடாக வழங்கப்படும்.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் "வெளிநாட்டில் சென்று சிகிச்சை பெற்றால் குணமடையலாம்" என உள்ளூர் டாக்டர்கள் சிபார்சு செய்தால், வெளிநாடு செல்வதற்கான வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

இந்த நன்மைகளைப் பெறுபவர்களுக்கு கீழ்க்கண்ட தகைமைகள் இருக்க வேண்டும்:-

(அ) ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் அங்கத்தவராக இருக்க வேண்டும்.

(ஆ) நோய்வாய்ப்பட்ட அல்லது விபத்து நடந்த மாதத்தில் அவருடைய பெயரில் பணம் வரவில் இடப்பட்டிருக்க வேண்டும்.

(இ) விபத்து நடந்த அல்லது மரணம் எற்பட்ட மாதத்தின் முன் ஆறு மாதங்கள் தொடர்ச்சியாக நிதி வரவிலிடப்பட்டிருக்க வேண்டும்.

(ஈ) ஆஸ்பத்திரிகளில் தங்கி இருந்து சிகிச்சை பெற்ற நாட்களுக்கான அத்தாட்சிப் பத்திரம் அதற்குரிய படிவங்களில் டாக்டர்களால் உறுதிப்படுத்தப்பட்டு நிர்வாகத்தின் ஊடாக விண்ணப்பங்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

ஊழியர்கள் நம்பிக்கை நிதியத்தின் நன்மைகளைப் பெறுவதற்காக கொழும்பு தலைமை அலுவலகத்திற்கே வரவேண்டிய அவசியம் இல்லை. மலையகத்தின் பிரதான நகரங்களை உள்ளடக்கியதாகவும், மாகாண ரீதியாகவும் 19 பிராந்திய அலுவலகங்கள் திறக்கப்பட்டுள்ளன. அவற்றின் ஊடாகத் தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடியும். இவ்வாறு கூறினார் முகாமையாளர்.

தோட்டத்தொழிலாளர்களுக்கான இந்த வசதிகள் பற்றி சில முக்கிய தொழிற்சங்கப் பிரமுகர்களுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது வேடிக்கையான பதில்களே கிடைத்தன.

இப்படி ஒரு திட்டம் இருக்கிறதா?

வேலை நேரத்தில் ஏற்படும் விபத்துகளுக்கு மட்டும் தானே நஷ்டஈடு!

ஐந்தாம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சையில் ஆகக் கூடுதலான புள்ளிகளைப் பெறும் பிள்ளைகளுக்குத்தானே பணம் கொடுக்கிறார்கள்?

இவ்வாறாக எல்லாம் கேட்கிறார்கள்.

இது வேடிக்கையானது மட்டுமல்ல வெட்கக்கேடானதும் கூட. தமது சகல தேவைகளையும் தீர்த்து வைக்க வேண்டும் என்பதற்காகத் தோட்டத் தொழிலாளர்கள் தொழிற்சங்கங்களை நம்பி மாதச் சந்தா செலுத்துகின்றனர். ஆயினும் தொழிற்சங்கத் தலைவர்களுக்கே தெரியாத பல விடயங்கள் புதைந்து கிடக்கின்றனவே!.

மலையகக் கண்ணோட்டம்

இரா.புத்திரசிகாமணி.

# கூட்டு ஒப்பந்தக் கட்சிகள் ஆறுமுகத்துடன் முட்டி மோதல்!



பி.வி.கந்தையா

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பாகக் கூட்டு ஒப்பந்தம் செய்த கூட்டாளிகள் மத்தியில் குமுறல்களும், குரோதங்களும் எழுந்துள்ளன.

"அமைச்சர் ஆறுமுகத்தின் தன்னிச்சையான செயல்களுக்கு நாம் துணைபோக மாட்டோம். இத்தகைய நடவடிக்கைகளே உணர்வுபூர்வமான போராட்டங்களை மழுங்கடிக்கச் செய்கின்றன"

என்று தோழமைக் கட்சியினர் ஆறுமுகத்தின் மீது கண்டனம் தெரிவித்திருக்கிறார்கள்.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் பொதுச் செயலாளர் பி.வி.கந்தையா இதுபற்றிக் கூறியதாவது:-

"பெப்ரவரி 1ஆம் திகதி அமைச்சர் ஆறுமுகத்தின் அமைச்சில் கூடிப்பேசினோம். 400 ரூபா சம்பள உயர்வு தொடர்பாக ஆறுமுகம் பிரதமரிடமும் ஜனாதிபதியிடமும் பேசி ஒரு தீர்க்கமான முடிவு காண்பார். இந்த சந்திப்புக்கள் வெற்றியளிக்காவிட்டால் மீண்டும் தோழமைக் கட்சிகள் கூடி மேல் நடவடிக்கைகளுக்கான திட்டங்களை ஆராயும் என்று அங்கு தீர்மானிக்கப்பட்டது"

"ஆனால் எந்தவிதமான முன் அறிவித்தலும் இன்றி, ஆலோசனை கூட நடத்தாமல் சத்தியாக் கிரகத்தில் குதிக்கப்போகிறார் ஆறுமுகம். அதற்கென நாளும் (பெப்ரவரி 18ஆம் திகதி) குறித்துவிட்டார்

"இது தோழமைக் கட்சிகளான எங்களுக்குப் பெரும் அதிர்ச்சியையும் ஏமாற்றத்தையும் தந்திருக்கின்றது - இவ்வாறு பி.வி.கந்தையா தெரிவித்தார்.

கூட்டு ஒப்பந்தத்தின் மற்றும் ஒரு பங்காளரான இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ராஜா செனவிரத்னவிடம் கேட்டபோது அவர் "அமைச்சர் ஆறுமுகத்தின் நடவடிக்கை எம்மைச் சிந்திக்கவைத்துவிட்டது" என்றார்.

"தொழிலாளர்களை வேலைநிறுத்தம் செய்யவிடாமலும் சம்பள உயர்வைப் பெற முடியாமலும் அமைச்சர் ஆறுமுகம் மறைமுகமாக முட்டுக்கட்டை போடுகிறாரோ என்ற சந்தேகமும் எழுகிறது. உண்மையாகவே சம்பள உயர்வைப் பெறவேண்டும் என்ற அக்கறை இருந்தால் இவர் நீதிமன்றத்துக்கு வராமல் ஏன் நழுவுகிறார்?" எனவும் ராஜா செனவிரத்ன கேள்வி எழுப்பினார்.

"இரண்டு வருடங்களுக்கு சம்பள உயர்வு கேட்கமாட்டோம், வேலை நிறுத்தமும் செய்யமாட்டோம்" எனக் கூட்டு ஒப்பந்தம் செய்து மூக்குடைபட்டவர்கள் இந்த மூன்று பகுதியினருமே ஆவர். கூட்டு ஒப்பந்தத்துக்கு அமைய இரண்டு வருடங்களுக்கு வேலை நிறுத்தமே செய்ய முடியாதவாறு முதலாளிமார் சம்மேளனம் உயர் நீதிமன்றத்தில் தடை உத்தரவைப் பெற்றுவிட்டது.

"இரண்டாம், மூன்றாம் பிரதிவாதிகளான தொழிற்சங்கக் கூட்டுக் கமிட்டியும் இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கமும் தாம் வேலைநிறுத்தம் செய்யவில்லை எனப் பதில் மனுக்களைத் தாக்கல் செய்துவிட்டன. திடீர் வேலைநிறுத்தத்தில் குதித்த முதலாவது பிரதிவாதியான இ.தொ.கா. பொதுச் செயலாளர் ஆறுமுகம் தொண்டமான் பதில் மனுத் தாக்கல் செய்யவும் இல்லை. நீதிமன்றத்தில் ஆஜராகவும் இல்லை.

"இது முதலாளிமார் சம்மேளனத்துக்கு சாதமாகிவிட்டது. எதுவிதமான முடிவும் காணப்படாமல் தடை உத்தரவு நீடிக்கப்படுகிறது. இவற்றை எல்லாம் சீர்தூக்கிப் பார்க்கும்போது அமைச்சர் ஆறுமுகமும் மறைமுகமாக முட்டுக்கட்டையாக இருக்கின்றாரோ என்ற சந்தேகம் எழுகிறது" - இவ்வாறு ராஜா செனவிரத்ன கூறினார்.

இது தொடர்பாகத் தொழிலாளர் தேசிய சங்கத்தின் பொதுச் செயலாளர் பி.வி.கந்தையாவுடன் தொடர்புகொண்டு கேட்டபோது அவர் கூறியதாவது:-

"கடந்த பொதுத் தேர்தலுக்கு முன் அனைத்துத் தொழிற்சங்கங்களும் சம்பள உயர்வு கோரி வேலைநிறுத்தம் செய்தன. அப்போது தமது தோழமைக் கட்சியுடன் கூடி கூட்டு ஒப்பந்தம் செய்து அந்தப் போராட்டத்தை வலுவிழக்கச் செய்தார் ஆறுமுகம்.

இரண்டாவதாக கூட்டுக் கமிட்டி உட்பட அனைத்து தொழிற்சங்கங்களும் (இ.தொ.கா. தவிர) வேலைநிறுத்தப் போராட்டத்துக்கு 14 நாட்கள் நோட்டீஸ் கொடுத்தன. ஆனால் ஆறுமுகம் தொண்டமான் திடீர் வேலைநிறுத்தத்தில் குதித்து திட்டமிடப்பட்ட மேற்படி வேலைநிறுத்தப் போராட்டத்தைச் சிதைத்துவிட்டார்.

"கிடைத்த பலன் கமிட்டி அமைக்கப்பட்டதும் வாக்குறுதி அளிக்கப்பட்டதும் மட்டுமே. அமைச்சர் ஆறுமுகம் மாற்று தொழிற்சங்கங்களை மட்டுமல்லாது கூட்டுக் கமிட்டியையும் தோழமைச் சங்கங்களையும் கூட உதாசீனப்படுத்திவிட்டுத் தன்னிச்சையாகச் செயல்படுகிறார். இது அனைவர் மத்தியிலும் விரக்தியை ஏற்படுத்தியுள்ளது.



ராஜா செனவிரத்ன

"பிரார்த்தனைகளிலும் சத்தியாக்கிரகங்களிலும் தொழிலாளர்கள் சலிப்படைந்துவிட்டனர். இந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தை நாம் ஆதரிக்கவில்லை. நாம் கலந்து கொள்ளவும் மாட்டோம்" - இவ்வாறு கந்தையா கூறினார்.

"இதுவரை காலமும் ஜனாதிபதியுடன் பேசிவிட்டோம். பிரதமருடன் பேசிவிட்டோம். எட்டு நாட்களில், பத்து நாட்களில், இரண்டு வாரங்களில் 400 ரூபா சம்பள உயர்வு கிடைக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தது வெறும் பம்மாத்து வேலையா? இல்லையென்றால் இப்பொழுது ஏன் எங்களைச் சத்தியாக்கிரகம் செய்யச் சொல்கிறார்கள்? முன்பு 11 நாள் வேலைநிறுத்தம் செய்து வருமானத்தை இழந்தோம். மீண்டும் சத்தியாக்கிரகம் செய்து வதைபட வேண்டுமா? எனத் தொழிலாளர்கள் கேட்க ஆரம்பித்துவிட்டனர்.

தொழிலாளர்களின் கேள்விகளுக்குப் பதில் சொல்வது யார்? கோழிகளைக் கூடுகளுக்குள் அடைத்துவைத்துத் தீனி போடுவது போல் தொழிற்சங்கங்கள் என்ற கூடுகளுக்குள் தொழிலாளர்களை அடைத்து அடிமைப்படுத்தி வைத்து உள்ளனர். இரைபோடுவதற்குக் காரணம் ஜீவகாருண்யம் அல்ல நமக்கு நல்ல இறைச்சி கிடைக்குமே என்ற சுயநலம்தான்.

இதைத் தொழிலாளர்கள் இன்னும் சரிவரப் புரிந்து கொள்ளவில்லை. இந்தப் பூட்டுகள் உடைபட வேண்டும். அவர்கள் வெளிச்சத்துக்கு வர வேண்டும். அப்போதுதான் அவர்களுக்கு விமோசனம் கிடைக்கும்.

# அரசின் போர் நாட்டம் பட்ஜட்டின் மூலம் அம்பலம்

யுத்தம் நின்று சமாதானம் மலர வேண்டும் என்று அரசாங்கம் சொல்லிக்கொண்டு இருந்தாலும் அரசாங்கத்தின் நாட்டம் எல்லாம் போரைத் தொடர்ந்து நடத்துவதில்தான் என்று குற்றம் சாட்டப்படுகிறது. அரசின் நாட்டம்போரில் தான் என்பதை அரசின் இந்த வருடத்துக்கான பட்ஜெட் அதாவது வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகள் காட்டி விட்டன என்று இப்போது விஷயமறிந்த அனைவரும் கூறுகிறார்கள்.

வரவு – செலவுத் திட்டம் அடுத்த மாதம் ஆரம்பத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது. அதற்கான மதிப்பீட்டு அறிக்கை அண்மையில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. பாதுகாப்புச் செலவுக்காக 63.39 பில்லியன் ரூபா (6339 கோடி) அதில் ஒதுக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் இவ்வாண்டுக்கான மொத்தச் செலவு ஏறக்குறைய 36,497 கோடி ரூபாவாகும். மொத்தச் செலவில் பாதுகாப்புச் செலவு சுமார் ஆறில் ஒரு பங்கை விழுங்குவது தெரிகிறது. கடந்த ஆண்டில் பாதுகாப்புக்கு ஒதுக்கப்பட்ட பணம் 5243 கோடி (52.43 பில்லியன்) ரூபாவாகும்.

புலிகள் இயக்கம் போருக்குத் தயாராகி வருவதாக அரசாங்கம் குற்றஞ்சாட்டி வருகிறது. அதே வேளையில் தானும் போருக்குத் தயாராகிக்கொண்டிருப்பதை சமாதானத்தின் பேரால் பதவிக்கு வந்த அரசாங்கம் பாதுகாப்புச் செலவை அதிகப்பதன் மூலம் காட்டிவிட்டது.

இவ்வாண்டில் அரசாங்கம் எதிர்பார்க்கும் மொத்த வருமானம் 11718 கோடி ரூபாவாகும். இதனால் வரவு– செலவுத்திட்ட பற்றாக்குறை 24779 கோடி ரூபாவாக உள்ளது. உள்நாட்டு, வெளிநாட்டுக் கடன்கள் மூலம் பற்றாக்குறையை நிரப்ப உத்தேசிக்கப்பட்டிருப்பதாக பிரதி நிதி அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் தானே கடன் வாங்குகிறது. நமக்கென்ன? என்று ஒரு சாதாரண பொதுமகன் நினைக்கலாம். ஆனால் அரசாங்கம் வாங்கும் கடன் எல்லாம் நாட்டு மக்களின் தலையில் தான் வந்து விழுகிறது என்பதே உண்மையாகும்.

பொ.ஐ.முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்தது முதல் கடன் வாங்கியே சமாளித்து வந்துள்ளது. அரசாங்கம் இதுவரை வாங்கியுள்ள வெளிநாட்டுக் கடன் எவ்வளவு தெரியுமா? 64,000 கோடி ரூபா? கடன் என்றால் வட்டியும் இருக்கும்தானே. கடந்த ஆண்டில் எல்லாமாகச் சேர்ந்து வட்டியாகச் செலுத்தப்பட்ட பணம் ரூபா 76,000 கோடி. இந்த விவரங்களை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புச் செலவுக்கு இவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டது தேவைதானா என்ற கேள்வி குறிப்பாக வர்த்தக வட்டாரங்களில் எழுப்பப்பட்டுள்ளது. அரசின் திட்டமிட்ட செலவுகள் குறித்து தனியார்துறை



பொருளாதார நிபுணர்களும் அவதானிகளும் கவலையே வெளியிட்டுள்ளனர்.

"புலிகளுடன் போராடத் தேவையான சகல ஆயுதங்களையும் அரசாங்கம் கடந்த ஆண்டில் வாங்கியிருந்தது. சமாதானப் பேச்சு முயற்சியும் ஆரம்பமாகியிருப்பதால் போர்ச் செலவும் குறையும் என எதிர்பார்த்திருந்தோம். ஆனால் பாதுகாப்புச் செலவு அதிகரிக்கப்பட்டதுதான் மிச்சம். இவ்வாண்டில் என்ன நடைபெறுமோ தெரியாது? ஒன்றில் சமாதானம் அல்லது முழு அளவிலான போர்தான்" என்று உள்ளூர் பங்குத்தரகர் நிலையமொன்றின் ஆய்வு இயக்குனர் ஒருவர் கூறியுள்ளார்.

இராணுவச் செலவுகள் அதிகரித்திருப்பது குறித்து அமைச்சர்கள் சிலரும் கவலையடைந்துள்ளனர். சமசமாஜக் கட்சித் தலைவரான அமைச்சர் பெட்டி வீரக்கோன் தனது கவலையை பத்திரிகைப் பேட்டியொன்றில் வெளிப்படையாகவே தெரிவித்துள்ளார்.

"இராணுவச் செலவினம் பெருமளவு குறைக்கப்படாவிடின் நாட்டின் பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்பட முடியாது. போர் மேலும் தொடருமானால் கூடுதல் செலவே ஏற்படும். வாழ்க்கைச் செலவு உயர்வைக் கட்டுப்படுத்தக் கூடிய ஒரே வழி போருக்குத் தீர்வு காண்பது அல்லது போருக்கான செலவைப் பெருமளவு குறைப்பதாகும்" என்று அமைச்சர் வீரக்கோன் பேட்டியில் கூறியுள்ளார்.

வட – கிழக்கு யுத்தம் நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும் பெருமளவு பாதித்துள்ளது. இந்த யுத்தம் இல்லாதிருந்தால் பொருளாதாரம் ஏழு சதவீத வளர்ச்சியை அல்லது அதற்குக் கூடுதலான வளர்ச்சியைக் கண்டிருக்கும் என்று 'மார்கா' பொருளாதார ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது. தற்போதைய பொருளாதார வளர்ச்சி சராசரி 4 முதல் 5 சதவீதமாகும்.

பொருளாதாரம் படுப்பது ஒரு புறம் இருக்கட்டும். யுத்தத்தால் எத்தனை ஆயிரம் பேர் உயிர் இழக்கிறார்கள்! எத்தனை எத்தனை ஆயிரம் பேர் ஊனம் அடைகிறார்கள்!

உயிர் இழப்பும் ஊனமடைதலும் மட்டுமா? யுத்தத்தால் வீடு வாசல்கள் பொருள் பண்டங்களுக்குக் கூட அழிவு ஏற்படுகிறது. அவலம் நிறைந்த அகதி வாழ்வைத் தருகிறது. யுத்தம் நாடு விட்டு நாடு ஓடும் படியும் விரட்டுகிறது.

இவற்றை எல்லாம் அரசு கருத்தில் கொள்வதாகத் தெரியவில்லை. யுத்த முனைப்புடனேயே இருக்கிறது.

நாட்டுக்கு ஒரு 'யுத்த பட்ஜெட்டை'ச் சமர்ப்பித்து விட்டு அரசாங்கம் மக்களுக்கு என்ன நன்மைகளை – சலுகைகளை வழங்க முடியும்? மார்ச் 8 ஆம் திகதி பட்ஜெட் நாள்.

– அவதானி

# பித்தன் பதில்கள்

க.விமலநாதன், தலவாக்கலை

கே : இலங்கையில் வாழும் சிங்களவர்கள் அனைவருக்கும் தமிழ் மொழி எழுத, வாசிக்கத் தெரிந்தால் நிலைமை என்னவாகும்?

ப : தமிழருக்கு தற்பொழுது இருந்துவரும் அற்ப, சொற்ப வேலை வாய்ப்புக்களும் இல்லாமல் போய்விடும்.

க.வரதராஜன், சுன்னாகம்

கே : ரி.வி, ரேடியோவுக்கு மீண்டும் லைசென்ஸை நடைமுறைக்குக் கொண்டு வருவதன் மூலம் பெறும் வருமானத்தில் அரச ஊழியருக்குச் சம்பள உயர்வு வழங்க அரசு திட்டமிடுகிறதாமே...?



ப : அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரித்து விட்டு, அதற்குக் கூடுதலாக ரி.விக்கும் ரேடியோவுக்கும் கட்டணத்தை அறவிடப் போகிறது அரசு. பாவம் அரச ஊழியர்கள்.

கலா தம்பிரத்தினம், வத்தளை

கே : பித்தனே! தமிழ் நாட்டில் பாட்டாளி மக்கள் கட்சி அ.தி.மு.க கூட்டணியில் இணைந்துவிட்டதாமே. அதன் தலைவர் புலிகள் ஆதரவுக் கொள்கையைக் கைவிடுவாரா?

ப : அ.தி.மு.கவின் ஸ்தாபகர் எம்.ஜி.ஆர் தீவிர புலி ஆதரவாளர். புலிகள் இயக்கத்துக்கு அள்ளிக் கொடுத்திருந்தார். ஆனால் எம்.ஜி.ஆரின் வாரிசான ஜெயலலிதாவுக்கு புலிகள் இயக்கத்தை தற்பொழுது கண்ணிலும் காட்ட முடியாது. தி.மு.க கூட்டணியுடன் ஏற்பட்ட வெறுப்பினாலேயே அ.தி.மு.க கூட்டணியில் இணைந்துள்ளார் ராமதாஸ். ஆகவே அவரது சுருதியே மாறப் போகிறது.

ரா.கேசரி, கம்பளை

கே : பித்தனே! யுத்தத்தின் கொடுமையை தென்னிலங்கை மக்களுக்கு உணர்த்திய டொலரை இதுவரை நான் கண்டதில்லை. நீங்களாவது கண்டதுண்டா



ப : டொலரை எல்லோரும் கண்டிருக்க முடியாது. ஆனால் இந்த யுத்தத்தினால் இலங்கையில் டொலரின் பெயர் பிரபல்யமடைந்துவிட்டது. நடைபாதையில் கீரை விற்பவர் கூட, விலையை உயர்த்திவிட்டு டொலரைச் சாட்டுகிறார்.

ஜே.எம்.பாரீஸ், தெல்தெனிய

கே : ஐ.தே.கவின் பாத யாத்திரை பற்றி உங்கள் கருத்து என்ன?

ப : ஆயிரக்கணக்கானோரின் பாதங்கள் தேய்ந்தன. அதற்குப் பலன் கிடைக்குமா பார்ப்போம்.

அன்னமுத்து சந்திரமோகன், பொகவந்தலாவை

கே : தற்போதைய சமாதான முயற்சிகளில் தமிழ்க் கட்சிகளின் நிலைப்பாடு என்ன?

ப : இந்த தமிழ்க் கட்சிகள் அரசை நம்பித் தமது ஆயுதங்களையும் களைந்துவிட்டு அரசியல் நீரோட்டத்தில் இணைந்தன. ஆனால் கடந்த பத்து ஆண்டுகளாகக் கண்டது எதுவும் இல்லை. தற்போது தமது பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கக்கூடிய சமாதானத்தையே தமிழ்க் கட்சிகள் விரும்புகின்றன போலும்.

ஆர்.மிதுனா, சிலாபம்

கே : உலக நாடுகள் புலிகளைத் தடை செய்வதன் மூலம் அவர்களை அழிக்க முடியுமா? புலிகள் பீனிக்ஸ் பறவை போன்றவர்கள் என்கிறார்களே?



ப : பீனிக்ஸ் பறவைகளைச் சுட்டெரித்தாலும் அவை சாம்பல் மேட்டில் இருந்து எழுந்துவிடும் என்பார்கள். 1987இல் இந்தியப் படைகளை சுதந்திரமாக இலங்கைக்கு வரவழைத்து அவர்களை புலிகளுடன் மோத வைப்பதில் வெற்றி கண்டவர் ஜே.ஆர். அப்பொழுது புலிகளின் சரித்திரம் முடிந்துவிட்டது என்றே தென்னிலங்கையில் பலரும் நம்பினார்கள். ஆனால் இன்று நடந்தது என்ன?

கவிப்பிரியன் நசூர்தீன், தெல்தோட்ட

கே : விலை வாசி அதிகரிப்பினால் அகதி முகாம்களில் வாழும் ஏழை மக்களின் கதி என்ன? பித்தனே பதில்கூறுவீரா?



ப : அகதி முகாம் களில் உள்ளவர்களுக்கு நிவாரணமாவது கிடைக்கிறது. நடுத்தர வகுப்பினர் நடுத் தெருவில் நிற்கிறார்கள்.

எம்.எம். நஸீர், புத்தளம்

கே : வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் பத்து வருடங்கள் கடந்த நிலையிலும் இன்னும் திரும்பிச் செல்ல முடியவில்லையே..? அங்கு மீண்டும் சென்று அவர்கள் வாழ முடியாதா?

ப : வடக்கு முஸ்லிம்கள் புத்திசாலிகள். நிரந்தரத் தீர்வு ஒன்று வரும்வரை அவர்கள் காத்திருக்கிறார்கள்.

செ.ஆனந்தி, முறக்கொட்டாஞ்சேனை

கே: பித்தன் அவர்களே..! காதலர் தினத்தையொட்டி, காதலர்களுக்கு மகிழ்ச்சியான தகவல் ஒன்றைக் கூற முடியுமா?



ப : காதலிப்பது திருமணத்துக்காக அல்ல என்ற தகவலைப் பலர் காதலிப்பதை ஒரு பொழுது போக்காக வைத்துக் கொள்ளவே விரும்புகிறார்கள்.

எஸ்.நிரஞ்ஜலா, கம்பளை

கே : பித்தனே..! ஆணின் கற்புக்கும் பெண்ணின் கற்புக்கும் இடையில் உள்ள வித்தியாசத்தைக் கூறுங்கள் பார்க்கலாம்.

ப : பெண்கள் கற்பை இழந்தால் வாழ்வையே இழந்துவிடுகிறார்கள். ஆனால் ஆண்களைப் பொறுத்தவரை அப்படி அல்ல. சமுதாயத்தில் உள்ள பெரிய சீர்கேடு இது.

ப.த.மு.நியாஸ், தம்பலகாமம்

கே : ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் திருமணம் முடிந்து முதல் இரவு எப்படி இருக்கும்..?

ப : முதல் இரவுக்காக ஏங்குகிறீர் போலும்! இதற்காகவா ஏங்கினேன் என்று எண்ணும் காலமும் வரும்.

எஸ்.நரன், கிளிவெட்டி



கே : காதலில் தோல்வி அடையும் போது துயரம் அடைவது ஆண்களா? அல்லது பெண்களா?

ப : நிச்சயமாகப் பெண்களாக இருக்க முடியாது. ஆண்கள்தான்.

ஆண்களை விடப் பெண்கள் துணிச்சல்காரர்கள். யாழ்ப்பாணத்தில் படையினரின் சோதனைச் சாவடிகளில் பெண்கள் மட்டும் கடும் சோதனைக்கு உட்படுத்தப்படுவதிலிருந்து இதனைப் புரிந்து கொள்ள முடியும்.

எல்.பென்ஜமின், வத்தளை

கே : இஸ்ரேலில் தீவிர பலஸ்தீன எதிர்ப்பாளர் ஒருவர் பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறாரே?

ப : இஸ்ரேலில் பலஸ்தீனத்துக்கு எதிரான போக்கு அதிகரித்து வருவதையே இது காட்டுகிறது. இத்தகைய நிலையினால் அதிகம் குழம்பிப் போய் இருப்பது நோர்வேதான். மேற்குக் கரையில் பலஸ்தீன அதிகார சபை உருவாக ஒஸ்லோ ஒப்பந்தமே வழிவகுத்தது. அந்தத் துணிச்சலில்தான் இலங்கை இனப்பிரச்சினையிலும் தலையிட நோர்வே சம்மதித்தது. நோர்வேக்கு இது சோதனைக் காலம்.

சுடர் ஒளி

18 பெப்ரவரி, 2001

36/2, பிரெட்றிக்கா வீதி, கொழும்பு-06
டெலிபோன் - பாக்ஸ் : 501409/ 599834


## அரசாங்கத்தின் போர் முனைப்பு!

தொடர்ந்து போரா, பேச்சுவார்த்தையா?

இந்தக் கேள்வி இன்று இலங்கையில் மட்டுமல்ல, உலகெங்கும் கேட்கப்படுகிறது.

காரணம், எவர் விரும்பினாலும் விரும்பா விட்டாலும் இனப்பிரச்சினை தொடர்பான வடக்கு கிழக்குப் போர் சர்வதேசமயமாக்கப்பட்டுவிட்டது.

ஏதோ ஒரு விதத்தில் உலக நாடுகள் பலவும் இந்த விஷயத்தில் சம்பந்தப்படுகின்றன.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தொடர்ந்து போரா பேச்சுவார்த்தையா என்ற கேள்விக்குப் பதில் அளிக்கிறார்.

''சமாதானப் பேச்சுக்கள் தொடர்பான விஷயத்தில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. புலிகளுடன் நேரடிப் பேச்சுக்களை நடத்துவதற்கான நேரம் நெருங்கி வருகிறது. புலிகள் கூட இந்தப் போரை முடிவுக்குக் கொண்டுவர விரும்புகிறார்கள் என்றே கருதுகிறேன்''.

இவை லண்டன் பி.பி.சிக்கு அமைச்சர் கதிர்காமர் கூறிய கருத்துக்கள்.

''புலிகள் கூட இந்தப் போரை முடிவுக்குக் கொண்டுவர விரும்புகிறார்கள்'' என்று அமைச்சர் கதிர்காமர் கூறுவதைக் கள நிலைமை உறுதிப்படுத்துகிறது.

பேச்சுவார்த்தை நடத்திப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வேண்டிய நல்ல சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு என்று புலிகள் கடந்த வருடம் டிசம்பர் 24ஆம் திகதி தொடக்கம் யுத்த நிறுத்தத்தை ஒருதலைப்பட்சமாக அறிவித்து அதைக் கடைப்பிடித்து வருகிறார்கள்.

பேச்சுவார்த்தையை நடைபெறவைப்பதற்காக நோர்வேயின் விசேஷ தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தயாரித்த புரிந்துணர்வு உடன்படிக்கையைப் புலிகள் ஏற்றுக்கொண்டுவிட்டார்கள்.

ஆனால் இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. அதைச் சர்ச்சைக்கு உள்ளாக்கி வருகிறது.

புலிகளைப்போல அரசு போர் நிறுத்தமும் செய்யவில்லை. புலிகளின் போர் நிறுத்தத்தைக் கொச்சைப்படுத்தி வருகிறது. தாக்குதல் நடவடிக்கைகளையும் முடுக்கிவிட்டிருக்கிறது.

பிரிட்டிஷ் அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் சேர்த்து அந்த இயக்கத்தைத் தடைசெய்தால் பேச்சுவார்த்தைகள் நடைபெறும் வாய்ப்பு இல்லாமல் போய்விடும் என்று புலிகள் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார்கள்.

அப்படியிருந்தும் புலிகள் இயக்கத்தைத் தடை செய்யவேண்டும் என்று பிரிட்டிஷ் அரசை இலங்கை அரசு வற்புறுத்தி வருகிறது.

அமைச்சர் கதிர்காமர் இதில் விடாப்பிடியாக நிற்கிறார்.

அவர்தான் ''சமாதானப் பேச்சுக்கள் தொடர்பான விஷயத்தில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது'' என்றும் -

''புலிகளுடன் நேரடிப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கான நேரம் நெருங்கி வருகிறது'' என்றும் பி.பி.சிக்குத் தெரிவித்தார்.

மதிப்புக்குரிய அமைச்சருக்கு என்ன கோளாறு என்று தானே எவருக்கும் கேட்கத் தோன்றும்.

அமைச்சர் இருக்கட்டும் அரசை எடுத்துக் கொண்டால் அதுவும் பேச்சுவார்த்தை என்று சதா மந்திர உச்சாடனம் செய்து வருகிறது.

அதேவேளை இந்த வருட வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்புச் செலவினங்களுக்கு இதற்கு முன் எப்பொழுதும் இல்லாத பெருந்தொகை பணத்தை அதாவது 6339 கோடி ரூபாவை ஒதுக்கியிருக்கிறது.

இது பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கா அல்லது கொடிய யுத்தத்தைத் தொடர்வதற்கா?

பாகிஸ்தானிலிருந்து அரசு முன்னர் ஆயுத உதவி பெற்றது. இப்போது மேலும் ஆயுதங்களை வாங்குவதற்கு 2 கோடி டாலர் கடன் உதவி பெறுகிறது.

இந்தியாவிலிருந்து கடற்படைக் கப்பலை வாங்கியது. கடற்படையினருக்கு இந்தியப் பயிற்சியும் கிடைக்கச் செய்தது.

செக்நாடு, இஸ்ரேல் முதலானவற்றிலிருந்தும் போருக்குப் பல வகைகளில் இலங்கை அரசு உதவி பெற்று வருகிறது.

இவற்றிலிருந்து தெரிவது என்ன? பேச்சுவார்த்தையில் கரிசனையா அல்லது போர் முனைப்பா?

மக்களின் புத்திசாதுரியத்தைக் குறைவாக நினைத்து உண்மைக்குப் புறம்பானவற்றை உளறுபவர்கள் தம்மைத்தாமே தரம் தாழ்த்திக் கொள்கிறார்கள்.

# பிரிட்டிஷ் தடை: சொல்ஹெய்ம் இதில் இரட்டை வேஷமா?

## அமெரிக்க, இந்திய அழுத்தம் குறித்தும் லண்டன் தமிழர்கள் ஆத்திரம்

தமிழீழ விடுதலைப் புலிகள் மீது பிரிட்டிஷ் அரசாங்கத்தடை இனி எந்த நேரத்திலும் அறிவிக்கப்படலாம்.

ஏற்கெனவே நிறைவேற்றப்பட்ட பிரிட்டனின் பயங்கரவாதச் சட்டம் இன்னும் இரண்டொரு நாட்களில் நடைமுறைக்கு வருகிறது.

அதற்கிடையில் தடை செய்யப்படவிருக்கும் பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலை பிரிட்டிஷ் அரசு பூர்த்தி செய்துவிடும். பட்டியலில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் சேர்க்கப்படுகிறது.

இது பற்றி இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்து பிரிட்டனிலும் மற்றும் ஐரோப்பிய நாடுகளிலும் வாழும் தமிழர்கள் புலிகளை விடப் பெரும் கவலை கொண்டுள்ளனர்.

இது புலிகளுக்கு மட்டுமல்ல, அவர்கள் ஊடாகத் தமிழினத்துக்கும் பெரிய அடி என்று அவர்கள் வர்ணிக்கிறார்கள்.

புலிகளைத் தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகள் பிரிட்டனுக்குக் கிடைத்தன. அதே போலத் தடை செய்யக் கூடாது என்ற விண்ணப்பங்களும் நிறையக் கிடைத்தன.

தடை செய்ய வேண்டும் என்று இலங்கை அரசு விடாப்பிடியாக நிற்கிறது.

புலிகள் இயக்கத்தை ஏற்கனவே தடை செய்துவிட்ட அமெரிக்காவும் இந்தியாவும் சும்மா இருக்கவில்லை. பிரிட்டனிலும் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட வேண்டும் என்று அவை வற்புறுத்தின.

தமிழீழ விடுதலைப்புலிகள் தங்கள் பக்கத்து நியாயத்தை எடுத்துக் கூறினார்கள். தங்களைத் தடை செய்தால் சமாதானப் பேச்சுவார்த்தை நடைபெறமுடியாத சூழ்நிலை ஏற்படும் என்றும் அதனால் தமிழினத்தின் எதிர்காலமே சூனியமாகிவிடும் என்றும் விளக்கினார்கள்.

தடை வேண்டாம் என்று கூறப்பட்ட காரணங்கள் எடுபடவில்லை. சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

இலங்கை, அமெரிக்க, இந்திய அரசுகளின் தடைக்கான வற்புறுத்தலே பிரிட்டிஷ் அரசின் காதுகளில் விழுந்தது.

எதிரிக்கு எதிரி நண்பன் என்ற வகையில் அரசுக்கு அரசு ஒத்தாசையாக நடக்க பிரிட்டன் முடிவு செய்து விட்டது.

பிரிட்டனில் உள்ள இலங்கைத்தமிழர்கள் இது பற்றிக் கொதிப்படைந்திருக்கிறார்கள்.

அவர்களின் ஆத்திரம் பிரிட்டன் மீது மட்டுமல்ல, நோர்வே அரசின் மீதும் தான். இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்று அதன் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு நாட்டில் யுத்தத்துக்குப் பதில் நிரந்தர சமாதானத்தை நிலைபெறச் செய்யும் முயற்சியில் அனுசரணையாளர் பணியை மேற்கொண்டிருக்கிறது நோர்வே அரசு.

நோர்வேயின் விசேஷ தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தமிழர்களின் துன்ப துயரங்களை நன்கு அறிந்தவர். வன்னிக்குச் சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை நேரில் சந்தித்து உரையாடியவர். மக்களின் அவலங்களைக் கண்ணால் கண்டவர்.

லண்டனில் அடிக்கடி தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்டன் பாலசிங்கத்தைச் சந்தித்துக் கலந்துரையாடி வருபவர் எரிக் சொல்ஹெய்ம்.

புலிகள் இயக்கத்தைப் பிரிட்டிஷ் அரசு தடை செய்வதால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை எரிக் சொல்ஹெய்முக்கு அன்டன் பாலசிங்கம் விளக்கிக் கூறியிருக்கிறார்.

பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் பேசி தடையைத் தவிர்க்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்.

புலிகளைத் தடை செய்தால் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதற்கு அது குந்தகமாக இருக்கும் என்பதை எரிக் சொல்ஹெய்ம் ஒப்புக் கொண்டார்.

அப்படியிருந்தும் அவர் பிரிட்டிஷ் அரசினரைச் சந்தித்து புலிகளைத் தடை செய்யாதீர்கள் என்று வற்புறுத்தவோ கேட்கவோ இல்லை.

வெறுமனே, தடைபற்றி புலிகள் என்ன நினைக்கிறார்கள், தடை செய்தால் என்ன நடக்கும் என்று அஞ்சுகிறார்கள் என்ற விஷயங்களை மட்டும் அறிவித்ததோடு நின்றுவிட்டார்.

இப்படி வெறும் தகவல் பரிமாற்றத்துக்கு எரிக் சொல்ஹெய்ம் போன்ற ஓர் ஆள் தேவையா? அதுவும் லண்டனில்?

எரிக் சொல்ஹெய்ம் இலங்கை அரசுக்கு நல்ல பிள்ளையாக நடக்க வேண்டும் என்று விரும்புகிற அளவுக்கு இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு உதவ வேண்டும் என்று நினைக்கத் தவறிவிட்டார். அதே வேளை தமிழ் மக்களின் நலனில் அக்கறை கொண்டவராகவும் காட்டிக் கொள்கிறார்.



எரிக் சொல்ஹெய்ம்

எரிக் சொல்ஹெய்ம் மொத்தத்தில் இரட்டை வேடம் போடுவதாகவே லண்டனில் உள்ள இலங்கைத் தமிழர்கள் கருதுகிறார்கள். அதனால் அவர் மீது மிகுந்த எரிச்சல் அடைந்துள்ளார்கள்.

புலிகள் இயக்கத் தடையால் பேச்சுவார்த்தை தடைப்பட்டு அதனால் யுத்தம் தொடரப்போகிறதே என்பதுதான் அவர்களுடைய பெருங்கவலை.

பிரிட்டிஷ் அரசு தடை விதிக்கும் போது அந்த அரசின் தயவில் பிரிட்டனில் (பெரும்பாலும் அகதிகளாக) வாழும் தமிழர்கள் அந்த அரசை எப்படி எதிர்ப்பது?

அதனால் தான் அவர்களின் ஆத்திரம் சொல்ஹெய்ம் மீது திரும்பியுள்ளது.

அவர் சொல்லியிருந்தால் பிரிட்டிஷ் அரசு கேட்டிருக்கும். அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளுக்கு நோர்வேயைக் காரணம் காட்டி ஏதாவது சாக்குப் போக்குச் சொல்ல

காண்டீபம்

பிரிட்டனுக்கு வாய்ப்பும் கிடைத்திருக்கும்.

புலிகள் இயக்கத் தடை அறிவிக்கப்பட்டதும் தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேசத் தலைமை அலுவலகம் லண்டனில் இருந்து இயங்க முடியாது.

எவரும் அங்கே இருந்து புலிகள் இயக்கப் பிரசாரம் செய்ய முடியாது. புலிகளுக்கு ஆதரவான வேறு எந்தக் காரியத்திலும் ஈடுபட முடியாது.

எல்லாவற்றுக்கும் மேலாக பிரிட்டிஷ் பிரஜையான அன்டன் பாலசிங்கம் கூட லண்டனில் இருந்து இயங்க முடியாத நிலை ஏற்படும்.

இவற்றை எல்லாம் அன்டன் பாலசிங்கம் லண்டனில் இருந்து வெளிவரும் "தமிழ்கார்டியன்" ஆங்கிலப் பத்திரிகைக்கு தெரிவித்திருந்தார்.

பிரித்தானியா எமது இயக்கம் மீது தடையை விதிக்குமானால் அது எமது மக்களின் நலன்களுக்கும், அபிலாஷைகளுக்கும் பாதகமாக அமைவதோடு, தமிழரின் பேரம் பேசும் அதிகாரத்தையும் அந்தஸ்தையும் சிறுமைப்படுத்திவிடும்.

அது மட்டுமன்றி எமது விடுதலை இயக்கம் மீது தடை விதிக்கப்பட்டால் ஸ்ரீ லங்கா அரசின் விட்டுக்கொடாத கடும் போக்கிற்கும், இராணுவக் கொள்கைக்கும் ஊக்கம் அளிப்பதாகவே அமையும்.

இதனை எல்லாம் நாம் பிரித்தானிய உயர் அதிகாரப் பீடத்துக்கு தெளிவாக எடுத்து விளக்கியிருக்கிறோம்.

இது ஒரு புறம் இருக்க, இங்கிலாந்திலும், இலங்கையிலும் உலகடங்கிலும் தமிழ் மக்கள் இந்த உத்தேச தடைக்கு எதிராகப் போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். விடுதலைப்புலிகள் இயக்கமே தமிழீழ மக்களின் அரசியல் உரிமைக்காகப் போராடிவரும் உண்மையான மக்கள் இயக்கம் என்பதை வலியுறுத்தி, எமது இயக்கத்தைத் தடை செய்யக்கூடாதென பிரித்தானிய அரசிடம் கோரிக்கைகளை விடுத்து வருகிறார்கள்.

பிரித்தானிய அரசு புலிகள் மீது தடைவிதித்தால் நிச்சயமாக சமாதான முயற்சிகள் முறிவடையுமென நான் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம்மிடம் எடுத்துச் சொன்னேன். இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் அழுத்தத்தின் கீழ் விடுதலைப் புலிகளின் அதிகார பூர்வமான பிரதிநிதியாக நான் லண்டனில் சுதந்திரமாகச் செயல்படுவது கடினமாக இருக்கும்.

எமது விடுதலை இயக்கம் மீது தடை விதிக்கப்படும் கணத்தில் இருந்து நான் மக்களின் பிரதிநிதியென்ற தகைமையை இழந்து ஒரு பயங்கரவாதத் தலைவராக மாற்றப்படுவேன் அத்தோடு, எனது அரசியல் சுதந்திரங்களையும் இந்தச் சட்டம் நசுக்க முற்படும்.

எமது மக்களின் விடுதலைக்காக நான் குரல் எழுப்பினாலும் இச்சட்டத்தின் படி அது பயங்கரவாதப் பிரசாரமாக அமையும். சட்டபூர்வமான ஒரு அரசுக்கெதிராகச் செய்யப்படும் சதியாகவும் கருதப்படும்.

இப்படியான பயங்கரவாதச் சட்டத்தின் கோரப்பிடியில் இருந்து நான் செயற்படுவது கடினம். எனவே, நான் தலைமறைவாக நேரிடலாம். அல்லது இந்நாட்டிலிருந்து வெளியேற நிர்ப்பந்திக்கப்படலாம் என நான் நோர்வேப் பிரதிநிதிகளுக்குத் தெரிவித்திருக்கிறேன். இவ்வாறு அன்டன் பாலசிங்கம் தனது பேட்டியில் கூறியிருக்கிறார்.

இப்படி நிலைமையை தெளிவுபடுத்தியும் நோர்வேயின் விசேஷ தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் பிரிட்டிஷ் அரசுடன் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி தடையைத் தவிர்க்க முயற்சி செய்யவில்லை. அதனால் தான் அவர் வேஷம் போடுகிறாரா அல்லது நாடகம் ஆடுகிறாரா என்றெல்லாம் லண்டன் வாழ் தமிழர்கள் கேட்டுத் தமது ஆத்திரத்தை வெளிப்படுத்துகிறார்கள்.

லண்டனில் இருந்து வெளியேறி அன்டன் பாலசிங்கம் வேரு ஒரு நாட்டில் வாழ்வதிலும் சிக்கல் உண்டு. அவர் இப்போது ஒரு நோயாளியாக இருக்கிறார். அவருக்கு விசேஷ சிகிச்சை தேவைப்படுகிறது. அடிக்கடி பரிசோதனைக்காக மருத்துவ மனைக்குச் செல்லவேண்டியிருக்கிறது.

லண்டனில் தமக்குக் கிடைக்கும் மருத்துவ வசதி வேறு எந்த நாட்டிலும் கிடைக்கும் என்ற நம்பிக்கை அவருக்கு இல்லை. அதனால் வேறு நாட்டுக்குச் செல்வது உயிராபத்தான காரியமாக முடியலாம் என்றும் அவர் நினைக்கிறார்.

தவிரவும் எரிக் சொல்ஹெய்ம்மை அடிக்கடி சந்திப்பதற்கும் லண்டன் தான் வசதியான இடம். வேறு ஒரு நாட்டில் இருந்தால் சந்திப்புச் சிக்கலாகிவிடும் என்று அன்டன் பாலசிங்கத்துடன் மிகவும் நெருக்கமான ஒருவர் தெரிவித்தார்.

எரிக் சொல்ஹெய்ம் இனி எப்போது கொழும்புக்கு வருவார் என்பது பற்றி இன்னும் முடிவாகவில்லை. 18-19 ஆம் திகதிகளுக்குப் பின்னர் தான் அது முடிவாகும்.

## தலைவர்கள் ஆழ்ந்த சிந்தனை

அரசாங்கத் தலைவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும் அடுத்து என்ன என்று ஆழ்ந்த சிந்தனையில் இருக்கிறார்கள்.

இது பிரிட்டனின் புலித் தடை பற்றிய அறிவிப்பு வெளிவர இருக்கும் காலம் அல்லவா!

ஜனாதிபதி அடுத்தவாரம் இந்தியா செல்ல இருக்கிறார். புது டில்லியில் பிரதமர் வாஜ்பாய், உள்துறை அமைச்சர் அத்வானி ஆகியோரைச் சந்தித்துப் பேசுவார். இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி முக்கியமாகக் கலந்தாலோசனை நடத்தப்படும் என்று தெரிகிறது.

வேலுப்பிள்ளை பிரபாகரனும் அடுத்து என்ன என்பது பற்றிய சிந்தனையில் இருக்கிறார். அவர் அறிவித்த ஒருதலைப்பட்ச போர் நிறுத்தம் இம்மாதம் 24 ஆம் திகதியுடன் முடிவடைகிறது. யுத்தநிறுத்தம் பின்னரும் நீடிக்கப்படுமா அல்லது தீவிர தாக்குதல்கள் ஆரம்பமாகுமா? பிரபாகரன் என்ன முடிவு செய்கிறாரோ! அது நிலைமையைப் பொறுத்தது.

## வீரப்பன் வேட்டையில் மாறன் கைது

சந்தனக் கடத்தல் வீரப்பனைக் காடுகளில் தேடிவந்த அதிரடிப்படையினர் தமிழர் விடுதலைப்படைத் தலைவர் மாறனைக் கைது செய்தனர்.

மாறனும் இவரோடு சேர்ந்த சில இளைஞர்களும் தனித்தமிழ்நாடு உள்ளிட்ட சில கோரிக்கைகளை முன்வைத்துப் போராடி வருகின்றனர்.

இவர்கள் வீரப்பனோடு சேர்ந்து காட்டில் இருந்தனர்.

# ஐ.தே.க. போர்க் கொடி! சமையல் அறையில் புரட்சி!!

பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் மோதல் ஆரம்பமாகி விட்டது. இதற்கான சிவப்புக் கொடியை ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரம் காட்டி விட்டார்.

கடந்த அக்டோபரில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் பொ.ஐ.மு மீண்டும் வெற்றி பெற்று அரசாங்கம் அமைத்தது. பழையபடியே ஐ.தே.க. எதிர்க்கட்சியானது.

அப்பொழுது 'புதிய அரசுக்கு இரண்டு ஆண்டுகளுக்குத் தொல்லை கொடுக்கமாட்டோம்' என்று எதிர்க்கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்தார்.


அதன்படியே, அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் ஆரம்பித்த சமாதான முயற்சிகளுக்கு ஐ.தே.க ஒத்துழைப்பு வழங்கி வந்ததைக்காண முடிந்தது.

ஆனால் ஐ.தே.க கடந்த 4ஆம் திகதி கண்டியில் ஆரம்பித்து 9ஆம் திகதி கொழும்பில் முடித்து வைத்த பாதயாத்திரை அரசுக்கு தொல்லை கொடுக்க ஐ.தே.க ஆரம்பித்துள்ள நீண்ட பயணத்தின் ஆரம்பமாகவே தெரிகிறது.

பாதயாத்திரையின் இறுதியில் கொழும்பு நகரமண்டப வளவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய ரணில் ஒரு அபாய அறிவிப்பை விடுத்தார்.

"ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட மக்களைக் கொழும்புக்குக் கூட்டிவந்து ஜனாதிபதி சந்திரிகாவுக்கு இன்று நோட்டீஸ் வழங்கியிருக்கிறேன். அடுத்த தடவை ஐந்து இலட்சம் மக்களை ஒன்று திரட்டி ஜனாதிபதியை வீட்டுக்கு அனுப்புவேன்.

மக்களைக் கஷ்டத்தில் ஆழ்த்தி நடத்தும் சர்வாதிகார ஆட்சியை நிறுத்தி விட்டு வீட்டுக்குச் செல்லுமாறு ஜனாதிபதியைக் கோருகிறேன். அவர் அவ்வாறு செய்யாவிட்டால் அவரை வீட்டுக்கு அனுப் பும் மக்கள் போராட்டத்தை மார்ச் மாதத்தில் இருந்து ஆரம்பிப்பேன்"



ரணில்விக்கிரமசிங்க

இதுதான் ஐ.தே.க தலைவர் ரணில் அந்தக்கூட்டத்தில் விடுத்த அறிவிப்பு. மார்ச் மாதத்தில் தேசிய எதிர்ப்புத் தினமொன்றைப் பிரகடனப்படுத்தி அரசுக்கு எதிராகப் போராடப் போவதாகவும் கூட்டத்தில் ரணில் சொன்னார்.

ஐ.தே.க வின் பாதயாத்திரையும் பொதுக் கூட்டமும் கொழும்பில் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் ஜனாதிபதி சந்திரிகா கொழும்பில் இருக்கவில்லை. அவர் கதிர்காமத்திற்கு திடீர் யாத்திரை ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

கதிர்காமம் கிரி விகாரையில் ஜனாதிபதி வழிபாடு செய்தார். போதி பூசையும் நடத்தினார். சுமார் இரண்டு மணித்தியாலங்களை ஜனாதிபதி அங்கு செலவிட்டார்.

ஜனாதிபதிஸ்ய இழிவு படுத்தும் ஒரு செயல் ஐ.தே.க வின் பாதயாத்திரையின் போது மேற்கொள்ளப்பட்டதாக ஆளும் கட்சியினர் இப்பொழுது குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

கொழும்பு மாநகரசபை வளாகத்திற்கு முன்னால் நடந்த குண்டு வெடிப்பில் ஜனாதிபதி ஒரு கண்ணில் காயமடைந்தார் அல்லவா? அதை ஒரு பெண்மணி சித்திரித்துக் காட்டியவாறு பாதயாத்திரையில் சென்றுள்ளார். நாட்டின் தலைவரைப் பொறுப்புள்ள ஒரு கட்சி இப்படி இழிவுபடுத்துவதா என்று அரச தரப்பினர் கண்டித்துள்ளனர்.

அரசியல்வாதிகளை கேலிச்சித்திரங்களில் சித்திரிப்பது ஒரு பிரபல கலையாகும். பத்திரிகைகளில் அந்தக் கலைக்கு ஒரு தனியிடமே இருந்து வருகிறது.

தொலைக்காட்சிகளும் அரசியல் வாதிகளை வைத்துக் கேலிக்கூத்து நிகழ்ச்சிகளைத் தயாரித் தளிக்கின்றன. இவை நகைச்சுவையாக அரசியல் கருத்துக்களையும், கோமாளித் தனங்களையும், நையாண்டிகளையும் வாசகர்கள் மற்றும் பார்வையாளர்கள் முன் நிறுத்துகின்றன.

ஐ.தே.க. பாதயாத்திரையில் ஜனாதிபதியைப் போன்று அலங்கரித்துக் கொண்டு, ஒரு கண்ணில் கட்டுப் போட்டு நடந்து சென்ற பெண் பார்வையாளர்களுக்கு வெளிப்படுத்திய செய்தி என்ன? ஜனாதிபதியை இழிவுபடுத்தும் ஒரு செயல் இது என அரசாங்கத் தரப்பினர் குற்றஞ் சாட்டியிருப்பதால் அதற்கு ஐ.தே.க. வினர் பதிலளித்தே ஆக வேண்டும்.

ஐ.தே.க. தலைவர் அரசுக்கு விதித்துள்ள காலக்கெடு முடிவடைய இன்னும் வெகு காலம் இல்லை. மிஞ்சி மிஞ்சிப் போனால் இன்னும் ஒன்றரை மாதங்கள் தான் உள்ளன. இந்தக் 'காலக்கெடு' பயமுறுத்தலுக்கு அரசு அளிக்கப் போகும் பதில் என்ன?

அரசு மக்களை கஷ்டத்தில் ஆழ்த்துகிறது என்பதே ஐ.தே.க.வின் முதல் குற்றச்சாட்டு.

இன்று விலைவாசிகள் எல்லாம் உயர்ந்து கொண்டே செல்கின்றன. மின்சாரக் கட்டணம், தண்ணீர் கட்டணம், பஸ் கட்டணம் என்று பல கட்டணங்களும் அதிகரித்துள்ளன.

கடந்த மாதம் கொழும்பு நுகர்வோர் சுட்டெண் 100 புள்ளிகளுக்கும் கூடுதலாக அதிகரித்தது. இலங்கை ரூபாவை மிதக்க விட்டதன் பயனாக பொருள்களின் விலைகள் திடீர் திடீர் என அதிகரித்தன.

பொருளாதார நிபுணர்கள் இந்த நடவடிக்கைகளுக்கு நியாயங்கள் கூறினாலும் சந்தைக்குப் பொருள்கள் வாங்கச் செல்லும் குடும்பப் பெண்கள் யதார்த்த நிலையை உணர்வார்கள்.

அரிசி, சீனி, பருப்பு ,கிழங்கு, செத்தல் மிளகாய் என்று சமையலுக்குத் தேவையான உணவுப் பொருள்களின் விலைகள் கையைக் கடிக்கும் போது சமையலறைக்குள் புரட்சி வெடிக்காதிருக்க முடியுமா?

தேர்தல்களில் 'வாழ்க்கைச் செலவுப்' பிரச்சினை முக்கிய இடம் பிடித்து வந்திருப்பதைக் காண முடியும். இரண்டு கொத்து அரிசி தருவோம், எட்டு இறாத்தல் தானியத்தை வழங்குவோம்; பாண் விலையை மூன்று ரூபா ஐம்பது சதமாகக் குறைப்போம் என்ற வாக்குறுதிகள் எல்லாம் தேர்தல் தலைவிதிகளை மாற்றியமைத் துள்ளன.

இரண்டு பொதுத் தேர்தல் களிலும் மாகாண சபைத் தேர்தல் களிலும் பொ.ஐ.முன்னணியே வெற்றி பெற்று வந்துள்ளது. ஆனால் வாழ்க்கைச் செலவுகள் உயர்ந்து கொண்டே செல்லும் இன்றைய நிலையில் ஐ.தே.க. ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ள போராட்டம் குறித்து அரசு அலட்சியமாக இருக்க முடியாது.

# கொழும்பு குண்டுவெடிப்பு: இதற்கு யார் பொறுப்பு?

கொழும்பில் ஒரு குண்டு வெடித்தால் - அந்தக் குண்டுவெடிப்பின சப்தம் வானில் எழுந்து கொண்டிருக்கும் பொழுதே புலிகளின் வேலை என்பார்கள். கடந்த டிசம்பர் 24ஆம் திகதி முதல் விடுதலைப் புலிகள் போர் நிறுத்தம் செய்திருக்கிறார்கள். எனவே கொழும்பில் புலிகளின் குண்டு வெடிக்க வாய்ப்பில்லை.

ஆனாலும் அண்மையில் கொழும்பில் குண்டு வெடித்திருக்கிறது. நாரஹேன்பிட்டியில் உள்ள சர்வதேச நிவாரண உதவிநிறுவனமான 'ஒக்ஸ்பாம்' அலுவலகம் மீது எறியப்பட்ட இரண்டு கிரனேட்டுகள் வெடித்த சம்பவமே அது. இத்தாக்குதலுக்குக்காரணமானவர்களைக் கண்டுபிடிக்கப் பொலிஸார் விசாரணை செய்து வருகிறார்கள். இன்னும் கண்டுபிடிக்கப் பட்டதாகத் தெரியவில்லை.

கிரனேட் எனக் கருதப்படும் இரண்டு கைக்குண்டுகளை இனந்தெரியாத இருவர் ஒக்ஸ்பாம் அலுவலகம் மீது எறிந்த சம்பவத்தில் அலுவலகக் கண்ணாடி ஜன்னல் களும் வெளியே நிறுத்தப்பட்டிருந்த சில வாகனங்களும் சேதமடைந்தது தெரிந்ததே.

பிரிட்டனைச் சேர்ந்த ஒக்ஸ்பாம் கடந்த 25ஆண்டுகளாக இலங்கையில் இயங்கி வருகிறது. வடக்கிலும் கிழக்கிலும் பாரிய நிவாரணத் திட்டங்களை அது மேற்கொண்டு வருகிறது, போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் ஒரு நிறுவனம் மீது இவ்வாறான தாக்குதல் நடத்தப்பட்டதேன்?

இத்தாக்குதலுக்கு "புலிகளுக்கு எதிரான தேசிய முன்னணி" என்னும் அமைப்பு உரிமை கோரியுள்ளது. உரிமை கோரும் கடிதம் கொழும்பில் உள்ள பத்திரிகை நிறுவனங்கள் சிலவற்றுக்கு அனுப்பப் பட்டுள்ளது. ஆங்கிலத்திலான அக் கடிதத்தில் " கட்டளையிடும் அதிகாரி - விஜய ரணபாகு" எனக் கையொப்பமிடப் பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்த உரிமை கோரலை விட வேறு ஆதாரம் எதுவும் கிடைக்கவில்லை. என்றே பொலிஸார் கூறுகின்றனர். கடந்த பல மாதங்களுக்கு முன்னர் நோர்வே நாட்டைச் சேர்ந்த 'சிறுவர் பாதுகாப்பு அமைப்பு' அலுவலகம் மீதும் இவ்வாறான ஒரு தாக்குதல் நடத்தப்பட்ட சமயத்திலும் இந்த முன்னணியே உரிமை கோரியிருந்தது. அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் கொலைக்கு உரிமை கோரியதும் இதே முன்னணி தான்.

ஒன்றன்பின் ஒன்றாகக் கொழும்பில் நடந்துள்ள மூன்று சம்பவங்களுக்கு ஒரே குழு உரிமை கோரியுள்ளது என்றால் அதன் அர்த்தம் என்ன?

முன்னைய இருசம்பவங்களைப் போலன்றி 'ஒக்ஸ்பாம்' மீதான தாக்குதலை அரசாங்கம் கண்டிக்கத் தவறவில்லை. வெளி விவகார அமைச்சு இச்சம்பவத்தை மிகத் தெளி வாகக் கண்டித்து அறிக்கை வெளியிட்டுள்ளது. சர்வதேச அரச சார்பற்ற இந்த நிறுவனத்துக்கு எதிரான இந்த வன்முறையை வன்மையாகக் கண்டிப்பதாகவும் இச்சம்பவம் ஒரு பயங்கரவாதச் செயல் எனவும் அந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஒரு பயங்கரவாத அமைப்பாக பிரிட்டன் தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகள் எழுப்பப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையிலேயே கொழும்பில் ஒக்ஸ்பாம் மீதான 'பயங்கரவாத' தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பிரிட்டன் புலிகள் இயக்கத்தைத் தடை செய்யாவிடின் இவ்வாறான தாக்குதல்கள் மேற்கொள்ளப் படும் என்பதற்கான ஒரு எச்சரிக்கையாகவும் இத் தாக்குதலைக் கொள்ள முடியும் அல்லவா?

இலங்கையில் நடைபெறும் இச் சம்பவங்கள் குறித்து வெளிநாடுகளில் உள்ள தமிழ்மக்கள் மத்தியிலும் அக்கறை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக லண்டனில் உள்ள தமிழர் அமைப்புகளும் முக்கியஸ்தர்களும் அண்மையில் ஒன்று கூடி இது தொடர்பாகச் செயற்பட்டிருப்பதை செய்திகள் தெரிவிக்கின்றன. அவர்கள் ஒரு புதிய அமைப்பை உருவாக்கியுள்ளனர். "இலங்கையில் சமரச சமாதானத்துக்கான தமிழர்கள்" (TANPIS) என்பதே அந்த அமைப்பின் பெயராகும். நோர்வே ஏற்பாட்டில் இலங்கையில் மேற்கொள்ளப்படும் சர்வதேச சமாதான முயற்சிகளுக்கு ஆதரவளிப்பது புதிய அமைப்பின் நோக்கம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குமார் பொன்னம்பலம் கொலை, பிந்துனுவெவ படுகொலைகள், மலை நாட்டில் தமிழருக்கு எதிரான வன்முறைகள் ஆகியவற் றில் சம்பந்தப்பட்ட அமைப்புகளுக்கு பிரிட்டனில் உள்ள சில சிங்கள அமைப்புகள் ஒத்துழைப்பு வழங்குவதாக புதிய அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது. அந்த அமைப்புகளின் நடவடிக்கைகளுக்கு பிரிட்டன் தடை விதிக்க வேண்டுமெனப் புதிய அமைப்பினர் கோரிக்கை விடவிருக்கின்றனர்.


**நுவரெலியாவில் பெறுமதியான காணி விற்பனைக்கு உண்டு**

நுவரெலியா நகர எல்லைக்குள் பதுளை வீதிக்கு முகப்பாக 35 பேர்ச்சஸ் காணி முழுமையாகவோ, பகுதி பகுதியாகவோ விற்பனைக்கு உண்டு.

விபரங்களுக்கு தொடர்பு:-

Advertiser
P.O.Box 84, Kotte.



**ஹோமியோபதி சிகிச்சை**

தமிழ் நாட்டில் பிரபல ஹோமியோபதி சிகிச்சை நிபுணரும் தமிழக அரசின் ஹோமியோபதி கவுன்சில் உறுப்பினருமான ...

**Dr.R. தியாகராஜன்**
DHMS,AMRSH (London)

நீரிழிவு, ஆஸ்துமா,மூட்டுவாதம், தோல்வியாதிகள், ஆண்மைக் குறைவு போன்ற நாட்பட்ட வியாதிகளுக்கும் சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கிறார்.

காலம் : 20.02.2001 - 25.02.2001
இடம் : ஹோட்டல் கிறீன்லண்ட்ஸ், பம்பலப்பிட்டி.
தொலைபேசி : 585592, 581986
ஹொட்லைன் : 077 - 602513



# பாலே நடனம் ஆடி உள்ளம் குதூகலம்

மேல் நாட்டவர்களின் பாலே நடனம் மேடைகளில் ஆடப்படும் போது மிகவும் கலைநயம் மிக்கதாகத் தென்படும். அத்துடன் இளம் பெண்களுக்கு கட்டான உடல் உறுதியைத் தரக்கூடிய சிறந்த உடற்பயிற்சியையும் தருகிறது. லண்டனிலுள்ள கிரோவ் பாலே நடனக் குழுவினர் பாலே நடனப் பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் காட்சி இது .

# எதிர்காலம் அந்தரங்கம் எனக் கூறும் பலூன் சவாரி

எதிர்காலம் அந்தரங்கமாக இருக்க வேண்டும் என்று எவரும் எதிர் பார்க்கும் காலம் இது. அதனை வலியுறுத்தும் விதத்தில் மாட்ரிட் நகரில் பலூன்களில் பறக்கும் சவாரி ஒன்று அண்மையில் நடைபெற்றது. ஒரு நாடக நடிகை பலூன் ஒன்றில் அந்தரத்தில் தொங்கியவாரே பலூன் சவாரிக்கு மெருகூட்டிய காட்சி இது.





# காண்டா மிருகத்துக்கு காது நன்றாக கேட்கும்

காண்டா மிருகத்துக்கு யானையைவிடப் பலம் அதிகம். ஆனால் யானைக்குக் கண்கள் கூர்மையானவை. காண்டா மிருகத்துக்கோ கண்பார்வை குறைவானது. ஆனால் காது கூர்மையானது. முகரும் சக்தியும் அதிகமானது. காண்டா மிருகத்தின் கொம்பினைப் பொடி செய்து பானத்துடன் கலந்து அருந்தினால் மனிதனுக்கு காம உணர்வு பெருகும் என்று சுதேச வைத்தியர்கள் கூறுகிறார்கள். இதனால் காண்டா மிருகங்களை அழித்துக் கொண்டிருக்கின்றான் மனிதன்.

# போலோ விளையாட்டு பெண்களும் ஆடி துடிப்பு

குதிரை மீது அமர்ந்து சவாரி செய்தபடியே கையிலுள்ள தடுப்பினால் பந்தாடி மகிழும் விளையாட்டு போலோ எனப்படுகிறது. போலோ விளையாட்டுக்கு செல்வந்த நாடுகளில் பெரும் வரவேற்பு இருக்கிறது. ராஜகுமாரர்களுக்குப் பிடித்த விளையாட்டு இது. ஆண்களின் ஏகபோகமாக இருந்த போலோ விளையாட்டில் பெண்களும் துடிப்புடன் கலந்து கொள்கிறார்கள் இப்போது.



# இதழ் விரித்த மலர் சிந்திய முத்துக்கள்

*மலர் ஒன்று இதழ் விரிக்கும் காட்சி ரம்மிய மானதாகத்தான் இருக்கும். அதுவும் அவ்விதம் இதழ் விரித்த மலர் முத்துக்களைச் சிந்தினால் அந்தக் காட்சி மேலும் சிறப்புப் பெற்றுவிடும். இங்கே இதழ் விரித்த மலர் ஒன்று சிந்திய முத்துக்கள் கூறும் கதைதான் என்ன?*



# ஒளிந்திருக்கும் முகம் எது?



ஜனவரி 28ஆம் திகதி "சுடர் ஒளி" மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் நடிகை மனோரமாவினுடையது. சரியான விடையைக் கண்டுபிடித்து எழுதி அனுப்பிய வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகளின் பெயர் விவரம் வருமாறு :

1. பெருமாள் விஜயகுமாரி, பூண்டுலோயா
2. ஆர்.எம்.அஸ்வர்டீன், கொழும்பு - 12
3. ஜெயந்தி ஜோசப், இளவாளை.

சரியான விடையைக் கண்டுபிடித்து எழுதி அனுப்பிய வாசகர்கள் அனைவருக்கும் பாராட்டுக்கள். அதிஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.



கடந்த வாரம் (04-02-2001) மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகத்திற்குரிய நடிகை யார்?

சரியான விடையைத் தபால் அட்டையில் எழுதி அனுப்பும் வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களின் பெயர் விவரம் அடுத்த வாரம் இப்பகுதியில் வெளியிடப்படும்.

இந்த வாரம் பிரசுரமாயிருக்கும் முகம் தெரியாத இந்த உருவம் யாருடையது? வில்லன் நடிகராக அறிமுகமாகி இன்று குணசித்திர வேடங்களிலும் நடிக்கிறார். இடையில் இவர் இயக்கிய படம் விருது பெற்றது. யார் இவர்?

இந்த முகத்திற்குரிய நடிகரைக் கண்டுபிடித்து அவருடைய பெயரைத் தபால் அட்டையில் எழுதி பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

"சுடர் ஒளி"
36/2 பிரெட்ரிகா வீதி
கொழும்பு - 06



# மற்றவர்களுக்கு நான் கோமாளி என்கிறார் சோ

**''சோ''** என்று அழைக்கப் படும் சோ. ராமசாமி இந்திய அரசியலிலும் சரி இலங்கை அரசியலிலும் சரி சர்ச்சைக்கு உரியவர். அவருடைய அரசியல் கருத்துக்களை ஏற்றுக் கொள்பவர்களை விட எதிர்ப் பவர்களின் எண்ணிக்கை அதிகம்.

ஆனால் சோ ஒரு சிறந்த கலைஞர். நாடக, சினிமா நடிகர். நல்ல எழுத்தாளர், துக்ளக் பத்தரிகையின் ஆசிரியர்.

தொழிலால் வழக்கறிஞராக இருந்தாலும் கலை, எழுத்துத்துறைகளிலேயே மூழ்கிப் போயிருக்கிறார்.

நாடக மேடையிலோ, சினிமாவிலோ சோவைக் கண்டதும் எல்லோரும் சிரிப்பார்கள். அவர் எதைப் பேசினாலும், எதைச் செய்தாலும் சிரிப்பு வரும். அவருடைய அரசியல் கருத்துக்களை ஏற்காதவர் களுக்கும் கூடச் சிரிப்பு பொத்திக் கொண்டு வந்துவிடும். அவரது தோற்றமும் பேசும் முறையும் அப்படி.

'சோ'வின் தோற்றம் அலாதியானது. மொட்டைத் தலை, வட்ட முகம், ஆந்தை விழிகள், காவியுடை



'துக்ளக்' வேடத்தில் சோ

அணிந்தாப் போன்று முழுக்க முழுக்க ஒலிவ் கிறீன் கலரில் அங்கி, கையில் புகை உமிழும் குழாய், தொலைக் காட்சிகளில் அரசியல் அரட்டை, நேர் காணல் என்பவற்றுக்கெல்லாம் தோன்றுகின்ற போது இவ்வாறுதான் 'சோ' காட்சியளிக்கிறார்.

30 வருடங்களுக்கு முன்னர் இவருடைய ''முகம்மது பின் துக்ளக்'', ''மெட்ராஸ் டை நைட்'' போன்ற நாடகங்கள் சனத்திரள் காட்சிகளாக சக்கை போடு போட்டன.

இடைக்காலத்தில் ஒரு திடீர்



''மெட்ராஸ் பைநைட்'' படத்தில் பெண் வேடம்

திருப்பம் சினிமாவின் அபரிமிதமான வளர்ச்சி, சின்னத்திரையின் வேகமான ஆதிக்கம் அனைத்தும் நாடக உலகை — கலைஞர்களை ஓர் உலுக்கு உலுக்கிப் பின்னால் தள்ளிவிட்டன. அந்த உதையில் சோவும், அவருடைய நாடகங்களும் செல்லாக் காசுகளாகி விட்டன.

இப்பொழுது மீண்டும் 'சோ'வின் நாடகங்கள் மக்களிடம் செல்வாக்குப் பெறத் தொடங்கியுள்ளன.

இந்த செல்வாக்குத் தொடர்பாக சோ அளிக்கும் பதில்கள் சுவையானவை.

30 வருடங்களுக்கு முன்னர் நான் முன் வைத்த அரசியல் நையாண்டிகள் இன்றும் பொருத்தமாகவே உள்ளன.

பொருத்தமோ இல்லையோ அரசியல் வாதிகளின் தலைகளுக்குப் பொருத்தமாக மக்கள் அவற்றைப் போட்டு விடுகிறார்கள். இதனால் கொல்லென்ற சிரிப்பொலியில் மண்டபம் அதிர்கின்றது. நாடகம் வரவேற்புப் பெறுகின்றது.

மக்களின் அன்று கேட்ட சிரிப்பொலிக்கும் இன்று கேட்கும் சிரிப்பொலிக்கும் வித்தியாசம் எதுவும் இல்லை. என்னைப் பார்த்ததும் சிரிக்கிறார்கள், நான் வாயைத் திறந்தால் கை கொட்டிச் சிரிக்கிறார்கள். என்ன இழவோ என்னை ஒரு புத்திசாலியாகவே நினைக்கமாட்டேன் என்கிறார்கள். 30 வருடங்களுக்கு முன்னரும் கோமாளி. இன்றும் அவர்களுக்கு நான் கோமாளியாகவே தோன்றுகிறேன்.

நாடகப் பிரதிக்கான கதை சம்பந்தமாக அவர் கூறும் இன்னொரு கருத்தும் குளறுபடியானதாகத் தோன்றினாலும் பசப்பல் இன்றி இருக்கிறது.

ஒவ்வொரு வருடமும் கதை எழுதுகிறேன். பிரச்சினைகளை வைத்து அதைச் சுற்றி எழுதுகிறேனா, இல்லை என்றால் கதை எழுதும் போது பிரச்சினைகள் வருகின்றனவா என்று எனக்குத் தெரியாது. ஏதோ எழுதுகிறேன்.



மொட்டைத் தலை ஆந்தை விழிகள்

விஷயம் தெரியுமா? எனது சக்கை போடு போட்டதொரு நாடகத்தை ஒன்றரை நாளில் எழுதி முடித்தேன்.

'என்ன இழவுடா இது' என மக்கள் முகத்தைச் சுளித்துக் கொண்ட ஒரு நாடகத்தை வருடக்கணக்கில் மண்டையைப் போட்டு உடைத்துக் கொண்டு எழுதினேன்.

எப்படிச் சமாச்சாரம் என்கிறார் சோ.

எப்படி இருக்கிறது? இவற்றிலும் சோவின் நகைச்சுவை முத்திரை தெரிகிறது, அல்லவா?

## கலையமுதம்

கே. விஜயன்

# அரசியலுக்கும் காதலுக்கும் இரு நாவல்கள் வெளியீடு

ஜுனைதா ஷெரீப் எழுதிய ''ஜனநாயகர்கள்'', ''சிதைவுகள்'' ஆகிய இரு நாவல்களின் வெளியீட்டு விழா கடந்த மூன்றாம் திகதி கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் இடம்பெற்றது.

பேராசிரியர் சோ.சந்திரசேகரம் இவ் விழாவுக்குத் தலைமை வகித்தார்.

அல்—ஹாஜ். ஜின்னாஹ் ஷெரிபுதீன், அல்—ஹாஜ் ஏ. முகம்மது சமீம், எழுத்தாளர் செ.யோகநாதன், ரூபவாஹினியைச் சேர்ந்த எஸ்.வன்னியகுலம், ஜனாப். யூ.எல்.யாக்கூப், கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர் உடுவை எஸ்.தில்லை நடராஜா, வீரகேசரி பத்திரிகையாளர் அன்னலட்சுமி ராஜதுரை ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள்.

கருத்துரை வழங்கியவர்கள் அனைவரும் இரு நாவல்களும் மிகவும் விறுவிறுப்பான முறையில் எழுதப்பட்டிருக்கின்றன என்று வர்ணித்தார்கள்.

''ஜனநாயகர்கள்'' ஓர் அரசியல் நாவல். அரசியல்வாதிகளின் சில்லறைத்தனங்களை அந்த நாவல் வெளிக்கொண்டுவருகின்றது. ''சிதைவுகள்'' மிகவும் யதார்த்த பூர்வமான காதல் கதை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

தலைமையுரை நிகழ்த்திய பேராசிரியர் சோ.சந்திரசேகரம், இலங்கை நிருவாக சேவையாளரான எழுத்தாளர் ஜுனைதா ஷெரீபின் ஆக்க இலக்கியப் படைப்பாற்றல் வியக்கத்தக்கது என விவரித்தார். ஓர் எழுத்தாளனுக்கும் ஓர் பல்கலைக்கழகப் பேராசிரியருக்கும் இடையே உள்ள வித்தியாசத்தையும் அவர் நகைச்சுவையுடன் வெளிப்படுத்தினார்.

'ஒரு பல்கலைக்கழகப் பட்டதாரி அல்லது பேராசிரியன் தனது பட்டத்திற்காக 50 புத்தகங்களைப் படித்துவிட்டு அதில் அங்கொன்றும் இங்கொன்றுமான கருத்துக்களை எடுத்து புதிய புத்தகம் ஒன்று எழுதுவான்.

எழுத்தாளனோ அப்படியல்ல, அவன் எழுதுவது கதையாக இருந்தாலும் அதில் மொழியின் மேன்மை, புவியியல், சமூகவியல், வரலாறு, அரசியல் என பல்வேறு அம்சங்கள் அடங்கியிருக்கும். அதுவே வித்தியாசம்' என்றார்.

தினகரன் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் கலாசூரி ஆர்.சிவகுருநாதன், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையின் முதல் பணிப்பாளர் அல்—ஹாஜ். வி. அப்துல் கபூர் ஆகியோர் பொன்னாடை போர்த்து கௌரவிக்கப்பட்டனர்.

நூலாசிரியரின் நன்றியுரையுடன் விழா முடிவடைந்தது.









# சினிமா மாயையில் சிக்கிச் சீரழியும் இளைய தலைமுறை!

தனக்குப் பிடித்தமான விஷயத்தைப் பற்றிக் கூறுவதற்காக தேரடிக்கு டானியலுடன் வந்து காத்திருந்தான் லோகன்.

அவனது அவதியை உணராத விநாசியரும் பரமலிங்கம் மாஸ்டரும் நிதானமாக வந்து அமர்ந்தனர்.

'சினிமாக் கதையைச் சொல்ல லோகன் துடிக்குது. இன்றைக்கென்று நீங்கள் லேட்டா வாறீங்கள்' என்றபடி மணலில் சாய்ந்திருந்த டானியல் எழுந்திருந்தான்.

ஓம், ஓம், சோமன்ரை மகனை சினிமாவிலை நடிக்க சான்ஸ் வாங்கித் தருவதாக ஏமாத்தினது பற்றி சொல்லுறன் என்று லோகன் சொன்னவரெல்லே. ஞாபகப்படுத்திக் கொண்டார் மாஸ்டர். உற்சாகமாக ஆரம்பித்தான் லோகன்.

''தமிழகத்தில் பாமர மக்கள் அதிகம் வாசிக்கும் பத்திரிகையில் ''பிரபல சினிமாத் தயாரிப்பு நிறுவனம் அடுத்துத் தயாரிக்கும் திரைப்படத்தில் நடிக்க நடிக, நடிகைகள் தேவை'' என்று அடிக்கடி விளம்பரங்கள் வரும்.

இந்த விளம்பரங்களிலை ஏதாவது ஒன்றைப்பார்த்து நிறையப்பேர் படத்தோட விண்ணப்பிப்பினம். அதிலும் மதுரை போன்ற பின் தங்கிய மாவட்டங்களில் இருந்துதான் அதிகம் பேர் சினிமா மோகத்திலை விண்ணப்பிப்பினம்.

இவையிலை அழகான இளம் பெண்களையும், பணக்கார இளைஞர்களையும் சென்னைக்கு வந்து தங்களைச் சந்திக்கும் படி விளம்பரம் கொடுத்தவை தனித்தனியே கடிதம் அனுப்பிவினம்.

கடிதத்தைப் பார்த்த பிறகு அடுத்த அஜித், விஜய் தாங்கள் தான் என்றும், ஜோதிகா, சிம்ரனின் இடத்தைப் பிடிக்கும் கனவுகளுடனும் சென்னைக்கு வந்து சேருவினம்.

வீட்டிலை விடாட்டி களவாக வீட்டை விட்டு ஓடிப் போறவையும் இவையிலை இருப்பினம்.

எல்லாரும் கடிதத்திலை இருந்த விலாசத்தைத் தேடிப்போவினம்.

இதிலை முதல் முதல் சென்னைக்கு வந்து இறங்கி விலாசம் தேடுற பிள்ளையள் கண்டவங்களின்ரை கையிலை சிக்கிச் சீரழியிறதும் உண்டு.

தப்பித்தவறி விலாசத்தைக் கண்டுபிடிச்சு அங்க போறவைக்கு பெரிய வரவேற்பு நடக்கும்.

அந்த அலுவலகத்தில் தயாரிப்பாளர்கள், டைரக்டர் என்று கொஞ்சப்பேர் சங்கிலி, மோதிரம் என்று போட்டு பணக்காரத் தோரணையிலை இருப்பினம்.

''ஓம் பணக்கார ஆட்கள்தானே படமெடுக்க முடியும்.'' சொன்னார் விநாசியர்.

''நீங்கள் வேற, அவை போட்டிருக்கிறது எல்லாம் படங்களிலை வாற 'கவரிங்' நகைகள்தான். அது மட்டுமே பெரிய நடிகர் நடிகைகளோட ரசிகர்கள் என்று சொல்லி அவை எடுத்த புகைப்படங்களையும் அலுவலகம் முழுவதிலும் மாட்டி வைச்சிருப்பினம்.''

இந்த எடுப்புகளைப் பார்த்து நடிக்கச் சான்ஸ் தேடி வந்தவை முழுக்க நம்புவினம்.

அதுக்குப் பிறகுதான் திருவிளையாடல்கள் தொடங்கும்.

''திருவிளையாடல் பக்திப்படம் எல்லோ'' கேட்டாள் சின்னாச்சி.

''ஆட்டுக்குள்ளை மாட்டை விடாமல் நீ வியாபாரத்தைக் கவனி'' கதை கேட்கும் ஆவலில் விரட்டினான் டானியல்.

முதலிலை இளைஞர்களைத் தனித்தனியே கூப்பிடுவினம் அவையிற்றை நடிச்சுக் காட்டச் சொல்ல, பாவம் அதுகளும் 'ஒஸ்கார்' அவார்ட் வாங்கிறமாதிரி கனவிலை நடிப்பினம். பிறகுதான் வினை தொடங்கும்.

ரஜனியை பாலச்சந்தரிடம் அறிமுகப்படுத்தியவர் இவர்தான் என்று தயாரிப்பாளரும், படத்தை டைரக்ட் செய்ய கமல் இவரிடம் தான் பயிற்சி எடுத்தவர் என்று டைரக்டரும் அறிமுகப்படுத்தப்படுவார்கள்.

''அது உண்மையோ?'' அப்பாவியாகக் கேட்டார் மாஸ்டர்.

எல்லாம் புளுகுதான், ஆனால் அவையின்ரை தோரணைகளைப் பார்த்து இவை நம்புவினம்.

தாங்கள் வங்கி ஒன்றிடம் கடன் பெற்றுள்ளதாகவும், ஆனால் அந்தப் பணம் கைக்குக் கிடைக்க 3 மாசம் ஆகும். அதற்குள்ளை உம்மைக் கதாநாயகனாகப் போட்டு ஒரு படம் எடுத்து விட்டு பிறகுதான் விஜயை வைத்துப் படம் எடுக்க வேணும் என்று கதைவிடுவினம்.

படம் எடுக்கத் தொடங்கிறதுக்கு உடனடியா கொஞ்சக் காசு வேணும் என்று இழுப்பினம்.

நடிக்கப் போனவர் மசிஞ்சால் ஒரே அமுக்குத்தான். ஆளின்ரை தரத்துக்கு ஏற்றபடி 5 ஆயிரத்திலை இருந்து ஒரு லட்சம் வரை கறப்பினம். இதுகளும் வீட்டில சண்டை பிடிச்சு வாட்டி வருத்தி காசைக் கொண்டு போய்கொடுத்துப் போடுங்கள். பிறகு படப்பிடிப்பு என்று தள்ளிப் போடுவினம்.

அதிலயும் சில பொடியள் கொஞ்சம் கோபமாக கேட்டா ரெண்டு லைட்டைப் போட்டு, வெறும் கமெராவாலை நாலு வசனத்தைப் பேச வச்சு போலிப் படப்பிடிப்பு நடத்திச் சமாளிப்பினம்.

''அப்ப தம்பி நடிக்கப் போன பொம்பிளைப் பிள்ளைகளின்ரை நிலை'' ஒரு தந்தையின் பதைபதைப்புடன் கேட்டார் மாஸ்டர்.

அதுகளின்ரை நிலைதான் பெரிய கொடுமை மாஸ்டர். பெரிய ஹோட்டலிலை ரூம் போட்டு இவர் இணைத்தயாரிப்பாளர், இவர் படம் எடுக்க காசு தாறவர் என்று ஒவ்வொருத்தரைக் கூட்டி வந்து இவையளை அனுசரிச்சு நடந்தா நீதான் படத்திலை கதாநாயகி என்று சொல்லுவினம். அதுகளும் சினிமாக் கனவிலை சீரழிஞ்சு போகும்.

''கடவுளே, என்ன அநியாயம்?'' வாய் விட்டுக் கூவினார் விநாசியர்.

இப்பிடி பொடியளிட்டையும் பிள்ளையளை வச்சும் சுருட்டின பணத்தோடை அவை தலைமறைவாகிவிடுவினம்.

அதுக்குப் பிறகு பொடியள் காசு தானே போச்சு என்று ஊர்ப் பக்கம் போவான்கள். ஆனா பொம்பிளைப் பிள்ளையள் தான்



## தேரடி அரட்டை

பாவம் வேற வழியில்லாமல் தரக்குறைவான படங்களிலை நடிச்சும் தப்பான வழிகளிலை போயும் காலத்தை ஓட்ட வேண்டி வரும். உற்சாகமாகக் கதையைத் தொடங்கிய லோகன் இறுதியில் சோகமாக முடித்தான்.

சினிமா மாயையில் சிக்கிச் சீரழியும் இளைய தலைமுறையின் ஏமாளித்தனத்தைக் கேட்டு அனைவரும் வருந்தியதால் அங்கு மௌனம் நிலவியது.

முருங்கைக்காயைப் பிரபல்யப்படுத்திய திருட்டு முழி நடிக டைரக்டரும் உதவி டைரக்டராக காசில்லாமல் இருந்த காலத்தில் இப்படி ''உப்புமா'' படக் கொம்பனி தொடங்கி காசு சுருட்டினவராம்.

'விகங்ச' நடிகையும் சினிமாவை விட்டு ஒதுங்கிவிட்ட 'இளம் ராணி' யும் போலிக் கொம்பனி ஒன்றிடம் இப்படி ஏமாந்தவைதானாம். ஆனால் அவையின்ரை நல்ல நேரம் படவாய்ப்புகள் கிடைத்து ஒரு மாதிரி மேலை வந்திட்டினம். என்று மௌனத்தைக் கலைத்தான் லோகன்.

ஏமாறுபவை இருக்கும் வரை ஏமாத்துறவையும் இருப்பினம் - தத்துவம் உதிர்த்தாள் சின்னாச்சி.

அடுத்தவனை ஏமாத்திப் பிழைக்க என்றே ஒரு கூட்டம் எல்லா இடத்திலயும் இருக்குது. விரக்தியுடன் கூறினார் மாஸ்டர்.

மற்றவையை ஏமாத்திறதா நினைச்சுக் கொண்டு, தாங்களே ஏமாந்து கொண்டிருக்கிற ஒரு கூட்டம் இங்கை இருக்கு. அதுகளை என்ன செய்யிறது? கேட்டாள் சின்னாச்சி.

சின்னாச்சி யாரைக் குறிப்பிடுகிறாள் என்று தெரியாததால் மற்றவர்கள் விழித்தனர். 'மாலிகையைக் கட்டி அதில குரங்குகளை குடிவைச்சது போல, நன்மை செய்வினம் என்று நம்பி நாங்கள் வோட்டுப் போட, படம் திறந்து வைச்சதுக்கு அவை மாறி மாறி அறிக்கை விட்டுக் கொண்டு கிடக்கினம்! சினத்துடன் சீறினாள் சின்னாச்சி.

அப்போதும் விஷயம் புரியாமல் விழித்த இளைஞர்களுக்கு விளக்கினார் விநாசியர். போன ஒன்பதாம் திகதி இலங்கைத் தமிழ்க் காங்கிரஸை நிறுவின, புகழ் பெற்ற சட்டத்தரணி ஜீ.ஜீ. பொன்னம்பலத்தாரின் 24 ஆவது நினைவு தினம்.

''அமரர் குமார் பொன்னம்பலத்தின்ரை அப்பாவைத்தானே சொல்லுறியள்'' - கேட்டான் லோகன்.

ஓம், தம்பி அவரின்ரை நினைவுதினத்தை யொட்டி தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்திலை ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் படத்தை திறந்து வைச்சினம்.

தமிழ்த் தலைவர் ஒருவருக்கு செய்யிற மரியாதைதானே அது. அதிலை என்ன குறை? புரியாமல் கேட்டான் டானியல்.

உங்களுக்குத் தெரிஞ்சது எங்கடை அரசியல் வாதிகளுக்குத் தெரிஞ்சிருந்தா நாங்கள் எப்பவோ நல்லா வந்திருப்பம். குறுக்கிட்டாள் சின்னாச்சி.

அதைக் கேட்டு சிரித்தபடி தொடர்ந்தார் விநாசியர். கூட்டணிக்காரருக்கு ஜீ.ஜீ. பொன்னம்பலத்தாரின் அருமை இப்பவாவது தெரிஞ்சது புளகாங்கித மடைய வைக்குது என்று தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் குமர குருபரன் பத்திரிகைகளுக்கு செய்தி கொடுத்தார்.

இதுக்கு கூட்டணி மூத்த தலைவர் ஆனந்த சங்கரி ''நான் ஜீ.ஜீயோடை நெருங்கிப் பழகினவன். அவருக்கும் தந்தைசெல்வா, அமிர்தலிங்கம் ஆகியோருக்கும் இடையிலை புரிந்துணர்வு இருந்தது என்ற ரீதியிலை பதில் அறிக்கை விட்டிருக்கிறார். தமிழர் வாழ்வா சாவா என்ற நிலையிலை பரிதவிக்கும் போது, தமிழ்த் தலைவர் ஒருவரின் படத்தைத் திறந்து வைச்சதுக்கு இப்படி மாறி மாறி அறிக்கைப் போர் விடுகினம், இவை எங்களுக்காக ஒற்றுமையா குரல் கொடுப்பினம் என்று எங்களை நம்பட்டாம். முடித்தார் விநாசியர்.

முந்திக் கட்சியில் வேறாக இருந்தாலும் தலைவர்மார் ஒற்றுமையாக இருந்திருக்கினம். இப்பதான் உப்பிடி..... அப்பாவியாகச் சொன்னான் டானியல்.

ஹஹ் ஹஹ் ஹா..... தேரடி அதிருமளவுக்கு விநாசியரும் மாஸ்டரும் வெடிச் சிரிப்புச் சிரித்தார்கள். சின்னாச்சியும் சிரிப்பை அடக்க முடியாமல் புடைவைத் தலைப்பால் சிரிப்பை மறைத்தாள்.

தம்பிமாருக்கு பழங் கதைகள் தெரியாது. அதுதான் இப்பிடிச் சொல்லுறியள் என்றார் மாஸ்டர்.

'ஏன் மாஸ்டர்?' வினாவினான் லோகன்.

தம்பி பழைய கதைகளைக் கிளறுவது, நாடிருக்கிற நிலைமையிலை எங்களை நாங்களே கேவலப்படுத்திற மாதிரி இருக்கும். அதாலை சுருக்கமாக சொல்லுறன். தமிழரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ்கட்சி என்று இவை இரண்டாப் பிரிஞ்சு கிடந்து, ஆளை ஆள் காலை வாரினதாலை தான் நாங்கள் கூனிக் குறுகிற நிலை வந்தது என்றார் மாஸ்டர்.

எங்கடை பிள்ளையள் ஆயுதமேந்த வேண்டி வந்ததும் அருமந்த உயிர்களைப் பலிகொடுத்ததும் உவை சீரில்லாமல் இருந்ததாலை தானே. சரி போனாப் போகுது. ராமருக்கு அணில் உதவினமாதிரி மாசத்துக்கு நாலு அறிக்கை விடுகினம் என்று பார்த்தால் இப்ப பழைய குருடி கதவைத் திறவடி என்று பழைய சண்டைகளைப் புதுப்பிக்கினம்'' சின்னாச்சி சீறினாள்.

ஆனாலும் தமிழ்க் கட்சிகள் சேர்ந்து ஒற்றுமையாகத் தமிழர் விடுதலைக் கூட்டணி என்று ஒன்று சேர்ந்தவை தானே. கேட்டான் டானியல்.

பெரிசுகள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டனர். பின்னர் தொண்டையைச் செருமிய மாஸ்டர் சொன்னார்... தம்பி, இப்பவும் சொல்லுறன், பழசுகளைக் கிளறினா தமிழருக்குத் தான் அசிங்கம். எங்களை எப்ப கவிழ்க்கலாம் என்று பார்த்துக் கொண்டு இருக்கிறவைக்கு நாங்களே சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கக்கூடாது.

ஆனாலும் ஒற்றுமையைப் பற்றிக் கேட்டதால சொல்லுறன்.

தமிழரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய மூன்று கட்சிகளும் இணைந்து உருவாக்கினதுதான் தமிழர் விடுதலைக் கூட்டணி.

கூட்டணி தொடங்கின பிறகு வந்த எலெக்சனிலை, அதன் உதய சூரியன் சின்னத்திலை போட்டியிடாமல் தொண்டமானின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தனது சேவல் சின்னத்திலை தான் போட்டியிட்டது.

அதை விடக்கூடந்து, மட்டக்களப்பிலை கூட்டணியின் உதய சூரியன் சின்னத்திலை இராசதுரை போட்டி போட்டவர். அவரை எதிர்த்து கூட்டணியின் ஒரு அங்கமான தமிழரசுக் கட்சியின் வீடு சின்னத்திலை கவிஞர் காசி ஆனந்தன் போட்டி போட்டவர்.

கூட்டணியிலை இருந்த 3 கட்சிகளும் இன்று தனித்தனியே எலெக்ஷன் கேட்கினம். பிறகு கூட்டணியிலை எந்தக் கட்சிகள் கூட்டுச் சேர்ந்திருக்கு என்று விளங்கேல்லை என்றபடி எழுந்து வேட்டியில் ஒட்டியிருந்த மண்ணைத் தட்டியபடியே நடந்தார் மாஸ்டர்.

எல்லாத்தையும் நேரில் பார்த்த எங்களை மாதிரிக் கிழடுகள் இன்னமும் சாகாமல் இருக்கிறம். என்றபடி மாஸ்டரைத் தொடர்ந்தார் விநாசியர்.

தேரடி கலைந்தது.

-ஏகலைவன்

# வன்னிக்குப் பொருட்கள்: உண்மை நிலைமை என்ன?

## முழுத்தடையும் கட்டுப்பாடும் நிலவுகின்றன; உணவுத்தேவையில் பாதியே கிடைக்கிறது

நோர்வேயின் முயற்சியுடன் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் பேச்சுவார்த்தை ஒன்றை ஆரம்பிப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இந்தப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான நல்லெண்ண சமிக்ஞையாக வடபகுதிக்கான பொருளாதாரத் தடையை விலக்கும்படி விடுதலைப் புலிகள் கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். ஆனால் அரசாங்கமோ வடபகுதிக்கு எந்த விதமான பொருளாதாரத் தடையும் கிடையாதென்று சாதிக்கிறது.

இந்த நிலையில் வவுனியா, மன்னார் பகுதிகளிலிருந்து புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு எடுத்துச் செல்வதற்கு ஏராளமான பொருட்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டே வருகின்றன.

யுத்த தேவைக்காகப் புலிகள் பயன்படுத்தும் பொருட்களே தடை செய்யப்படுகின்றன என்று சொல்லப்படுகிறது. ஆனால் அப்பாவி மக்களின் அன்றாடத் தேவைகளுக்கான உணவு, உடை, மருந்துவகைகள் ஆகியவற்றிற்கு மாத்திரமல்ல பணம் எடுத்துச் செல்வதற்கும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

கற்பூரம், டயர், ரியூப், ஷொப்பிங் பை, லஞ்ச் ஷீட், சைக்கிள் வண்டி, சலவைக்குப் பயன்படுத்தும் குளோரின், விவசாய உரமாகிய யூரியா, பூச்சி முட்டை, டிஸ்பிரின், பனடோல் உட்பட மருந்துவகைகள், கறுப்பு, பச்சை, நீல நிறத் துணிகள், வெள்ளை தவிர்ந்த ஏனைய நிறப் பெயின்ட் வகைகள் ஆகியன முற்றாகவே தடை செய்யப்பட்ட பொருட்களாக இருக்கின்றன.

இவை தவிர மட்டுப்படுத்தப்பட்ட பொருட்களாக தேங்காய் எண்ணெய் 6 லீற்றர், மண்ணெண்ணெய் 6 லீற்றர், டோச் விளக்கு பற்றரி ஒரு சோடி, தீப்பெட்டி ஒரு டசின், சவர்க்காரம் ஆறு ஆகியன மட்டுமே எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுகின்றன. பணத்தைப் பொறுத்த மட்டில் 10 ஆயிரம் ரூபாவுக்கு மேல் எடுத்துச் செல்ல முடியாத நிலையே காணப்படுகிறது.

வன்னியிலுள்ள சுகாதாரத் திணைக்களத்தினர் கோருகின்ற மருந்து வகைகளுக்கும் பாதிக்கு மேல் அனுமதி மறுக்கப்பட்டே வருகின்றது. வன்னியில் அதிகம் தேவைப்படும் மலேரியா நோய்க்கான குளோரோகுயின் உட்பட விசர் நாய்க்கடிக்கான ஊசி, பாம்புக்கடிக்கான மருந்து என்பனவும் அனுப்பப்படாமல் தடை செய்யப்பட்டே வருகின்றன.

இவற்றில் பெரும்பாலான மருந்துகள் கொழும்பிலுள்ள பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளால் வன்னிக்கு எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டன. ஆயினும் வவுனியாவில் உள்ள இராணுவ அதிகாரிகள் அவைகளை அனுமதிக்காத நிலையே காணப்படுகிறது.

இதேபோல் வன்னியிலுள்ள வைத்தியசாலைகளின் தேவைக்காக வெளிநாட்டு நிறுவனங்களால் வழங்கப்பட்ட அம்புலன்ஸ் வண்டிகள் பல இன்னமும் அனுமதி கிடைக்காத நிலையில் பல மாதக் கணக்காகக் காத்திருக்கின்றன.

இன்னும் வவுனியாவிலிருந்து வன்னிக்குச் செல்லும் பயணி ஒருவர் 30 கிலோ எடையுள்ள பொருள்களை மட்டுமே கொண்டு செல்லலாம். இந்தத் தடை கண்டிப்பாக அமுலில் இருக்கிறது.

இவை தவிர மேலும் தடை மயமாக இருப்பவை பல.

வன்னிக்குத் தினமும் மக்கள் போய் வரத் தடை, மின்சாரத்தடை, மின்சாரம் வழங்கும் ஜெனரேட்டருக்கும் தடை, சைக்கிள் முதல் மோட்டார் சைக்கிள் வரை, ஆட்டோ முதல் லொறி வரை எல்லாவற்றுக்கும் தடை, பஸ்ஸுக்கும் தடை, காருக்கும் தடை அவற்றிற்கான எரிபொருள்களான பெற்றோல், டீசல் எல்லாவற்றுக்கும் தடை.

தொலைபேசிக்குத் தடை, தொலை நோக்கிக்கும் தடை, சீமெந்துக்குத் தடை, செங்கல்லுக்கும் தடை, சாக்குக்குத் தடை, ஷொப்பிங் பாக்கிற்கும் தடை, இவ்வாறாக எல்லாவற்றிற்குமே தடை மயமாக இருக்கும் வன்னியில் இன்னொரு பெரிய தடையும் இருக்கிறது. அதுதான் உணவுத் தடை.

வன்னிக்குத் தினமும் மக்கள் போய் வரத் தடை, மின்சாரத்தடை, மின்சாரம் வழங்கும் ஜெனரேட்டருக்கும் தடை சைக்கிள் முதல் மோட்டார் சைக்கிள் வரை, ஆட்டோ முதல் லொறி வரை எல்லாவற்றுக்கும் தடை, பஸ்ஸுக்கும் தடை, காருக்கும் தடை அவற்றிற்கான எரிபொருள்களான பெற்றோல், டீசல் எல்லாவற்றுக்கும் தடை. தொலை பேசிக்குத் தடை, தொலை நோக்கிக்கும் தடை, சீமெந்துக்குத் தடை, செங்கல்லுக்கும் தடை, சாக்குக்குத் தடை, ஷொப்பிங் பாக்கிற்கும் தடை.

அதாவது வன்னியிலே தற்போதுள்ள 3 லட்சத்து 74 ஆயிரத்து 368 பேருக்காக மாதாந்தம் ஐநூறுக்கும் மேற்பட்ட லொறிகளில் உணவுப் பொருட்கள் தேவைப்படுகின்றன. ஆனால் அவற்றில் பாதியளவு பொருட்களே அங்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

இதற்கு உதாரணமாக கடந்த 2000ஆம் ஆண்டு ஜனவரி முதல் - தற்போதைய 2001ஆம் ஆண்டு ஜனவரி வரையான விவரம் கிடைத்துள்ளது.

இந்தக் காலப்பகுதிக்குள் வந்த மாதங்களில் அனுமதி கோரப்பட்ட உணவு லொறிகள் எத்தனை? ஆனால் படையினரால் அனுமதிக்கப்பட்ட லொறிகள் எத்தனை? இந்த விவரங்கள் கீழே தரப்படுகின்றன.

2000ஆம் ஆண்டில்

| மாதம் | கோரிக்கை | அனுமதி |
|---|---|---|
| ஜனவரி | 774 | 375 |
| பெப்ரவரி | 630 | 314 |
| மார்ச் | 631 | 399 |
| ஏப்ரல் | 600 | 247 |
| மே | 540 | 300 |
| ஜூன் | 545 | 357 |
| ஜூலை | 606 | 293 |
| ஒகஸ்ட் | 423 | 355 |
| செப்டெம்பர் | 516 | 315 |
| ஒக்டோபர் | 530 | 407 |
| நவம்பர் | 612 | 383 |
| டிசம்பர் | 594 | 296 |
| 2001ஆம் ஆண்டில் | | |
| ஜனவரி | 542 | 278 |

இந்தப் பட்டியலின்படி பார்க்கும் போது கோரப்பட்டவைகளின் பாதி அளவான லொறிகளிலேயே உணவு அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றது.

ஒவ்வொரு வாரமும் திங்கள், புதன், வியாழன் ஆகிய நாட்களில் மட்டுமே வன்னிக்கான உணவு வகைகள் லொறிகளில் அனுப்பப்படுகின்றன. நாளொன்றுக்கு 30 லொறிகளுக்கு மட்டுமே உணவுப் பொருட்களை ஏற்றிச் செல்ல அனுமதி வழங்கப்படுகிறது.

இதன்படி பார்த்தால் மாதாந்தம் 500க்கு மேற்பட்ட லொறிகளில் உணவு எடுத்துச் செல்ல அனுமதி கோரப்படுகின்றது. வாரத்தில் மூன்று நாட்கள் வீதம் மாதமொன்றிற்கு ஆகக் கூடுதலாக 360 லொறிகளில் மட்டுமே உணவுப் பொருட்களை அனுப்ப வசதி ஏற்படுகிறது.

உணவுப் பொருட்களை அனுப்பும் நாட்களில் போயா தினம் அல்லது வேறு லீவு தினம் வந்தாலும் அன்றைய தினம் உணவுப் பொருட்களை ஏற்றிய லொறிகள் அனுப்பப்படுவதில்லை. அந்தப் பொருட்கள் வேறொரு நாளில் அனுப்பப்படுவதும் இல்லை.

இந்த மாதம் 506 லொறிகளில் உணவுப் பொருட்களை எடுத்துச் செல்ல அனுமதி கோரப்பட்டது. ஆனால் 330 லொறிகளை மட்டுமே அனுப்ப நாள் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதுவரை வன்னியின் மொத்தச் சனத் தொகையில் 1 லட்சத்து 27 ஆயிரத்து 80 பேருக்கு மட்டுமே நிவாரணப் பொருட்களை வழங்க சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. ஆனால் எஞ்சியிருக்கும் 2 லட்சத்து 47 ஆயிரத்து 288 பேரில் ஏறத்தாழ 90 வீதமானோர் இடம் பெயர்ந்தவர்களாகவும் - வருமானங்கள் இல்லாதவர்களாகவுமே இருக்கிறார்கள்.

அவர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டுமென்று கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தாலும் - அரசோ அதில் மூன்றில் ஒரு பங்கை மட்டுமே நிவாரணமாக அனுப்பி வருகின்றது. இவ்வாறான நிவாரணத் தடையால் அங்குள்ள மக்கள் பசி, பட்டினியால் பரிதவிக்கிறார்கள். தாய்மாருக்கும் போதிய அளவு உணவின்மையால் பல குழந்தைகள் தினமும் போஷாக்கின்றி நிறைகுறைவாகவும் பிறந்து - இறந்து வருகின்றன.

இவை தவிர இன்னும் ஏராளமான தடைகள் அமுலில் இருக்கும் நிலையில் அரசாங்கமோ வடபகுதிக்கான பொருளாதாரத் தடை எதுவுமே இல்லையென்று கூறுகிறது. இது முழுப் பூசனிக் காயை இலைச் சோற்றிலே மறைக்கும் முயற்சியே ஆகும்.

— வன்னி மைந்தன்

# தும்மினால் உடல் ஆரோக்கியம் ஆனால் ஆபத்தும் அதனால்தான்

தும்மல் உடல் ஆரோக்கியத்திற்கு வழி செய்கிறது என நமது டாக்டர்கள் கூறுகின்றார்கள். ஆனால் அதே தும்மல் பல விபத்துக்களுக்கும் வழி கோலுகிறது என்றால் அது ஒரு ஆச்சரியமான விஷயமல்லவா?

ஒரு முறை இங்கிலாந்தைச் சேர்ந்த 'மேனின்' எனும் பெண் இந்தத் தும்மல் காரணமாகத் தன் எலும்பு மூட்டுக்களில் ஒன்றை இழக்க நேர்ந்தது.

பஸ்சாரதி ஒருவர் பஸ்ஸைச் செலுத்திக் கொண்டிருந்த போது அவருக்குத் திடீரென தும்மல் ஏற்பட்டது. உடனே அவரது பஸ் மின்கம்பத்துடன் மோதியது. பஸ்ஸில் இருந்த பிரயாணிகள் இதனால் படுகாயம் அடைந்தனர்.

பிரிட்டனைச் சேர்ந்த லெப்டினன்ட் ஏவான் பிரோட் என்பவர் தமது காதில் ஒரு துண்டை இழந்தார். எதிர்பாராதவண்ணம் துப்பாக்கி வெடித்ததால் இந்த விபத்து நடந்தது. அவருக்கு அருகில் இருந்த படை வீரருக்கு தும்மல் ஏற்பட்டது. உடனே அவரது கை இயங்க ஆரம்பித்தது. அவருடைய கையில் இருந்த துப்பாக்கியில் இருந்து கிளம்பிய ரவையே பிரோட்டின் காதின் ஒரு பகுதியைத் துண்டாக்கியது.

மற்றொரு சுவையான சம்பவம், ஆஸ்திரேலியாவில் இடம் பெற்றுள்ளது. மெல்போர்ன் நகரைச் சேர்ந்த 'டொனால்ட் பிலயர்' எனும் இராணுவ சார்ஜன்ட் முதலாவது உலகயுத்தத்தில் ஈடுபட்டிருந்த வேளையில் தும்மினார். அவரது கையிலிருந்த துப்பாக்கியின் ரவை ஒன்று மூக்கிற்குள் சென்று அடைத்துக் கொண்டது.

அதே சார்ஜன்ட் இரண்டாவது உலக யுத்தத்தின் போது இன்னொரு தடவை தும்மினார். அப்போது அந்த ரவை தானாக வெளிப்பட்டது. அவரது அதிஷ்டம் தான் என டாக்டர்கள் கூறினர்.

பிரான்ஸைச் சேர்ந்த ஒருவர் ஒரு சமயம் ஆற்றோரத்தில் நின்று கொண்டிருந்தார். அப்போது அவரது சேர்ட் பைக்கெட்டில் சுவீப் டிக்கட் ஒன்றும் இருந்தது. அவர் தும்மியபோது சுவீப் டிக்கட் தவறி விழுந்து ஆற்று நீரினால் அடித்துச் செல்லப்பட்டது. ஒரு மாதம் சென்ற பின்பு, ஆற்றில் விழுந்த அந்த டிக்கட் இலக்கத்திற்கே முதலாவது பரிசான 5,000 பவுண் கிடைத்திருப்பது பத்திரிகையில் வெளியானதைக் கண்டபோது அவரது உள்ளம் பதறியதாம்.

விரைவாக பஸ்ஸை ஓட்டிச் சென்று கொண்டிருந்த ஒருவருக்குத் திடீரென தும்மல் ஏற்பட்டதால் விபத்து மட்டுமல்ல மரணமும் ஏற்பட்டது.

இங்கிலாந்தைச் சேர்ந்த மற்றொருவர் பாதையில் தம் காரைச் செலுத்திக் கொண்டிருக்கையில் தும்மியதால் அவரது கார் மற்றொரு காருடன் மோதி விபத்தில் சிக்கியது. இந்த விஷயம் நீதிமன்றம் வரை சென்று இறுதியில் அவர் அபராதம் செலுத்தவும் நேர்ந்தது.

- முஹம்மது ஹஸனி

# வாசகர் இதயம் பேசுகிறது

''சுடர் ஒளி'யில் வெளிவரும் ''நேரடி அரட்டை' பகுதி புதுமையானது. அதே நேரம் அருமையானதொரு அம்சமாகவும் இருக்கிறது.

— கலையன்பன், தாராபுரம்

அரசியல் கட்டுரைகள் சினிமா செய்திகள் என்னைமிகவும் கவர்ந்திழுக்கின்றன.

— ஏ.சி.எம். முஸம்மில், குளியாப்பிட்டி

விளையாட்டு செய்திகள் பகுதியில் கிரிக்கெட் சூதாட்டம் பற்றிய தகவல் சிறப்பாக இருந்தது.

— பி.ஏ.எஸ் ஜெயப்பிரதீபன், சிலாபம்

''சுடர் ஒளி'' தரும் அரசியல் செய்திகள் அசத்தல் தான். மிக வேகமாகவே மக்கள் மனங்களில் இடம் பிடித்து விடுகின்றன.

— ஜே. எம்.பாரீஸ், தெல்தெனிய

கல்யாணத்திற்கு ஜேர்மனி சென்ற பெண்ணுக்கு ஏற்பட்ட அதிர்ச்சி இனிமேல் கல்யாணத்துக்காக வெளிநாடு செல்லும் பெண்களுக்கு நல்ல முன்னெச்சரிக்கை.

— ஜெயந்தி. திருகோணமலை

பல தரப்பட்ட உள்ளங்களில் இருந்து பல்சுவை மிக்க ஆக்கங்களைத் திரட்டி சிறப்பாக சுடர் பரப்பும் திறமையைப் பாராட்டுகிறேன்.

— கவிப்பிரியன், தெல்தோட்ட

இராணுவபலத்தால் தமிழரின் எழுச்சியை அடக்க முடியாது. கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களின் பொங்கு தமிழ் நிகழ்வினை 'சுடர் ஒளி' தந்த விதம் சிறப்பு.

— எஸ். வேணசா, மாத்தறை

அட்டைப் படத்தில் சினிமா நடிகைகளுக்குப் பதிலாக அரசியல் பிரமுகர்களின் படங்களை வெளியிடும் உங்களைப் பாராட்டுகிறேன்.

— மிதுனா, சிலாபம்

சிந்தனைக்கு விருந்தாக ஆன்மீகம் 'சுடர் ஒளி'யில் வந்த விதம் சிறப்பு.

— அ. அச்சுதன், சேனையூர்

பல அற்புதமான விடயங்களை அம்பலப்படுத்தியிருக்கிறீர்கள் நன்றி.

— ரா. சேகர், கம்பளை

''அரசியல் அம்பலம்'' பகுதியில் ''கிசுகிசு'' விடயங்களைச் சிறப்பாகத் தருகிறீர்கள்.

—கே. தினேஸ், முருங்கன்

# வடக்கில் இருட்டில் திருட்டு! ஊரடங்கில் யாருக்கு இத் துணிவு?

யாழ்ப்பாணத்தில் படையினரால் இரவு நேர ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்படுகிறது. திருட்டுக் கும்பல்களின் பாதுகாப்பான நடமாட்டத்திற்கா இந்த ஊரடங்கு? இந்தக் கேள்வி இப்போது பொதுமக்கள் மத்தியில் எழத்தொடங்கியுள்ளது. அந்த அளவுக்குத் திருட்டுகள், கொள்ளைகள், வழிப்பறிகள், சூறையாடல்கள் தினமும் அதிகரித்து வருகின்றன.

இரவு 8.30 மணி முதல் அதிகாலை 5 மணிவரை ஊரடங்கு அமுல் செய்யப் படுகிறது. இந்த நேரத்தில் தான் திருடர்களின் ராஜாங்கம் தொடங்குகிறது. விடிய விடிய வீடுகளில் திருட்டுக்கள் நடக்கின்றன.

கிராமம் கிராமமாக திருட்டுக் கும்பல்கள் பெருகி சுதந்திரமாகவே திருட்டுகளில் ஈடுபட்டு வருகின்றன.

மக்கள் இடம் பெயர்ந்த பகுதிகளில் ஆள் இல்லாத வீடுகளில் கதவு நிலைகள் ஜன்னல் கண்ணாடி முதல் சுவாமிப் படங்கள் வரை அபகரிக்கப்படுவது அன்றாட நிகழ்ச்சி.

ஊரடங்கு சமயத்தில் ஊர் தூங்கும் நேரம் வீட்டுக் கூரைகள் பிரிக்கப்படுகின்றன. ஜன்னல் கதவுகள் உடைக்கப்படுகின்றன. அவற்றினூடாக உள்நுழைந்து பெறுமதியான பொருள்கள் சூறையாடப்படுகின்றன.

அவ்விதம் திருடப்படுபவை பெரும் பாலும் தங்க நகைகள் தான். இரண்டாவது வரிசையில் தொலைக்காட்சிப் பெட்டிகள், வீடியோ டெக்குகள், சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் இடம் பெறுகின்றன.

வீடுகளில் முன்னிரவு முழுவதும் தொலைக் காட்சிகளே ஆக்கிரமித்துக் கொள்கின்றன. நடுச்சாமம் வரை சினிமாப்படம் பார்ப்பதில் மூழ்குவோர் பின்னர் தூக்கத்தில் ஆழ்ந்ததும் கூரை ஓடுகள் பிரிக்கப்படுகின்றன.

சில இடங்களில் 'குளோரோபோம்' போன்ற மயக்கும் பதார்த்தங்களால் வீட்டார் அனைவருமே அறைக்குள் மயக்கத்தில் வீழ்த்தப்படுகிறார்கள். பின்னர் முழு வீடுமே சூறையாடப்படுகின்றது.

இராணுவ முகாம்கள், சென்றிகள் அமைந்திருக்கும் இடங்களின் அருகே உள்ள வீடுகளும் கடைகளும் கூட திருடர்களின் கைவரிசைக்குத் தப்பவில்லை.

திருடிய பொருள்களை எடுத்துக் கொண்டு திருடர்கள் நட்ட நடு நிசியில் வீதி வழியே சுதந்திரமாகப் – பாதுகாப்பாகத் தப்பிச் செல்ல முடிவது எப்படி?

இந்தக் கேள்வியே பலவித ஐயங்களை எழுப்புகிறது.

புத்தூரில் கடந்த வாரம் ஊரடங்குவேளை நடந்த சம்பவம் இது.

அயல் வீட்டில் படம் பார்த்துவிட்டு வீதி வழியே வீடு திரும்பிக் கொண்டிருந்தான் காது கேளாத 11 வயதுச் சிறுவன் ஒருவன். அவன் படையினரின் வேட்டுக்குப் பலியாக நேர்ந்துள்ளது.

ஊரடங்கு நேரம் அப்பாவிகளுக்கு எதிராகச் சடசடக்கும் சீருடையினரின் துப்பாக்கிகள் திருடர்களை மட்டும் கண்டும் காணாதது போல் விட்டு விடுவது ஏன்?

நியாயமான இந்தக் கேள்வியைப் பலரும் எழுப்புகின்றனர்.

ஒவ்வொருநாளும் விடிந்ததும் எங்காவது ஒரு வீட்டில் அல்லது கடையில் நடந்த திருட்டு தொடர்பான செய்தியே முதலில் ஊருக்குள் நுழைகிறது.

சில இடங்களில் பொதுமக்களால் நன்கு இனங்காணப்பட்ட கும்பல்களே தொடராகப் பல திருட்டுக்களில் ஈடுபட்டு வருகின்றன. பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்யப்பட்டதும் சிலர் கைதாகின்றனர். பிறகு எப்படியோ அவர்கள் வெளியில் வந்து மீண்டும் 'தொழிலைத் தொடர்கின்றனர்.

சட்டம் ஒழுங்கைப் பேண வேண்டிய பொலிஸாரின் நிலையோ பரிதாபத்துக்குரியது. குடா நாட்டில் ஒருசில இடங்களில் தான் பொலிஸ் நிலையங்கள் இயங்குகின்றன. அங்கெல்லலாம் கடமையில் ஈடுபடப் போதிய அளவு பொலிஸார் இல்லை. முழுக்க முழுக்கப் படையினரின் பாதுகாப்பையே பொலிஸார் நம்பியுள்ளனர்.

எனவே பொலிஸார் களத்தில் இறங்கி சுதந்திரமாகச் செயற்படத் தயங்குகிறார்களா?

கிராமப் புறங்களில் மக்கள் பீதியுடன் இரவைக் கழிக்கின்றனர். சில பகுதிகளில் திருட்டைத் தடுக்க விழிப்புக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன.

எனினும் பொதுமக்கள் ஒன்று கூடி திருடர்களைப் பிடிக்கவோ திருட்டைத் தடுக்கவோ ஊரடங்கு தடையாக இருக்கிறது. பக்கத்து வீட்டில் கூக்குரல் கேட்டாலும் எட்டிப் பார்க்கக் கூட அஞ்சும் நிலைமை இருக்கிறது.

ஊரடங்குச் சட்டத்தை நீக்கி மக்களைச் சுதந்திரமாக நடமாட அனுமதித்தால் ஒரு வேளை திருட்டுகளைத் தடுக்க முடியும். அதைவிடுத்து திருடர்களை மட்டும் வீதிகளில் சுதந்திரமாக நடமாட அனுமதித்து விட்டு மக்களை வீடுகளுக்குள் முடக்குவது சரியா? அத்தகைய ஊரடங்குச் சட்டம் எதற்காக, என்று கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

## காதலர் சரணாலயங்கள்

போரின் அழிவுகள், அனர்த்தங்கள், மனித அவலங்களுக்கு மத்தியிலும் காதல் வாழ்கிறது. வாழ்ந்து கொண்டே இருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் காதலர்களின் நிலை என்ன?

போரால் சிதைவுண்டு போன யாழ். நகர வீதிகளில் காதல் ஜோடிகளைத் தாராளமாய்க் காண முடிகிறது.

ஆட்கள் இடம் பெயர்ந்து சந்தடி குறைந்து போன தெருக்களும், குச்சொழுங்கைகளும் காதலர்களின் சரணாலயங்களாக இருக்கின்றன. நகரின் பெரும்




பகுதிகளில் இடிந்து போய்க் கிடக்கும் வீடுகள், கட்டடங்களின் எச்ச சொச்சங்கள் ஆகியன காதலர்கள் ஒதுங்கிக் கொள்ளும் மறைவிடங்களாகி விட்டன.

யாழ் நகரில் கோட்டை அருகே முனியப்பர் ஆலயச் சூழல் இப்போது மீண்டும் காதலர்களின் சந்திப்பு மையமாகி இருக்கிறது.

சுண்டுக்குளிப் பகுதியில் காட்டுக் கந்தோர் ஒழுங்கை உள்ளது. அண்மைக் காலத்தில் அது 'காதலர் ஒழுங்கை'யாக மாறி இருக்கிறது. அந்த ஒழுங்கை வழியே போக்குவரத்துச் செய்ய முடியாத அளவுக்கு காதல் ஜோடிகளின் தொல்லை அதிகரித்துள்ளதாக அங்கு வசிப்போர் முணுமுணுக்கின்றனர்.

"முதலில் சைக்கிள்களில் பக்கம் பக்கமாக நின்று கதைக்கிறார்கள். நேரம் ஆக ஆக நெருங்கி வந்து விடுகிறார்கள். அவர்களுக்கிடையே இடைவெளியே இல்லை எனக் கூறும் அளவுக்கு நிலைமை போய்க் கொண்டிருக்கிறது. இதனைத் தடுப்பார் இல்லையா?" என்று வெதும்பினார் அப்பகுதி வாசி ஒருவர்.

அந்தப் பகுதியில் கூடும் காதல் ஜோடிகளில் பலர் டியூசனுக்குப் போவதாக வீட்டில் கூறி விட்டுத் தினமும் நகரப் பகுதிக்கு வரும் மாணவமணிகள் ஆவர். அத்துடன் பிரபல பாடசாலைகளைச் சேர்ந்த காதல் ஜோடிகளும் அங்கேயே சந்திக்கின்றன.

அந்தப் பகுதியில் காதலர் தொல்லை அதிகரித்துள்ளதாக யாழ். பத்திரிகை ஒன்றில் செய்தி வெளியானது. அதன் பிறகு அப்பகுதியில் காதல் சிட்டுக்களைக் காண முடியவில்லை. மற்றொரு புகலிடத்தை நோக்கிப் பறந்திருக்கலாம்.

காதலர்களின் சந்திப்பால் புகழ் பெற்ற இதுபோன்ற பல குச்சொழுங்கைகளும், வீதிகளும் யாழ். நகரில் உள்ளன.

காதலர்கள் கட்டுப்பாட்டை மீறி நடந்து கொள்கிறார்கள். இளைய தலைமுறை சீரழிவுப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது. இவை மூத்தோரிடையே எழுந்துள்ள கவலைகள்.

யாழ்ப்பாணத்தில் பூங்காக்கள், பொழுதுபோக்கு இடங்கள் என்று எவையுமே இல்லை.

இளம் காதல் ஜோடிகள் வீதிகளை, மறைவிடங்களை நாடுவதற்கு இதுவும் ஒரு காரணம் என்று காதலர்கள் தரப்பில் கூறப்படுகிறது. இது காதலர் தினத்தை ஒட்டி கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய கோரிக்கையா?

## புதிய தொழில்

பொதுமக்கள் மீளக் குடியேறும் பகுதிகளில் கண்ணி வெடிகள் மற்றும் வெடிப் பொருள்களால் ஆபத்துகள் ஏற்பட்டிருக்கின்றன. இது குறித்து கடந்த வாரம் இப்பத்தியில் தகவல் வெளியாகி இருந்தது.

மிதி வெடிகள், வெடிக்காத ஷெல்கள், கிரனேட்டுக்கள் என்பன பொதுமக்களின் கைகளுக்கு இலகுவில் கிடைத்து விடும் நிலைமை பற்றியும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதனுடன் தொடர்புடைய மற்றொரு தகவல் இது.

பயன்படுத்தப்பட்ட ஷெல்கள் மற்றும் பல்குழல் ஏவுகணைகளின் எஞ்சிய பாகங்களுக்கு குடாநாட்டில் கிராக்கி ஏற்பட்டிருக்கிறது.

கடும் யுத்தம் நடைபெற்ற இடங்களில் ஷெல்கள், பீரங்கிக் குண்டுகளின் அடிப்பாகங்கள் பெரும் தொகையில் கைவிடப்பட்ட நிலையில் காணப் படுகின்றன. இராணுவத்தினர் தங்கள் தளங்களையும், தாம் முகாமிட்டிருந்த இடங்களையும் காலி செய்யும் போது இத்தகைய பொருள்களைக் கைவிட்டுச் செல்வது வழக்கம்.

செம்பு, பித்தளை மற்றும் கலப்பு உலோகங்களால் தயாரிக்கப்பட்ட வெடிப்பொருள் கவசங்களின், வெற்று ரவைகளின் பெறுமதி தற்போதுதான் பலருக்குத் தெரிய வந்திருக்கிறது. அவற்றைச் சேகரித்து நல்ல விலைக்கு விற்கும் வியாபாரம் சில இடங்களில் சூடு பிடித்திருப்பதாய் தகவல் வந்திருக்கிறது.

ஷெல்கள், பல்குழல் எறிகணைகளின் கவசங்கள், அவற்றின் பித்தளை மூடிகள் தங்கம் போல் பளபளத்து ஜொலிக்கின்றன.

தங்க நகை உட்பட பெறுமதியான உலோக வேலைகளுக்கு இவற்றைக் கலந்து பயன்படுத்த முடியும் என்பது தெரிய வந்திருக்கிறது. இதை அடுத்தே இத்தயை பொருள்களைச் சேகரிப்பதில் போட்டா போட்டி ஏற்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் யுத்த கலாசாரம் உருவாக்கி விட்டிருக்கும் வருமானம் தரும் புதிய தொழில் இது.

—வலிகாமத்தான்

## சிரிப்பு கைகண்ட மருந்து

அமெரிக்காவில் பால்டிமோரைச் சேர்ந்த ஆராய்ச்சியாளராக டாக்டர் மைக்கேல் மில்லர் இருக்கிறார்.

மாரடைப்பு அல்லது பைபாஸ் சேர்ஜரி செய்து கொண்ட 150 நோயாளிகளிடம் ஒரு கேள்விப் பட்டியலுடன் விரிவாகப் பேட்டி கண்டார்.

மாரடைப்பு இல்லாத பைபாஸ் சேர்ஜரி எதுவும் செய்து கொள்ளாத 150 பேரிடமும் கேள்விப் பட்டியலுடன் ஆய்வு செய்தார்.

20 கற்பனைச் சூழல்களில், எந்தெந்தச் சூழ்நிலைகளில் வாய் விட்டுச்சிரிப்பீர்கள் என்பது கேள்விகளின் பொதுவானவிஷயம்.

நோய்வாய்பட்டிருந்த பைபாஸ் சேர்ஜரி செய்து கொண்டவர்களில் பெரும்பாலானவர்கள், சிரிக்கும் சூழல்கள் மிகக் குறைவாகத் தென்படுவதாகத் தெரிவித்தனர்.

ஆனால், ஆரோக்கிய உடல், மனநிலை கொண்டவர்கள் கற்பனைச் சூழல்களில் பெரும்பாலானவை, அருமையான சிரிப்பிற்கு வழிவகுப்பவை என்று குறிப்பிட்டனர்.

சிரிப்பதற்கு வழி இருப்பதாகக் கூறியவர்கள், எளிதில் கோபப்படாதவர்களாக இருந்தார்கள்.

கோபமும், போர்க்குணமும், இரத்தக் குழாய்களைச் சுருக்குகின்றன என்று மில்லரும் அவரது ஆய்வாளர்களும் கண்டறிந்துள்ளனர்.

என்றாலும், அதிகம் சிரிக்காததால் தான் மாரடைப்பு, இரத்தக்கொதிப்பு போன்றவை ஏற்படுகின்றன என்று உறுதியாகக் கூற இன்னும் ஆய்வுகள் நடத்தப்பட வேண்டும் என்கிறார் மில்லர்.

வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும் என்பதை அறிவியலும் ஏற்றுக்கொள்கிறதுதான்.

"ஏன் அந்த டொக்டர் எப்ப பார்த்தாலும் வீட்டிலேயிருந்து ஆஸ்பத்திரிக்கு நடந்து போறாரு?"

"அவர் "கால்நடை" வைத்தியரல்லோ! அது தான்"






துப்பாக்கிச் சூடு இல்லை.
அடிதடி இல்லை.
குத்து வெட்டு இல்லை.
ஒரு சொட்டு இரத்தம் கூட உடலிலிருந்து வெளிவரவில்லை.
படிக்கட்டில் ஏறிய டாக்டர் லேவ் றேபேட்டின் தோளோடு படிக்கட்டில் இறங்கி வந்த ஒருவரின் தோள் இலேசாக உரசியது.
டாக்டர் தடாலென்று சரிந்து விழுந்து, பிணமாகக் கீழே உருண்டு வந்தார்.
வரலாற்றில் பதிவான திகிலூட்டும் கொலைகளில் இதுவும் ஒன்று. இது நடக்கக்கூடாது. எனினும். எப்படி நடந்தது என்று படித்துப்பாருங்களேன்.

# ஓபரேஷன் சக்ஸஸ்!

1957 ஆம் வருடம் அக்டோபர் 12ஆம் திகதி காலை 9.30 மணி.

ஜெர்மனியின் மூனிச் நகரம் பனிப் புகாரினால் மூழ்கிவிட்டிருக்கிறது.

மஞ்சள் கண்களால் முழுசிப் பார்ப்பது போல் மங்கலான வெளிச்சத்தைப் பாய்ச்சிக் கொண்டு வந்த மின்சார டிராம் வண்டியொன்றிலிருந்து மளமளவென சனம் இறங்கிக்கொண்டிருக்கிறது.

டாக்டர் லேவ் றேபேட்டும் வண்டியிலிருந்து இறங்கினார். ஹோட்டல் ஸ்டேச்சில் அவருடைய அலுவலகம் இருக்கிறது. அலுவலகந்தை நோக்கி அவருடைய பாதங்கள் வேகமாக நடக்கின்றன.

அந்த ஹோட்டலின் ஓர் அறையின் ஜன்னலினூடாக இரு விழிகள் டாக்டரின் மீது ஈட்டிகளாக நிலைகுத்தி நிற்கின்றன.

அவ்விழிகள் ஸ்ரஷின்ஸ்கி என்பவனுக்குச் சொந்தமானவை. மிகவும் நிதானமானவனாகத் தோன்றிய அந்த ஆசாமி டாக்டர் றேபேட் வேகமாக ஹோட்டலை நெருங்குவதைக் கண்டதும் சிறிது பதற்றமடைந்தான். இந்தப் பதற்றம் ஒருகணம்தான் நீடித்தது.

உடனே நிதானமடைந்த அவன் சிறு குழாய் போன்ற ஒன்றை மேசை டிராயரைத் திறந்து எடுத்துக்கொண்டான். பத்திரிகைத் தாளொன்றில் சரசரவென அதனைச் சுத்திக் கொண்டான். இரு வில்லைகளை சட்டென வாயில் போட்டு விழுங்கினான்.

இவ்வளவையும் மின்னல் வேகத்தில் முடித்துக்கொண்டதன் பின்னர் அறையிலிருந்து வெளியில் வந்த ஸ்ரஷின்ஸ்கி படிக்கட்டின் மேல் தளத்துக்கு வந்து நின்றபோது டாக்டர் றேபேட் படிக்கட்டில் ஏறத் தொடங்கியிருந்தார்.

ஸ்ரஷின்ஸ்கி கீழிறங்க, டாக்டர் மேலே ஏற இருவரும் ஒரு கட்டத்தில் ஒரே படிக்கட்டில் ஒருவரையொருவர் கடந்தார்கள்.

அந்தக் கணத்தில் -

இருவர் தோள்களும் உரசுகின்றன. ஸ்ரஷின்ஸ்கி தடுமாறுவதுபோல் லேசாகத் திரும்பினான். அவனுடைய பார்சல் அடங்கிய கை டாக்டரின் நாசிப் பக்கமாகச் சுழன்று கீழிறங்கியது.

'கிளிக்'!

ஒரு மெலிதான சத்தம்.

டாக்டர் தடுமாறுகிறார். ஆ! வென வாயைத் திறந்து சுவாசத்தை உள்வாங்க முயல்பவராக பிரயத்தனப்படுகிறார்.

'ஆ! ஆ! ஆ! ஜீசஸ்'

டாக்டரிடமிருந்து வேதனையின் முனங்கல் வெளிக்கிளம்ப படிக்கட்டின் பக்கச் சுவரை விரல்கள் பிராண்டிக்கொள்ள வழுகியவாறே கீழே உருண்டு நழுவுகின்றன.

'தடால்!'

டாக்டரின் உடல் படிக்கட்டில் மல்லாக்காக விழுகிறது.

ஸ்ரஷின்ஸ்கி டாக்டர் விழுந்ததை கவனிக்கவில்லை. அவ்வாறு பாசாங்கு செய்த அவன் வேகமாக வீதியை வந்தடைந்தான்.

வீதிக்கு அப்பால் கொஞ்சம் தொலைவில் நதியொன்று ஓடுகிறது. நதியின் பாலம் மீதாக வந்து நின்றுகொண்ட ஸ்ரஷின்ஸ்கி கையிலிருந்த சிறிய பார்சலை நதி நீரை நோக்கி எறிந்தான்.

'சளுக்'கென நீரினுள் அமிழ்கின்ற பார்சலுக்குள் இருந்த சிறிய குழாயைப் புன்னகையுடன் பார்க்கின்றான்.

சில நிமிடங்களுக்குப் பிறகு அவன் மறுபடியும் சம்பவம் இடம்பெற்ற இடத்துக்குத் திரும்பினான்.

டாக்டரின் சடலம் படிக்கட்டில் மல்லாக்காகக் கிடக்கிறது.

கொஞ்சப் பேர் அதனைச் சூழ்ந்து நின்று அங்கலாய்ப்புடன் சளசளவென பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

கூட்டத்தை விலக்கிக் கொண்டு தலையை உள்ளே நுழைத்த ஸ்ரஷின்ஸ்கி

'ஆ! ஐயோ என்ன நடந்தது? யார் இவர்? இப்போதுதானே இவரைக் கண்டேன்'' என பதைபதைப்புடன் கேட்டான்.

''இவர்தான் டாக்டர் லேவ் றேபேட், மேற்கு ஜெர்மனியின் உக்ரேனிய தேசியவாதத் தலைவர். மாரடைப்பால் இறந்துவிட்டார்.....''

கூட்டத்தில் மிகவும் சோகத்துடன் கன்னத்தில் கைவைத்துக்கொண்டிருந்த ஒரு வயோதிபர் தாளமுடியாத துக்கத்துடன் கூறினார்.

ஸ்ரஷின்ஸ்கி பச்சாதாபத்துடன் தலையை ஆட்டினான். ''ஐயோ என்னால் இதைத் தாங்கமுடியவில்லையே என்பது போல் நெஞ்சில் கைவைத்ததோடு சிலுவை அடையாளமும் இட்டுக்கொள்கிறான்.

***

சோவியத் ஒன்றியத்தின் உளவுத்துறை தலைமையகமான கே.ஜி.பி. யின் உயர் அதிகாரியின் அலுவலகம்.

''கிரீங்! கிரீங்! கிரீங்!''

தொலைபேசி அலறுகிறது.

''ஹலோ!''

''சேர்! ஜோசப் லேமன் பேசுகிறேன். ஓபரேஷன் சக்ஸஸ். டாக்டர் குளோஸ்!''

''வெல்டன்''

டெலிபோன் தொடர்பு அறுபடுகிறது.

***

சோவியத் அரசுக்கு எதிரானவர்களைக் கொன்றொழிப்பது கே.ஜீ.பியின் பொறுப்புக்களில் ஒன்று. இவை விசித்திரமான கொலைகள். வரிசையில் இடம்பெற்றுள்ளன என்பது வரலாறு.


எவராலும் கண்டுபிடிக்க முடியாத விதமாக மர்மமான முறையில் இவை நடத்தப்பட்டன. அனைத்தும் இயற்கையான மரணம் போல் தோன்றும்.

''நியாயமான வாதங்களை ஏற்கமறுத்தார்'' என்ற காரணத்துக்காக டாக்டர் லேவ் றேபேட்டை பரலோகம் அனுப்புவதற்காக கே.ஜீ.பி. திட்டமிட்டது.

இதற்கென புது மாதிரியானதொரு கொலைக்கருவி உருவானது. கையடக்கமானதொரு குழாய் போன்ற துப்பாக்கி இது குண்டுகளை உமிழாது. கிளிக் கென சைனைட் விஷத்தை விசிறி சுவாசத்துடன் உடலுக்குள் பரப்பி நாடி நாளங்களை சுருக்கமடையச் செய்து ஒரு சில வினாடிகளுக்குள் சுவாசிப்பவனைச் சடலமாக்கிவிடும்.

பின்னர் உடல் மறுபடியும் இயல்பு நிலைக்கு மாறிவிடும். பிரேத பரிசோதனையின் போது மாரடைப்பினால் மரணம் சம்பவித்ததாகவே மருத்துவ குறிப்புகள் தெரிவிக்கும்.

அப்பப்பா படு பயங்கரமான திட்டம். அதுசரி திட்டத்தைச் செயல்படுத்துவது யார்?. கே.ஜீ.பி அதிகாரி தனக்குத்தானே கேள்வியைப் போட்டு தலையைச் சொறிந்து கொண்டார்.



அட, இது என்ன பெரிய கஷ்டம். விசையை அழுத்தினால் விஷ வாயு பீச்சி யடிக்கும் அவ்வளவுதானே என்று கேட்கலாம்.

அதுதான் இல்லை. சில வேளை விஷம் பின்னால் பீச்சி அடித்து கொலைகாரனையே எமலோகம் அனுப்பிவிடும்.

'அடக் கடவுளே அப்படியா சமாச்சாரம்' என தனக்குத் தானே உளறிக் கொண்ட அதிகாரி அன்றட் பேசண்ட் சரியாக செயல் படக்கூடிய ஆசாமி ஒருவன் தேவையே என அலட்டிக் கொண்ட வேளையில் தான் அந்த பள்ளிக்கூட வாத்தியார் அகப்பட்டான்.

***

அவன் பெயர் ஜோசப் லேமான். டிக்கெட் இன்றி ரயில் பிரயாணம் செய்து கொண்டி ருந்தபோது ஆசாமி அகப்பட்டுக் கொண்டான். விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டபோது ஐயோ! என் தொழில் போய்விடுமே என லேமான் கண் கலங்கினான். அவனுடைய பெற்றோரும் சோவியத் எதிர்ப்பு இயக்கத்தில் ஈடுபட்டிருந்ததால் அவன் இரட்டிப்பு கதிகலங்கினான். ஆனால், ஸ்ரஷின்ஸ்கி கலக்கமடைந்தது போல் எதுவும் நடைபெறவில்லை. அவனை ஆச்சரியக் கடலில் மூழ்கடிக்கும் விதத்தில் சம்பவங்கள் நடந்தேறின.

'' இதோபார் நீ ஒரு கொலை செய்ய வேண்டும். அதற்காக உன் பெற்றோருக்கு மன்னிப்பும், உனக்கு சன்மானமும் சலுகைகளும் வழங்கப்படும்.....!

கே.ஜீ.பி அதிகாரி சொன்னார்.

'ஜீஸஸ்!'' என்று தலையில் அறைந்தவாறுவர ஸ்ரஷின்ஸ்கி இரண்டடிகள் பின் வாங்கினான்.

அவன் முகத்தையே வெறித்துப் பார்த்த அதிகாரி சகல விஷயங்களையும் விவரித்த போது அனைத்தையும் இமைகளை அசைக்காது செவிமடுத்த அவன்.

சில வேளை சைனைட் குழாய் விஷத்தை பின்னால் பீச்சியடிக்கும் என்கிறீர்களே என நடுக்கத்துடன் கேட்டான்.

கட கட வெனச் சிரித்த அதிகாரி பயப்படாதே. எல்லாவற்றையும் முன் எச்சரிக்கையுடன் செய் சந்தோஷம் என்று எல்லாவற்றையும் விவரித்தார்.

ஜோசப் லேமான் ஆக மாற்றப்பட்டான் ஸ்ரஷின்ஸ்கி. சகல பயிற்சி களும் நாட்கணக்கில் தொடர்ந்தன.

இறுதியில் அவனிடம் ஒரு நாய் ஒப்படைக்கப்பட்டது. ''பரீட்சித்துப் பார்'' என அதிகாரி அவனுக்கு கட்டளை இட்டான்.

நாய் மரமொன்றில் கட்டப் பட்டது. இரு பாதுகாப்பு வில்லை களை விழுங்கிக்கொண்ட ஸ்ரஷின்ஸ்கி 10 அடி தூரத்திலிருந்தே நாயை நெருங்கினான்.

சைனைட் குழாய் முகத்திற்கு நேராக நீண்டபோது மோப்பம் பிடிப்பதுபோல் நாசியை நடுங்கச் செய்த நாய் அவனுடைய கையை பாசமுடன் பர பரவென நக்கியது.

கிளிக்

விசை அமுக்கப்பட்டது. பாவம் நாய், சிறு முனகலோடு தடுமாறிப் பின்னர் சடலமாக விழுந்தது.

டாக்டர் லேவ் றேபேட்டும், ஸ்ரஷின்ஸ்கியும் ஒரே படிக்கட்டில் ஒருவரையொருவர் கடந்தபோது அவர்களுடைய தோள்கள் உரசிக் கொண்டன அல்லவா..... அந்தக் கணத்தில் டாக்டரின் நாசியின் மீதாக சைனைட் குழாயை கிளிக் செய்துவிட்டான் ஸ்ரஷின்ஸ்கி. டாக்டர் சடலமாக விழுந்து விட்டார்.

ஓபரேஷன் சக்ஸஸ் வெற்றிகரமாக நிறைவேறியது.

# தனிக் கொடியுடன் அரசியலில் குதிக்கிறாரா விஜயகாந்த்?

## — அவரே கூறுகிறார்



விஜயகாந்த் - ரம்யா கிருஷ்ணன்

நடிகர்களில் தனிப்பட்ட இடம் ஒரு சிலருக்கு மட்டுமே உண்டு. அந்த வரிசையில் ஒரு இடம் புரட்சிக் கலைஞருக்கு எப்போதும் உண்டு. காக்கிச் சட்டைக்குக் கௌரவம் தந்த கலைஞர் என்று இவரைச் சொல்லலாம்.

நடிப்போடு மட்டும் நின்று விடாது ஏழைப்பிள்ளைகளின் படிப்புச் செலவைக் கவனிப்பது, இலவச வேட்டி, சேலை வழங்குவது, இலவச திருமணங்களை நடத்தி வைப்பது போன்ற சமூக சேவைகளிலும் ஈடுபட்டு வருபவர்.

சாதி வெறியைக் கண்டிப்பது , அநீதிக்கு எதிராகப் போராடுவது போன்ற சமுதாய நலன்களைக் கருத்தில் கொண்ட படங்களைத் தந்து கொண்டிருப்பவர்.

'கள்ளழகர்' வந்த பின் சிறிய இடைவேளை ஒன்று ஏற்பட்டது. புதிய ஹீரோக்களின் வரவு மூத்த நடிகர்களைத் தடுமாற வைத்த நேரம் அது.

ஆனாலும் கப்டன் சமாளித்துக் கொண்டார். அடுத்து வந்த 'கண்ணுபட போகுதய்யா' ஓரளவு தூக்கி நிறுத்தியது.

தொடர்ந்து வெளியான 'வானத்தைப்போல' உச்ச வெற்றியைத் தந்து விஜயகாந்த் ரசிகர்களை உற்சாகப்படுத்தியது. தொடர்ந்து 'சிம்மாசனம்', 'வல்லரசு' என்று வெற்றிப்படங்களைத் தந்து கொண்டிருந்தவர் பொங்கல் பரிசாக 'வாஞ்சிநாதன்' ஐத் தந்திருக்கிறார்.

'வாஞ்சிநாதனைத் தந்த கையோடு சூட்டோடு சூடாகத் தானே தயாரித்து நடிக்கும் 'நரசிம்மா' படத்தைத் தொடங்கி விட்டார்.

நடிகர் சங்கத் தலைவராகவும் உள்ளவர். சமுதாய நலனில் அக்கறை கொண்ட, தமிழ் மண்ணைக் காக்கும் உணர்வு கொண்ட இவரின் அடுத்த படி எது? அரசியலா!

ரசிகர் மன்றக் கொடியையும் அறிவித்தது அரசியல் பிரவேசத்திற்கு ஆரம்பப்படி என்கின்றனரே? புரட்சிக் கலைஞர் என்ன சொல்கிறார் கேட்போமா?

'நரசிம்மா'வின் அன்றைய படப்பிடிப்பை முடித்து விட்டு பிரசாத் ஸ்டூடியோவிலிருந்து வீட்டிற்குச் செல்லத் தயாராகிக் கொண்டிருந்தார்.

மேக்கப் கலைக்காத முகம், மடித்துக் கட்டிய லுங்கி, அரைக்கை சட்டை, சிலிப்பிய தலை முடிசகிதம் காணப்பட்டார். அவரைக் கண்டதும் "ஓ!" இதுவும் நரசிம்ம அவதாரமோ! என்று கேட்டதற்கு, சிரித்தபடியே வரவேற்றார்.

"ஏதாவது புதிய செய்தி" என்றதும்

"வாஞ்சிநாதன்" பொங்கலுக்கு வெளியாகி யிருக்கிறது. ஆக்ஷன் படம். சில காட்சிகள் நியூசிலாந்தில் படமாக்கப்பட்டன. நானும் மனைவி குழந்தைகளுடன் சென்று வந்தேன்.

8 நாட்கள் பயணம். முதல் முறையாக மனைவி, குழந்தைகளுடன் சென்ற வெளிநாட்டுப் பயணம் என்பதால் மிகவும் இன்ரஸ்டிங்காக இருந்தது.

இங்கே (தமிழ் நாட்டில்) நான் என் மனைவி குழந்தைகளை அழைத்துக் கொண்டு எங்கும் சென்றதில்லை.

ஆனால் அங்கு (நியூசிலாந்தில்) சுதந்திரமாக ஷாப்பிங் செய்தோம். என்னை விடவும் மனைவி, குழந்தைகள் மிகவும் சந்தோஷப்பட்டார்கள்.

"அண்மைக்காலமாக அதிகளவில் சாதி சங்கங்களைப் பற்றிப் பேச ஆரம்பித்து விட்டீர்களே!"

"அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. முன்பெல்லாம் ஊருக்கொரு பிரச்சினை என்றால் அனைத்து சாதி மக்களும் ஒன்று கூடி விடுவார்கள்.

அன்றைய காலகட்டத்தில் அனைவரும் அண்ணன் தம்பிகளாக பழகினார்கள்.

ஆனால், இப்போது புற்றீசல் போல சாதிக்கட்சிகள் தோன்றி மக்களைப் பிரித்தாளுகின்றன."

"சரி இதில் உங்கள் கொள்கை என்ன?"

"கலப்புத் திருமணம் செய்கிறவர்களுக்கு அரசாங்க வேலையில் முன்னுரிமை கொடுத்தால் எதிர்வரும் சில தசாப்த காலத்திற்குள் சாதி மதமே இல்லாமல் போய்விடும்."

"உங்கள் மகன்கள் கலப்புத் திருமணம் செய்தால் உங்கள் நிலை என்ன?"

"நிச்சயமாக ஆதரிப்பேன். அதிலென்ன சந்தேகம். நானே கலப்புத் திருமணம் செய்யத்தான் முயறசித்தேன் ஆனால் கிடைக்கவில்லை."

"மனைவி பிரேமலதா பற்றி"

"உண்மையைச் சொல்வதானால் வீட்டுப் பொறுப்புகள் அனைத்தையும் அவளே தான் பார்த்துக் கொள்கிறாள். மகன்மார் எத்தனையாம் வகுப்புப் படிக்கிறார்கள் என்பதே எனக்குத் தெரியாது."

"நடிகர் சங்கத் தலைவர் என்ற ரீதியில் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?"

"எனக்குத் தரப்பட்ட பொறுப்பை சிறப்பாகச் செய்ய முயற்சிப்பேன் முதலில் கடனை அடைக்க வேண்டும்."

"நீங்கள் கதர் சட்டை - வேட்டி அணிவது எளிமையைக் காட்டுவதற்காக என்று ஒரு பிரிவினரும் அதற்குப் பின்னணி இருப்பதாக ஒரு பிரிவினரும் பேசிக் கொள்கிறார்களே?"

"கதர் மீது எப்போதுமே எனக்கு விருப்பம் உண்டு. என் அப்பா கதர் அணிவார். நான் சினிமாவில் நடிக்க வருவதற்கு முன்னர் மதுரையில் இருந்த போது கதர் ஜிப்பாவும் வேட்டியும் தான் உடுத்தி இருப்பேன்."

"ரசிகர் மன்றக் கொடி அமைத்தது அரசியல் பிரவேசத்துக்கு ஆரம்பப்படி என்று கூறுகிறார்களே"

"ஒரு சுய மரியாதைக்காகவே ரசிகர் மன்றக் கொடி கொடுத்தேன். தனிக் கொடி வேண்டும் என்று ரசிகர்கள் என்னை நீண்ட நாட்களாகக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். நான் இப்பொழுது அரசியலுக்கு வரமாட்டேன் அரசியலுக்கு வர பயப்படவும் மாட்டேன்."

" 'நரசிம்மா' மூலம் திடீரென்று தயாரிப்பாளர் ஆனது ஏன்?"

"அதற்குக் காரணம் அப்படம் மிகப் பெரிய பொருட் செலவில் உருவாக்கப்பட இருப்பது தான்.

அதிக பொருட்செலவு என்பதால் நானே தயாரிக்கிறேன். மற்றவர்களிடம் எனக்காகச் செலவு செய்யுங்கள் என்று கூறமுடியாதல்லவா?"

"நீங்கள் சினிமாவில் நடிப்பதோடு மட்டுமல்லாமல் இயன்றளவு உதவிகளையும் மற்றவர்களுக்குச் செய்து சமூக அக்கறை காட்டுகிறீர்கள். இந்த ஈடுபாடு எப்படி வந்தது?"

"நான் அடிப்படையில் எம்.ஜி.ஆர். ரசிகன். அவருடைய படங்களை ரசித்துப் பார்த்தவன்.

அவருடைய படங்களைப் பார்த்ததால் மட்டுமல்ல இயல்பிலேயே மற்றவர்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் எனக்கு உண்டு."

"அநீதிக்கு எதிராகப் போராடும் பாத்திரங்களில் நடித்து வருபவர் நீங்கள். நிஜ வாழ்க்கையில் இப்படிக் குரல் கொடுத்த சந்தர்ப்பங்கள் ஏதாவது இருக்கிறதா?"

"ஜாதி - மத - மொழி - வெறியை நான் இன்று நேற்று கண்டிக்கவில்லை. 1965இல் எதிர்ப்புப் போராட்டத்தைச் சந்தித்திருக்கிறேன். இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக உண்ணாவிரதமிருந்திருக்கிறேன்."

"ஊழல் செய்யும் அரசியல் வாதிகளை உங்கள் பாணியில் எப்படித் தண்டிக்கலாம்?"

"இதற்கு ஒரு விதத்தில் மக்களும் காரணம். ஊழல் செய்பவர்களுக்கு கடும் தண்டனை கொடுக்க வேண்டும் என்பது என் ஆசை."

ஷாம்

## புதிய படங்கள்

'சூரி'

கவர்ச்சிகரமான அழைப்பிதழுடன் வித்தியாசமான முறையில் நிஜ காதல் ஜோடிகளை மேடைக்கு அழைத்துப் பூஜை போட்டுத் தொடங்கப்பட்டுள்ள படம் 'சூரி'. காமாட்சி ஸ்டூடியோஸ் என்ற புதிய பட நிறுவனம் தயாரிக்கிறது.

வித்தியாசமான தோற்றத்தில் விக்னேஷ் தோன்ற, அவருடன் இணைபவர் மான்யா. (புதுமுகம்)

இவர்களுடன் வடிவேலு, ராஜுசுந்தரம், தாமு, வையாபுரி மற்றும் பலர் நடிக்கின்றனர். வசனங்களைத் தருபவர் பாலகுமாரன். ஒளிப்பதிவைக் கவனிப்பவர் எம். எஸ். பிரபு. பாடல்கள்: வைரமுத்து; இசை: தேவா, ஜி.கே. லோகநாதன் தயாரிக்கிறார், இயக்கம்: செல்வன்.

12 - பி

இது விற்றமின் பெயரல்ல புதிய படமொன்றின் தலைப்பு

கதாநாயகன் புதுமுகம், கதாநாயகிகளாக ஜோதிகாவும் சிம்ரனும் நடிக்கின்றனர்



மோப்ப நாய்களுடன் குற்றவாளிகளை வேட்டையாடப் புறப்பட்டுவிட்டார் 'வாஞ்சிநாதன்' விஜயகாந்த்



## கதாநாயகி வேடம்

ரஜினியுடன் 'பாட்சா' படத்தில் 'ரா ரா ராமையா' பாடலிற்கு நடனமாடியவர் அல்போன்ஸா.

தொடர்ந்து பல படங்களில் கவர்ச்சி நடன மாடி 'பருவமழை', 'பெப்ரவரி 14 லவ்வர்ஸ் டே' போன்ற படங்களில் கதாநாயகியாக நடித்தவர். விரைவில் தனது அக்காவின் கணவர் தயாரிக்கும் தெலுங்குப் படமொன்றில் கதாநாயகியாக நடிக்கப்போகிறார்.

காதல் தோல்வி யெல்லாவற்றையும் மூட்டை கட்டி வைத்து விட்டு தொழிலில் கவனம் செலுத்தப்போகிறாராம்.

அல்போன்ஸா



பெப்ஸி நிறுவனம் 'மாதவன் — அட் யுவர் ஹோம்' என்ற போட்டியை நடாத்தியது.

மாதவனைத் தங்கள் வீட்டிலேயே சந்திக்கும் வாய்ப்புக்காக எல்லோரும் பெப்ஸி மூடியைத் தட்ட, குலுக்கலில் வெற்றி பெற்ற அதிர்ஷ்டசாலிகள் வீடுகளுக்கு மாதவனே நேரில் சென்று கதவைத் தட்டியிருக்கிறார்.

## கொஞ்சும் மனைவியுடன் கொஞ்சம் ரிலாக்ஸ்!

கூடவே அவரது மனைவியும் சென்றிருக்கிறார். (ஓ! கொஞ்சும் மனைவியுடன் கொஞ்சம் ரிலாக்ஸா)

## இஞ்சேருங்கோ இதை வாசியுங்கோ

ஈழத்தமிழ் பேசி கமல் நடித்த நான் ஸ்டாப் நகைச்சுவைப் படம் தெனாலி. இது தெரிந்த விஷயம்.

ஆனால் தெரியாத விஷயங்கள் இவை.

கடந்த ஆண்டு வெளியான படங்களில் உலக ரீதியில் அதிக தியேட்டர்களில் ரிலீசான படம்.

184 பிரிண்டுகள் போடப்பட்ட தெனாலி படத்தை 176 தியேட்டர்களில் மக்கள் பார்த்துச் சிரித்துக் கொண்டிருக்கிறார்கள்.





தந்தை பாரதிராஜா கடல் பூக்களுக்கு வலை வீசிக்கொண்டிருக்க மகன் மனோஜோ ரிச்சாவுக்கு வலை வீசுகிறாராம்.

'அல்லி அர்ஜுனா' படத்தில் மனோஜும் — ரிச்சா பலேட்டும் நடித்துக் கொண்டிருக்கின்றனர். பெஃயார் — பிளஸ் விளம்பர மாடலை தேடிப்பிடித்து இந்தப் படத்தில் நடிக்க வைத்திருக்கின்றோம். மும்பை வரவு ரிச்சா என்று பிரமாண்டமாக விளம்பரப் படுத்தப்பட்டிருக்கின்றது.

இது இப்படியிருக்க, படப்பிடிப்பில் மனோஜ் ரிச்சாவுக்கு பெரிதும் உதவியாக இருக்கிறாராம்.

தமிழ் திரையுலகின் நெளிவு சுழிவுகளை அம்மணி கேட்டு இருக்கிறார். ஏதோ தன்னால் இயன்றவரை தகவல்களை தேடிப்பிடித்து வழங்கியிருக்கிறார் மனோஜ்.

இது வாரிசு வீசும் வலை என்று நெருங்கியவர்கள் கூறுகின்றனர்.

ரிச்சா பலேட்

## வாரிசு வீசும் வலை

## மும்பை அழகியின் முத்தாய்ப்பு

மும்பை அழகி அஞ்சலா ஜவேரி சமீபத்தில் தமிழில் நடித்து வெளிவந்த படம் 'உள்ளம் கொள்ளை போகுதே'. இதில் அவர் 'நடனப்புயல்' பிரபு தேவாவுடன் நடித்திருந்தார்.

'காதலன்' படம் தந்த காதலன் அல்லவா? அஞ்சலாவைக் காதலிக்கும் காட்சிகளில் அசத்தி விட்டாராம்.

"உண்மையிலேயே அவர் காதலன் தான். காதல் காட்சிகளில் எப்படி உருக்கமாக நடித்தார் தெரியுமா? 'டூயட்' பாடும் போது நடனக் காட்சிகளில் ரப்பர் மாதிரி உடம்பை வளைத்து ஆடுகிறார்.

யப்பா.....! மைக்கல் ஜாக்சனுக்கு அடுத்த இடம் நிச்சயம் இவருக்குத்தான்" என்று முத்தாய்ப்பு வைத்திருக்கிறார் மும்பை அழகி.

(அண்ணர் ஏற்கனவே குரூப் டான்ஸரிடம் உள்ளத்தைப் பறிகொடுத்து ரகசியமாக குடும்பமும் நடத்தி வாரிசையும் பெற்றுக் கொண்டவர். அம்மணியின் உள்ளம் கொள்ளை போகாமல் இருந்தால் சரி.



பிரபுதேவா — அஞ்சலா ஜவேரி



இளைய தளபதிக்கு குஷியோ குஷி. மகன் பிறந்த கையோடு ப்ரியமான படமும் நன்றாக ஓடி இரட்டிப்பு சந்தோஷத்தைக் கொடுத்தது.

பொங்கலுக்கு வெளியான 'நட்புக்குரிய படமும் வஞ்சனை செய்யவில்லை.

ரம்பா

ஆதலால், நடிகர் குஷியாக இருக்கிறார். புதிதாக கதை சொல்ல வருபவர்களிடம் பிறமொழியில் வெற்றி பெற்ற கதையாக இருந்தால் சொல்லுங்கள் ரீமேக் செய்திடலாம் என்று ஆர்வமாக கூறிவருகிறாராம். குத்துச் சண்டை போட்டு வரும் புதிய படத்தில் 'பூமி' நடிகையுடன் 'குஷி'யாக காதலித்து வருகிறார்.

**

நான் ஒரு வெள்ளைப் பேப்பர் மாதிரி. யார் வேணுமானாலும் எதை வேணுமானாலும் எழுதிக் கொள்ளலாம். இப்படிச் சொல்லியிருக்கிறார் யௌவனத்தைப் பெயரில் கொண்ட நடிகை. படம் முழுவதும் நடிப்பதை விட ஒரு பாடலில் ஆடி விட்டுப் போவது சுலபம் என்று ஸ்டேட்மெண்ட் விடுத்திருக்கிறார். அதனால் தானோ என்னமோ தயாரிப்பாளர்களும் அம்மணியை ஒரு பாடலுக்கு ஆடவிட்டுப் பார்க்கின்றனர்.

வெற்றிகாந்தின் நரசிம்ம அவதார படத்திலும் யௌவனம் ஒரு பாடலுக்கு ஆடுகிறார். ஆனால் ஒரு வேடிக்கை. இப்படத்திற்கு இன்னும் கதாநாயகி தேர்வாகவில்லை.

**

நடிப்பில் சென்சரி அடித்த 'ரோஸ்' நடிகை வாய்ப்புக்களைப் பிடிப்பதற்காக சம்பளத்தை எக்கச்சக்கமாகக் குறைத்துக் கொண்டுள்ளார். கேட்டால், நோ! நோ! என் சம்பளம் எதுவோ அது இன்றைக்கும் குறையவில்லை. நல்லகதை, நல்ல கதாபாத்திரம் என்றால் நானே குறைத்துக் கொள்கிறேன் என்று கூறியிருக்கிறார். ரோஸின் கப்ஸாவைப் புரிந்து கொண்ட சிலர் அம்மணிக்கு முன்னாலேயே எதுகை மோனையுடன் தெரியப்படுத்தினாலும் ரோஸ் கண்டு கொள்வதில்லையாம்.

**

தனது தொடையை இன்ஸ்யூரன்ஸ் செய்த மாறுகண் நடிகை அம்மா வேடத்தில் நடித்து வருகிறார் அல்லவா? வரும் புதுப்படங்கள் அம்மா வேடங்களாகவே இருக்கிறதாம். அதனால் கடுப்பாகிப்போன நடிகை கதை சொல்ல வந்த ஒருவரிடம் வாயில் வந்ததைப் பேசி அனுப்பி வைத்திருக்கிறார்.



விஜய்



சென்ற ஆண்டு தமிழ்த் திரையுலகில் கிட்டத்தட்ட 70 டப்பிங் படங்களும் 60 நேரடித் தமிழ்ப் படங்களும் வெளிவந்திருக்கின்றன.

நடிகர்களைப் பொறுத்தவரை ஏ.கே.47 ஆனாலும் சரி சிலம்பமானாலும் சரி என்ற முடிவுக்கு வந்து விட்டார்கள்.

இதற்கிடையில் தொழிலாளர் ஸ்டிரைக் வேறு. ஆனால் இதில் எதனையும் பற்றி கவலைப்படாது இருப்பவர்கள் கதாநாயகிகள் மாத்திரமே. அவர்களின் பாலிஸிப் படி "காஸ்டியும் குறையுது, கல்லா நிறையுது"

என்பதே அவர்களது தாரக மந்திரம். நடிகை மீனாவும் இதற்கு பின்னிற்கவில்லை. கவர்ச்சிப்போட்டிக்குத்தயாராகி விட்டார்.

மீனா

## காஸ்டியும் குறையுது கல்லா நிறையுது!

# வண்டியும் ஓடமும்!

**கா**லை வெயிலின் அகோரத்தினால் வியர்த்தது சஹானாவுக்கு. பல கெடுபிடிகளுக்கு மத்தியில் பஸ் பிடித்து அந்தக் கம்பனி வாசலை வந்தடைந்தவளுக்கு அங்கு இருந்த கூட்டத்தைப் பார்த்ததும் மனம் திக் திக் என்று அடித்துக் கொண்டது. "இந்த வேலையாவது எனக்குக் கிடைக்க வேண்டும்" என மனதுக்குள் துதித்துக் கொண்டு வரிசையில் அமர்ந்தாள்.

சில வருடங்களுக்கு முன் அவள் கணவன் பைரூஸ் அவளை விட்டுப்பிரிந்த நாளிலிருந்து தன் இரு பிள்ளைகளுடன் பிறந்த வீட்டில் குடியேறிய சஹானா அன்று முதல் பல கம்பனிகளுக்கு வேலைக்கென சென்றும் எங்குமே அவளுக்கு வேலை கிடைக்கவில்லை.

"இந்த வேலை மட்டும் எனக்குக் கிடைக்க வில்லை என்றால்" தனது நிலைமையை அவளால் நினைத்துப் பார்க்கவே பயமாக இருந்தது.

"சஹானா யாரும்மா? உள்ளே போங்க" என பியூன் அழைக்க தன்னை சுதாகரித்துக் கொண்டு வேகமாக உள்ளே சென்றாள். மனேஜரைப் பார்த்து "குட் மோர்னிங்" சொல்ல வாயெடுத்த அவளுக்கு வார்த்தைகள் வரவில்லை. "இவரா இவரா மனேஜர்? என்று அதிர்ச்சியில் நின்று விட்டாள்.

அதிர்ச்சி சஹானாவுக்கு மட்டுமா? மனேஜருக்கும் தான் எவ்வளவு பெரிய அதிர்ச்சி.

பிளீஸ் சிட்டவுன்."ஓ! சஹானா நீயா? ஐயாம் சொரி நீங்களா? என்று இயந்திரமாய்ச் சொன்னான் மனேஜர் ஹமீத். பொம்மை போல எதிரே உட்கார்ந்தாள். மௌனத்தில் மணித்துளிகள் கரைந்ததுடன் ஹமீதின் நினைவுகள் பல வருடங்கள் பின்னோக்கிச் சென்றன.

"இதோ என் முன்னால் உட்கார்ந்து இருக்கும் சஹானா பத்து வருடங்களுக்கு முன் எப்படி இருந்தாள்? அவள் நடையழகை நாள் எல்லாம் பார்த்துக் கொண்டிருந்தவன்" என்று அவன் நினைவுகள் ரீங்காரம் இசைத்தன.

சஹானா வீட்டிற்கு எதிர் வீட்டு மாடியில் வாடகைக்குக் குடியிருந்து கொண்டு ஜி.சி.ஈ உயர் தரம் கற்றுக் கொண்டிருந்தான். கிராமம் விட்டு நகருக்கு வந்து பல இன்னல்களுக்கு மத்தியில் படிப்பைத் தொடர்ந்தான் அவன். வசதியின்மை அவனை உருக்கினாலும் வாலிபம் அவனை உலுக்கியது.

கல்லூரிக்குப் போகும் போதும் நேருக்கு நேர் காணும் போதும் சஹானா மகாராணியாகத் தெரிந்தாள் ஹமீதுக்கு. ஆரம்பத்தில் பயந்து ஒதுங்கிய அவள் பின் அமைதியாகப் புன்னகை பூத்தாள். நெருங்கி வந்து சிரித்தாள். பேச்சுக் கொடுத்தாள். ஹமீத் சிறகில்லாமல் பறந்தான்.

ஒரு நாள் அவளுடன் எதிர்காலம் பற்றி ஆனந்தக் கனவு கண்ட பின் அறைக்குத் திரும்பிய ஹமீதுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. அவன் உடைமைகளை வெளியில் வீசியிருந்தார் வீட்டுக்காரர். அவர் பக்கத்தில் சஹானாவின் வாப்பா கோபமாக நிற்பது தெரிந்தது. ஒரு நொடியில் விஷயம் புரிந்து விட்டது.

"ஏண்டா போனாப் போறதுன்னு இருக்க இடம் கொடுத்தா வந்த இடத்தில் காதலா? இந்த நிமிஷம் முதல் இங்கு இடமில்லை இடத்தைக் காலி பண்ணு" வீட்டுக்காரர் குதித்தார்.

"சார் வந்து" அதற்கு மேல் அவனைப் பேச விடவில்லை சஹானாவின் வாப்பா. ஏக வசனத்தில் திட்டத்தொடங்கி விட்டார்.

"சார் உண்மை என்னன்னு புரியாம பேசாதீங்க வேறு மாதிரி ஆளில்லை நான். உங்கள் மகளை நான் மனப்பூர்வமா காதலிக்கிறேன். நிக்காஹ் பண்ணிக்கவும் தயாராக இருக்கிறேன்" என்றான் ஹமீத்.

"கண்ட கபோதிக்கெல்லாம் கட்டி வைக்க என் பொண்ணு கடைச்சரக்கு இல்லடா".

"என்னைக் கட்டிக்க விருப்பமில்லன்னா உங்க பொண்ணே ஒரு வார்த்தை சொல்லட்டும். அடுத்த நிமிடமே நான் இங்கிருந்து போயிடுறேன். திரும்ப அவளை நினைக்க மாட்டேன்" உறுதியாகச் சொன்னான் ஹமீத்.

மகளை அழைத்தார் அவர் "இவன் என்னவோ கேக்கிறானே பதில் சொல்லுடி" உறுமினார்.

நடுங்கியபடி தனது வாப்பாவையும் ஹமீத்தையும் மாறி மாறிப் பார்த்தாள். சஹானா சொல்லப் போகும் அந்த ஒரு வார்த்தைக்காக ஆவலுடன் காத்திருந்தான்.

**சுடர் ஒளி சிறுகதை**

"எங்க வாப்பா யாரைக் கட்டிக்கச் சொல்றாரோ அவரைத் தான் கட்டிக்குவேன் நான் யாரையும் லவ் பண்ணல".

-இந்த வார்த்தைகளைக் கேட்டதும் வானமே இடிந்து தலையில் விழுவது போல் இருந்தது ஹமீதுக்கு.

அதே சஹானா இப்போது அவன் தயவை எதிர்பார்க்கும் நிலையில் அவன் எதிரே! அவனையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். எந்தக் கேள்வியும் கேட்கப் பிடிக்கவில்லை அவனுக்கு. இயந்திரமாய் அவள் 'பைலை' பார்த்தான்.

பின்னர் 'யூ கென் கோ' என்றான் சுரத்தில்லாமல். மனவேதனையை மறைக்க பெரும்பாடு பட்டான்.

"ஹமீத் நான் வந்து" என்று எதையோ சொல்ல அவள் வாயெடுத்தாள்.

"நோ இது ஆபீஸ். இங்கு சொந்த விடயங்கள் பேச அனுமதியில்லை. நீங்கள் போகலாம்" பல்லைக் கடித்துக் கொண்டு பதில் சொன்னான். தயங்கியபடியே எழுந்தவள் மெதுவாக வெளியேறினாள். தனது பைலைக் கூட அவள் எடுத்துக் கொள்ளவில்லை.

சஹானா வந்து போன பிறகு யார் வந்தார்கள் - போனார்கள் என்பது அவன் நினைவில் இல்லை. இயந்திரம் போல் இயங்கினான். வந்தவர்களிடம் ஒப்புக்கு இரண்டொரு கேள்விகள் கேட்டு விரைவாக அனுப்பி வைத்தான்.

மேசையில் இருந்த சஹானாவின் பைல் காற்றில் படபடத்தது. அவன் முன் அவள் நிழலாய் சிரித்தாள். அந்தப் பைலை எடுத்துப் புரட்டினான். அதில் கடிதம் ஒன்று இருந்தது. அதனை மேலோட்டமாகப் படித்த ஹமீத் அதிர்ச்சி அடைந்தான்.

"சஹானா கணவனால் கைவிடப்பட்டவளா?" கடிதம் முழுவதும் படித்தான். ஐயோ என்ன கொடுமை! தனது சோகக் கதையைச் சொல்லி வேலை தரும்படி வேண்டியிருந்தாள் அவள்.

இப்போது அவளுக்கு வாழ்வு கொடுப்பது அவன் கையில் இருந்தது. " ஓடமும் ஒரு நாள் வண்டியில் ஏறும். வண்டியும் ஒரு நாள் ஓடத்தில் ஏறும்"

சஹானாவுக்கு வேலை கொடுப்பதற்குத் தீர்மானித்தான். அதற்கான உத்தரவுடன் ஒரு மடலையும் எழுதி தபாலில் சேர்த்து விடுமாறு "கிளார்க்" கிடம் கொடுத்தான்.


சஹானாவுக்கு அந்த மடல் கிடைத்த போது அவளுக்கு ஒரு அதிர்ச்சி காத்திருந்தது.

ஜனாபா சஹானா அவர்களுக்கு உங்களை இன்டர்வியூவில் பார்த்ததும் பழிவாங்க வேண்டும் எனத் துடித்தேன். ஆனால் உரிய தகுதிகள் அனைத்தும் உங்களுக்கு இருக்கின்றன. இதில் சொந்த விருப்பு வெறுப்புக்கு இடமில்லை என்ற முடிவுக்கு வந்தேன் ஆயினும் நாம் இருவரும் சேர்ந்து ஒரே இடத்தில் பணி புரிவது சிரமமே. ஏனெனில் மனேஜருக்கு அந்தரங்க காரியதரிசியாக இருப்பது தான் உங்கள் வேலை. என்னைப் பொறுத்தமட்டில் எங்களுக்குள் இனி அந்தரங்கத்துக்கு இடமில்லை.

தீர யோசித்ததில் என்னால் இரண்டு முடிவுக்குத் தான் வர முடிந்தது. ஒன்று உங்களுக்கு வேலை தருவது. மற்றொன்று நான் என் வேலையை ரிசைன் பண்ணி விடுவது! என் திறமை - அனுபவங்களினால் என்னால் வேறு இடங்களில் வேலை தேடிக் கொள்ள முடியும். எனவே தயங்காமல் வந்து வேலையில் சேரவும். -இவ்வாறு கடிதம் எழுதியிருந்தான் ஹமீத்.

கடிதத்தைப் படித்த சஹானாவுக்கு கண்களில் நீர் பெருக்கெடுத்தது. "ஏம்மா அழுறே" என்று வாப்பா கேட்டதற்கு என்ன பதில் சொல்வது? உண்மையில் ஹமீதின் பெருந் தன்மையை நினைத்து அவள் இன்னும் அழுகிறாள் என்பது அவருக்கு எப்படித் தெரியும்?

- ஜே.எம்.பாரீஸ்.



# எச்.ஐ.வி. வைரஸின் குணாதிசயத்தை இந்திய டாக்டர் கண்டுபிடித்தார்

## எயிட்ஸ் நோயிலிருந்து விடுபட வழி பிறக்கலாம்

கடந்த 20 ஆண்டுகளாக உலகை மிரட்டும் எயிட்ஸ் நோய்க்கு அழிவு வராதா என்ற கேள்விக்கு முதற்கட்ட விடை கிடைத்திருக்கின்றது.

எயிட்ஸ் கிருமி தாக்கியவர்கள் காலப் போக்கில் எயிட்ஸ் என்னும் ஆட்கொல்லி நோயை முற்றிவிடாமல் தடுக்க புதிய ஆய்வு வெற்றிகரமாக நடந்திருக்கின்றது.

இந்த ஆய்வை அமெரிக்காவில் உள்ள "ஒகியோ" மாநிலத்தில் வசிக்கும் இந்திய மருத்துவ விஞ்ஞானி "குனால் ஷா" வெற்றிகரமாகச் செய்து சாதனை படைத்திருக்கிறார்.

இந்திய விஞ்ஞானி "குனால் ஷா" தமது கண்டுபிடிப்புத் தொடர்பாக விளக்கம் தந்திருக்கிறார்.

எயிட்ஸ் நோய் "அக்குயர்டு இம்யூனோ டிபிசியன்சி சின்ட்ரோம்" என்று அழைக்கப் படுகின்றது. இது நமது உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியை அழித்து உருக்குலைந்து சாக வைக்கும் பயங்கர நோய்.

மனித குலத்திற்குப் பெரும் அபாயமாக உள்ள எயிட்ஸ் நோய்க்கு மருந்து அல்லது தடுப்பூசி எதையாவது கண்டு பிடிக்க முடியுமா என்று பெரிய அளவில் மருத்துவ ஆய்வுகள் நடைபெறுகின்றன.

இந்த நிலையில் எயிட்ஸ் நோயின் அடிப்படை என்ன? அதனை எப்படித் தடுப்பது என்று குனால் ஷா கண்டுபிடித்திருப்பது மருத்துவ வரலாற்றில் புதிய திருப்பமாகும்.

இதுவரை நடந்த ஆய்வுகளின் போது முடிவு எதுவும் கிடைக்கவில்லை. ஆனால் முதற் தடவையாக எச். ஐ.வி. வைரஸின் குணாதிசயம் என்ன? எப்படிப்பரவுகிறது என்று குனால் ஷா கண்டுபிடித்திருக்கிறார்.

எச்.ஐ.வி. வைரஸ் நமது உடலில் நோய் எதிர்ப்பு செல்களில் உட்கார்கிறது. எந்தச் செல்லில் நுழைந்தாலும் அதனைக் கொல்வது இதன் அபாரசக்தியாகும்.

ஆனால் உடலில் உள்ள நோய் எதிர்ப்பு சக்தி அணுக்கள் எந்த வைரஸையும் எதிர்த்துப் போரிடும் சுபாவம் கொண்டவை. அதனால் எயிட்ஸ் தாக்கிய போதும் ஒரு சில ஆண்டுகள் கழித்துத்தான் அதன் பரிமாணம் தெரிகிறது.

அப்படி உடலைப் பாதுகாக்கும் "சிடி 8 பாசிட்டிங்" செல்கள்தான் முக்கியமானவை. இந்தச் செல்களை அது அழிக்கிறது என்பதற்கான ஆதாரங்களைத் தற்போது கண்டு பிடித்திருக்கிறார் குனால் ஷா.

விஞ்ஞானி குனால் ஷாவும் அவர் குழுவினரும் நடத்திய ஆய்வின் மூலம் நோய் எதிர்ப்பு சக்தி செல்லை அழிக்காமல் இருக்க வழி காண முடியும். அதாவது எச்.ஐ.வி. கிருமி பாதித்த ஒருவர் நோய் முற்றித் தவிக்கும் முன் அதனைத் தடுக்க இனி அடுத்த கட்ட ஆய்வுகள் உதவும்.

தனது கண்டுபிடிப்புப் பற்றி டாக்டர் குனால் ஷா விளக்கினார்.

80 ஆண்டுகளாக நோய் எதிர்ப்பு சக்தியைத் தரும் "சிடி 8 பாசிடிவ்" செல்கள் தன்னிடம் எச்.ஐ.வி. மரபணுக் கூறினைக் கொண்டிருந்ததால் பாதிக்கிறது என்று கருதப்பட்டது.

ஆனால் இப்போது இந்த ஆய்வின் மூலம் எது இந்தச் செல்லைத் தாக்கி நோயை உண்டாக்கிறது என்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது என்று அவர் கூறினார்.

– பிரதீபா

# சுறாமீன் உணவினால் கர்ப்பிணிகளுக்கு ஆபத்து

**க**ர்ப்பிணிப் பெண்கள் சுறா மீன் சாப்பிட்டால் அவர்களுக்குப் பால் அதிகம் சுரக்கும். அதன் மூலம் அவர்கள் பெற்றெடுக்கும் குழந்தைகள் ஆயுள் நலம் பெறுவார்கள். சுகதேசிகளாக வாழ்வார்கள் என்ற நம்பிக்கை இலங்கையில் இருக்கிறது.

ஆனால் கர்ப்பிணிப் பெண்கள் சுறா மீன் சாப்பிடுவது ஆபத்து என்று அமெரிக்காவில் அச்சம் தெரிவிக்கப்படுகிறது. கர்ப்பிணிப் பெண்கள் சுறா மீனை மற்றும் ஸ்வோர்ட்பிஷ், டைல் பிஷ் ஆகிய மீன் இனங்களை சாப்பிடக்கூடாது என்று அமெரிக்க உணவு மற்றும் மருந்து கட்டுப்பாட்டுத்துறை டாக்டர்கள் தெரிவித்து உள்ளனர்.

இந்த மீன்களில் அடங்கி உள்ள பாதரசம் வயிற்றில் உள்ள கருவின் நரம்பு மண்டலத்தைப் பாதிக்கக்கூடும். குழந்தைகளுக்குப் பாலூட்டும் தாய்மார்கள், கருத்தரிக்கக்கூடிய பெண்கள் ஆகியோரும் இத்தகைய மீன்களைத் தவிர்க்க வேண்டும்.

தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் மாசுக்களில் உள்ள பாதரசம் இந்த வகை மீன்களின் உடலில் செல்கிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

சூழல் அனர்த்தங்கள் காரணமாகவே சுறா மீன்கள் வேண்டத்தகாதவை ஆகியிருக்கின்றன.

# இங்கிலாந்தை வெல்லுமா இலங்கை?

இலங்கை, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான டெஸ்ட் கிரிக்கெட் தொடர் எதிர்வரும் 22ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

வழமையான போட்டிகளை விட சற்றே ஆரவாரமாக இப்போட்டிகள் எதிர்நோக்கப்படுகின்றன.

முதன்முறையாக 3 போட்டிகள் கொண்ட தொடரில் இலங்கை இங்கிலாந்து அணியுடன் மோதுகின்றமை, தம்புள்ளயில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் அமைக்கப்பட்டு முதன் முறையாகப் போட்டி நடத்தப்படவுள்ளமை, பெருந்திரளான வெளிநாட்டுப் பார்வையாளர்களின் வருகை ஆகியவற்றின் காரணமாக இப்போட்டிகள் ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகின்றன.

அத்துடன் எந்த அணி வெற்றி பெறும் என்று உறுதியாகக் கூறமுடியாத நிலையில் தற்போதைய நிலைவரம் இருக்கின்றது.

தொடர்ச்சியாக ஸிம்பாப்வே, மேற்கிந்தியத் தீவுகள், பாகிஸ்தான் அணிகளுடனான டெஸ்ட் தொடர்களில் வெற்றிபெற்ற களிப்புடன் இங்கிலாந்து அணி இலங்கை வந்துள்ளது.

அத்துடன் அனுபவமிக்க துடுப்பாட்ட வீரர்கள், வேகப்பந்து வீச்சாளர்களுடன் இலங்கைக்கு ஏற்றவாறு சுழற்பந்து வீச்சாளர்களையும் கொண்டதாக இங்கிலாந்து அணி விளங்குகிறது.

ஆனால், இலங்கையின் காலநிலை, சுழற் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன், அவருக்கே வாய்ப்பான ஆடுகளங்கள் என்பனவற்றையிட்டு இங்கிலாந்து அச்சமடைந்துள்ளது.

இவ்விரு அணிகளுக்கிடையில் இறுதியாக நடைபெற்ற இரண்டு போட்டிகளிலும் இலங்கை அணியே வெற்றி பெற்றுள்ளது.


சனத் ஜயசூரிய

ஆனால் தற்போது இலங்கை சாதிக்குமா என்பது கேள்விக்குரியதே. அண்மையில் ஒருநாள் போட்டிகள் பலவற்றில் இலங்கை அணி வெற்றி பெற்றது.

ஆனாலும் டெஸ்ட் போட்டிகளில் கடந்த வருடம் இலங்கையில் நடைபெற்ற பாகிஸ்தானுடனான தொடரில் 2-0 விகிதத்தில் தோல்வியுற்றது இலங்கை. அத்துடன் தென்னாபிரிக்காவுடனான தொடர் 1-1 என்ற விகிதத்தில் சமநிலையிலேயே முடிவுற்றது.

அதையடுத்து தென்னாபிரிக்காவில் நடைபெற்ற போட்டிகளில் 2-0 விகிதத்தில் தோல்வியுற்றது.

ஆக இறுதியாக விளையாடிய மூன்று டெஸ்ட் தொடர்களிலும் இலங்கை வெற்றி பெறவில்லை. அத்தோடு இலங்கையின் துரும்புச் சீட்டான முத்தையா முரளிதரன் காயங்களுக்குள்ளானால் இலங்கை அணியின் நிலை திண்டாட்டமாகிவிடும். தென்னாபிரிக்காவிலும் நியூஸிலாந்திலும் இரு தடவை காயத்திற்குள்ளானார் முரளி.

காலியில் நடைபெறும் முதலாவது டெஸ்ட்டில் முரளி பங்குபற்றுவது நிச்சயமில்லாத நிலையிலுள்ளது. அதேவேளை முரளிக்கு மாற்றாக விளங்கத் தக்க சுழற்பந்து வீச்சாளர்களும் இலங்கை அணியில் இல்லை.

தவிரவும் தொடர்ச்சியாக இரண்டரை மாதகாலமாக போட்டிகளில் பங்குபற்றிவிட்டுக் கடந்த 15ஆம் திகதியே இலங்கை அணி நாடு திரும்பியது. ஒருவார இடைவெளியின்பின் மேலும் ஒன்றரை மாதகாலம் இங்கிலாந்துடன் மோதவேண்டியுள்ளது. இது இலங்கை அணிக்குக் களைப்பூட்டக் கூடும்.

டெஸ்ட்போட்டிகள் ஆரம்பமாவதற்கு 3வாரங்களுக்கு முன்பே இலங்கை வந்துள்ளது இங்கிலாந்து அணி. இதனால் இலங்கையின் காலநிலைக்கு ஒத்துப்போகவும் அவ்வணிக்குப் போதிய அவகாசம் உள்ளது.

முழுமையான டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்கு இலங்கைக்குத் தகுதியில்லையென அண்மைக் காலம் வரை இங்கிலாந்து கருதி வந்தது. ஆனால் 1998இல் இங்கிலாந்து மண்ணிலேயே சாதனையுடனான வெற்றிகளை இலங்கை பெற்றது.

அதன்பின் தமக்கு ஒற்றைப் போட்டித் தொடர்கள் மட்டுமே வழங்கியதற்கு 'இங்கிலாந்தின் தோல்விப் பயமே காரணம்' என இலங்கையால் கிண்டலடிக்கப்பட்டது.


நஸார் ஹூஸைன்

இப்போது மூன்று போட்டிகள் அடங்கிய தொடரில் இலங்கையிலேயே மோதுகிறது இங்கிலாந்து அணி.

தமது கிண்டல் பேச்சுக்கள் நியாயமானதுதான் என நிரூபித்துக் காட்ட வேண்டிய தருணம் இது.

## டெரன் கொவ் மீது புகார்

இதேவேளை சர்வதேசப் போட்டிகள் ஆரம்பமாகும் முன்பே இங்கிலாந்து வீரர்களின் நடத்தைகள் பற்றி புகாரிடப்பட்டுள்ளது.

இங்கிலாந்து அணி முதன்முதலாகப் பங்குபற்றிய கோல்ட்ஸ் XI அணியுடனான இரண்டுநாள் போட்டிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. வேகப் பந்து வீச்சாளர் டெரன்கொவ் தம்மிக்கவின் பந்துவீச்சில் ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்டமிழந்தார். அரங்கிற்குத் திரும்பும் போது பந்துவீசிய தம்மிக்கவையும் அப்பிடியை எடுத்த சுகித பீரிஸையும் மிரட்டும் பாணியில் ஏசினார் டெரன்கொவ். கோல்ட்ஸ் அணியின் பயிற்றுநர் இதுபற்றி கிரிக்கெட் சபைக்கு முறைப்பாடு செய்தார்.

டெஸ்ட் போட்டிகள் ஆரம்பமாகும் முன்பே இத்தகைய சம்பவங்கள் இடம்பெற்றமை கிரிக்கெட் கட்டுபாட்டுச் சபைக்கும் சங்கடத்தை ஏற்படுத்திவிட்டது. இவ்விடயத்தைப் பெரிதாக்க விரும்பவில்லை. இங்கிலாந்து அணி முகாமைத்துவத்திற்கு இதுபற்றி அறிவிக்கப்பட்டபோது இனிமேல் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாது என அவ்வணியினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### போட்டிகள் விபரம்

பெப்ரவரி 22-26 : முதலாவது டெஸ்ட் - காலி

மார்ச் 7-11 : இரண்டாவது டெஸ்ட் - அஸ்கிரிய

மார்ச் 15-19: மூன்றாவது டெஸ்ட் -எஸ்.எஸ்.ஸி

மார்ச் 23: முதலாவது ஒருநாள் போட்டி - தம்புள்ள

மார்ச் 25: ஒருநாள் போட்டி -ஆர். பிரேமதாச மைதானம்

மார்ச் 27: ஒருநாள் போட்டி- எஸ்.எஸ்.ஸி-

# குஜராத் பூகம்ப நிதிக்கு முன்னாள் வீரர்கள் போட்டி

அவுஸ்திரேலிய, இந்திய முன்னாள் கிரிக்கெட் வீரர்களுக்கிடையில் கண்காட்சிக் கிரிக்கெட் போட்டியொன்று நடத்தப்படவுள்ளது.

இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் அண்மையில் ஏற்பட்ட பூகம்பத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணமளிப்பதற்கு இந்நிதி பயன்படுத்தப் படும்.


இயன் செப்பல்


கவாஸ்கர்

இந்திய, அவுஸ்திரேலிய அணிகளுக் கிடையிலான டெஸ்ட் போட்டித் தொடர் முடிவடைந்த பின் மார்ச் 23ஆம் திகதி சென்னையில் இக்கண்காட்சிப் போட்டி நடத்தப்படும்.

ஏப்ரல் மாதம் நான்கு நாடுகளுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டியொன்றை நடத்தவே முதலில் திட்டமிடப்பட்டது. இதற்காக அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, நியூஸிலாந்து, இலங்கை, ஸிம்பாப்வே ஆகிய அணிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

ஆனால் இவ்வணிகள் எதுவும் ஏப்ரல் மாதம் இப்போட்டியில் பங்குபற்ற இயலாதெனத் தெரிவித்துவிட்டன.

இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் அணிகளுக்கிடையில் சார்ஜாவில் சுற்றுப்போட்டியொன்றை நடத்தவும் முன்னர் திட்டமிடப்பட்டது. ஆசிய கிரிக்கெட் மன்றம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தது.

ஆனால் இந்திய அரசாங்கம் தனது அணி பாகிஸ்தானுடன் விளையாடுவதற்கு அனுமதியளிக்கவில்லை.

"பூகம்ப நிதிக்காக வெளிநாடுகளில் போட்டி நடத்தத் தேவையில்லை. சினிமா நட்சத்திரங்கள், அரசியல் பிரமுகர்களுக்கிடையிலான கிரிக்கெட் போட்டியொன்றை நடத்தி நிதி சேகரிக்கலாம்" என இந்திய விளையாட்டுத்துறை அமைச்சர் உமா பாரதி கூறியிருந்தார்.

இதையடுத்து அவுஸ்திரேலிய, இந்திய வீரர்களுக்கிடையில் விசேட கண் காட்சிப் போட்டியொன்றை நடத்த ஆலோசிக்கப்பட்டது.

ஸ்டீவ் வோ இதற்கு விருப்பம் தெரிவித்திருந்தார். ஆனால் ஆஸி கிரிக்கெட் சபை இத்தொடரின்போது கண்காட்சிப் போட்டியொன்றை நடத்துவதற்கு மறுத்துவிட்டது.

இதனையடுத்தே இவ்விரு நாடுகளைச் சேர்ந்த முன்னாள் வீரர்களுக்கிடையிலான போட்டி நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கிரிக்கெட் வர்ணனையாளர்களாகப் பணிபுரியும் இயன் செப்பல், ரிச்சி பெனோட், சுனில் கவாஸ்கர், அலன்போடர் ஆகியோர் இதில் பங்குபற்ற சம்மதம் தெரிவித்துள்ளனர்.

# விளையாட்டுச் செய்திகள்!

-ஆர். சேதுராமன்

# டொனால்ட்டின் காயம் குறித்து விசாரணை

துடுப்பெடுத்தாடும் போது தலையில் பந்து தாக்கியதால் தென்னாபிரிக்க வீரர் அலன் டொனால்ட் அண்மையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இத்தாக்குதல் வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்டதா என்பது பற்றி விசாரணை நடத்தப்படவுள்ளது.

தென்னாபிரிக்காவின் கிழக்கு பிராந்திய அணிக்கும் பிரீ ஸ்டேட் அணிக்கும் இடையிலான போட்டியின்போதே டொனால்ட் காயத்திற்குள்ளானார். இப்போட்டியில் டொனால்ட் பிரீ ஸ்டேட் அணியில் விளையாடினார்.


டொனால்ட்

அவர் துடுப்பெடுத்தாடும் போது கிழக்குப் பிராந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் அந்ரே நெல் வீசிய 'பௌன்ஸர்' பந்து டொனால்டின் தலையில் பட்டது. சில நிமிடங்களில் டொனால்ட் சுதாகரித்த போது மீண்டும் பௌன்ஸர் பந்துவீச்சை மேற்கொண்டார் நெல்.

அதற்கு 'ஈஸ்டர்ன்ஸ்' அணியின் பயிற்றுநர் ரோய் ஜென்னிங்ஸின் தூண்டுதலே காரணம் எனக் கூறப்படுகிறது.

டொனால்டை தாக்கினால் தான் ஆயிரம் 'ராண்ட்' பணம் (சுமார் 11,000 ரூபா) தருவதாகக் கூறினாராம் ஜென்னிங்ஸ்.

தனது வேகப்பந்துவீச்சாளரை 'பௌன்ஸர்' வீச உற்சாகப்படுத்தியதாக ஒப்புக்கொண்டுள்ள ஜென்னிங்ஸ் தான் இதற்காகப் பணம் வழங்க முன்வந்ததாகக் கூறப்படுவதை மறுத்துள்ளார்.

"அவரது ஒவ்வொரு விக்கட்டுக்கும் ஊக்குவிப்புத் தொகை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அவரது பந்துவீச்சை டொனால்ட் கவனயீனமாக எதிர்கொண்டதால் காயமடைந்தார்" என்கிறார் அவர்.

இதேவேளை தனது அணியின் வேகப்பந்து வீச்சாளர் அந்ரே நெல்லின் மீது கோபமும் கொண்டுள்ளார் ஜென்னிங்ஸ். டொனால்ட் காயமடைந்த பின் கவலையுடன் காணப்பட்டதோடு அலன் டொனால்ட் தனது நாயகன் எனவும் நெல் கூறியதே இதற்குக் காரணம்.

எவ்வாறாயினும் இதுபற்றி விசாரணை நடத்த தென்னாபிரிக்காவின் ஐக்கிய கிரிக்கெட் சபை முடிவெடுத்துள்ளது. பயிற்றுநர் ஜென்னிங்ஸ் உட்பட வீரர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கால் பந்தாட்ட நடுவர் மீது புத்தளத்திலும் தாக்குதல்

கால்பந்தாட்ட நடுவர் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவம் புத்தளத்திலும் இடம்பெற்றுள்ளது.

புத்தளம் சீமெந்துக் கம்பனி வெற்றிக் கிண்ணத்திற்கான சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தைத் தொடர்ந்தே இச்சம்பவம் இடம்பெற்றது.

கடந்த 7ஆம் திகதி புத்தளம் நகரசபை மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் நியூ பிரண்ட்ஸ், திறீஸ்டார் கழகங்கள் பங்குபற்றின.

ஆட்டம் முடிவடைய இரண்டு நிமிடங்களுக்கு முன் கோலொன்றை அடித்து 1-0 விகிதத்தில் திறீஸ்டார் கழகம் வெற்றி பெற்றது.

போட்டி முடிவில் வீரர் ஒருவர் தாக்கப்பட்டுள்ளார். இதையடுத்து நடுவருக்கும் கடுமையான எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

பின்னர் நடுவர் சொந்த ஊருக்குச் செல்வதற்காக பஸ் நிலையத்தில் காத்திருந்தபோது அங்கு வந்த சிலர் நடுவரைத் தாக்கியுள்ளனர்.

இதனால் முகத்தில் கடுமையான காயத்திற்குள்ளான நடுவர் புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இச்சம்பவம் பற்றி பொலிஸில் புகார் செய்யப்பட்டதையடுத்து தாக்கியவர்களை பொலிஸார் தேடி வருகின்றனர்.

நடுவரைத் தாக்கியவர்கள் ஏதாவது கழக உறுப்பினர்களாக இருப்பின் அவர்களுக்கெதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புத்தளம் மாவட்டக் கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் அனுசரணையுடன் இப்போட்டி நடத்தப்பட்டது.

ஏற்கனவே பிரிமியர் லீக் கால்பந்தாட்டப் போட்டிகளின் போது வீரர்கள் நடுவரைத் தாக்கிய சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இதனால் இரு வீரர்களுக்கு ஆயுட்காலத் தடையும் மேலும் ஐவருக்கு ஐந்து வருடத் தடையும் விதிக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே.

- ஏ.எஸ். புல்கி

# இடம் பெயரும் தமிழ் மக்களுக்கு திருமலை சமாதான நகரமா?

இயற்கைத் துறைமுகத்தையும் வெண்மணல் கடற்கரையையும் கொண்ட திருகோணமலை ஒரு காலத்தில் உல்லாசப் பயணிகளை வெகுவாகக் கவர்ந்திழுத்துக் கொண்டிருந்தது. இன்று இடம் பெயர்ந்து அகதிகளாக அலையும் தமிழ் மக்களை அது அரவணைத்துக் கொள்கிறது.

திருகோணமலையில் தஞ்சமடைய வரும் மக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே செல்கிறது. அவ்வாறே அம்மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் பெருகியுள்ளன.

வடக்கிலிருந்து கப்பலில் வருவோரும் கொழும்பு, வவுனியா, மன்னார், வன்னி போன்ற பகுதிகளில் இருந்து வடபகுதி செல்ல வருவோரும் திருகோணமலை நகரிலேயே ஒன்று கூடுகின்றனர். மாகாண சபையின் அமைச்சுகளும் ஏனைய முக்கிய அலுவலகங்களும் இங்கு இருப்பதால் வேலை வாய்ப்பு, இடமாற்றங்கள் காரணமாகவும் அதிகமானோர் வந்து குவிகின்றனர்.

திருகோணமலைக்குப் புதிதாக வருவோர் முதலில் தற்காலிக பொலிஸ் பாஸைப் பெற வேண்டும் . பின்னர் குடும்ப அட்டைக்கு விண்ணப்பிக்க வேண்டும். இறுதியாக மாவட்ட அடையாள அட்டையைப் பெறலாம். ஆனால் இவற்றைப் பெறுவது இலகுவான காரியமல்ல. பல அவதிகளை இவற்றுக்காகப்பட வேண்டும்.

பல்லின சமூக மக்கள் வாழும் திருகோணமலையில் தமிழ் மக்கள் மட்டும் படும் அவதியை சொல்லில் அடக்க முடியாது. தற்காலிக பொலிஸ் பாஸைப் பெற ஒருவர் என்ன செய்ய வேண்டும்?.

பொலிஸ் பதிவுக்குரிய மூன்று படிவங்களையும் பணத்துக்கு வாங்கி, தான் இருக்கும் பிரிவு கிராம சேவகரிடமும் சமாதான நீதிவானிடமும் கொடுத்து கையெழுத்துகள் வாங்க வேண்டும். அவற்றை ஒப்படைக்கக் காலை ஏழு மணிக்கெல்லாம் பொலிஸ் நிலைய வாசலில் காத்திருக்க வேண்டும். கெட்ட காலம் என்றால் பொலிஸ் அதிகாரியின் விசாரணை, பரிசோதனை என்று நேரம் நண்பகலையும் கடந்துவிடும்.

அதைப் பொறுத்துக் கொண்டு உள்ளே சென்றால் ஏதோ குற்றம் செய்தவர்களை விசாரிப்பது போல விசாரிப்பார்கள்.

ஒரு மாத காலத்துக்கு மட்டும் பாஸ் கிடைக்கும்.

திருகோணமலைக்கு தற்காலிகமாக வந்து செல்பவர்களுக்கு இந்த ஒரு மாத கால அனுமதி போதுமானதாக இருக்கலாம். ஆனால் அரச நிறுவனமொன்றில் நிரந்தரமாகக் கடமையாற்ற வருபவர்களுக்கு இதனால் பல சிரமங்கள் ஏற்படுகின்றன.

> **திருகோணமலைக்குப் புதிதாக வருவோர் முதலில் தற்காலிக பொலிஸ் பாஸைப் பெற வேண்டும் . பின்னர் குடும்ப அட்டைக்கு விண்ணப்பிக்க வேண்டும். இறுதியாக மாவட்ட அடையாள அட்டையைப் பெறலாம். ஆனால் இவற்றைப் பெறுவது இலகுவான காரியமல்ல.**

பொலிஸ் அனுமதிப் பத்திரத்தை மீண்டும் பெற மாதத்தில் ஒரு நாள் லீவு போட வேண்டும். பத்திரங்களை எடுத்துக் கொண்டு மீண்டும் கையொப்பங்களுக்காக அலைய வேண்டும். அரச நிறுவனங்களில் வேலை செய்பவர்கள் மூன்று அல்லது ஆறு மாதங்களுக்கு பாஸ் கோரிய பொழுது பொலிஸாரால் மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது விடயமாக உயர்மலை சமாதான நீதிவானொருவர் சிறு குற்றப்பிரிவுக்கு பொறுப்பான அதிகாரியுடன் (M.C.Branch) கதைத்திருந்தும் ஒரு மாதகால அனுமதியே வழங்கப்படு கின்றது. பாதுகாப்பு அதிகமான கொழும்பில் கூட கூடுதலான காலத்துக்கு அனுமதி வழங்கப்படுகின்றது. ஆனால் இங்கு ''தெய்வம் அழைத்தாலும் பூசாரி விடை கொடுக்காத'' நிலையே உள்ளது.

தொடர்ச்சியாக ஆறு மாதங்கள் வசித்தவர்களுக்கு முன்னர் குடும்ப அட்டை வழங்கப்பட்டது. தற்போது 12 மாதங்கள் சென்ற பின்புதான் வழங்க முடியும் என பொலிஸ் தரப்பு கூறி வருகின்றது.

அரச நிறுவனங்களில் பணிபுரிபவர்கள் தமது நிறுவனத் தலைவரின் கடிதத்தைச் சமர்ப்பிக்க வேண்டும்'' இடம் மாறிச் செல்லும் போது ''மீண்டும் ஒப்படைக்கப்பட வேண்டும்'' என்ற உறுதி மொழி பெரிதும் எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் பின்னரும் பொலிஸார் சம்மதம் தெரிவித்தால் மாத்திரமே கிராம சேவகர் குடும்ப அட்டையில் கையொப்பம் இடுகின்றார்.

இத்தகைய நடவடிக்கையின் போது சமர்ப்பிக்கப் படவேண்டிய ஆவணங்கள் மற்றும் நடைமுறைகள் பற்றிப் பூரண தெளிவில் லாததால் இங்கு நிரந்தரமாக வசிக்கவிரும்பும் பாமர மக்கள் பெரிதும் சிரமத்துக்கு உள்ளாகின்றனர். இதன் பின்னரே மாவட்ட அடையாள அட்டை வழங்கப்படுகின்றது.

குடும்ப அட்டையுடன் வழங்கப்படும் பத்திரத்தை நிரப்பி கிராம சேவகரின் கையொப்பம் பெற்று பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், இரண்டு புகைப்படங்கள், பணம் நூறு ரூபா என்பவைற்றைச் சமர்ப்பித்த பின்னர் இதற்கென பொலிஸ் நிலையம் வரும் இராணுவத்தினரால் மாவட்ட அடையாள அட்டை வழங்கப்படும். இதற்கான அலுவல்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் மாத்திரம் நடைபெறுகின்றன.

நிலைமை இப்படியிருக்க திடீரென வீதியில் தென்படும் இராணுவத்தினர் ஆறு மாதமாகியும் என் மாவட்ட அடையாள அட்டை பெறவில்லை என மிரட்டுவர். தரப்படும் விளக்கத்தில் திருப்தியடையாவிட்டால் கைது செய்து பொலிஸாரிடம் ஒப்படைப்பர்.

ஏதோ ஒரு வகையில் ஆறு மாதங்களுக்கு முன்பு அந்த அட்டையைப் பெற்று விட்டால் எப்படி ஆறு மாதங்கள் முடிய முன்பு பெற்றாய் என்று பறித்துச் சென்று விடுவர். இப்படி இருதலைக் கொள்ளி எறும்புபோல வாழ வேண்டியுள்ளதே என்று தனது மாவட்ட அடையாள அட்டையைப் பறிகொடுத்த பாக்கியராசா என்பவர் குறை பட்டுக்கொண்டார்.

பொலிஸ் நிலையம் செல்வதானால் ஒன்றில் செல்வாக்கு இருக்க வேண்டும் அல்லது தெரிந்த நபருடன் செல்ல வேண்டும் என்று ஒரு தாய் சலித்துக் கொண்டார்.

இதேவேளை மாவட்ட அடையாள அட்டை நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு மட்டுமே வழங்கப்படும். அவர்களது மனைவி, பிள்ளைகளுக்கு வழங்கப்பட மாட்டாது என்று பொலிஸார் கூறுகின்றனர்.

இதில் விதிவிலக்குகளையும் காணக் கூடியதாய் உள்ளது. இந்த நடைமுறை கொழும்பில் கூட இல்லை. கிழக்கு மாகாணத்தின் ஒரு பகுதியான மட்டக்களப்பிலும் இல்லை.

ஆனால் சமாதான நகரம் என்று முத்திரை பொறிக்கப்பட்ட திருகோணமலைக்கு எப்படி வந்தது என்று அவதிப்படும் மக்கள் வினா எழுப்புகின்றனர். இந்த நடைமுறையை நிறுத்த அல்லது சுலபமான முறையில் மாற்றி அமைக்க முடியாதா என்று அவர்கள் ஏங்குகின்றனர்?

-எஸ்.எஸ்.ஆர்


சீற்றி கெப்ஸ்

கார்/வேன் சேவை

- திருமண வைபவங்களுக்கான விசேட கார்
- வேன் - கட்டுநாயக்க விமானத்தளத்திற்கு ரூ1000/-, மலிவு கட்டணம் ரூ400/- சேவையும் உண்டு. விபரங்களுக்கு

☎ : 552222 - 4

TALENT


## சக்தி TV சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 11.00-11.30 | | | | | | குட்டிச் சுட்டி | குட்டிச் சுட்டி காலைக்கதிர் (நேரடி ஒளிபரப்பு) |
| 11.30-12.00 | | | | | | | |
| 12.00-12.30 | | | | | | பொலிஸ் டயரி | |
| 12.30-13.00 | | | | | | ஸ்டார் சமையல் | இசைக்கோலம் |
| 13.00-13.30 | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சக்தி வீக்கெண்ட் மெட்னி | சக்தி வீக்கெண்ட் மெட்னி |
| 13.30-14.00 | குலவிளக்கு | குலவிளக்கு | குலவிளக்கு | வணக்கம் தமிழகம் | வணக்கம் தமிழகம் | | |
| 14.00-14.30 | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | | |
| 14.30-15.00 | | | | | | | |
| 15.30-16.00 | | | | | | நலந்தானா | வசந்த நிலா |
| 16.00-16.30 | | | | | | டொப் 10 மூவிஸ் | கோபி |
| 16.30-17.00 | சுப்பர் 10 | கலைச்சோலை | நம்மநேரம் | மீண்டும் மீண்டும் சிரிப்பு | திரை விமர்சனம் | அரட்டை அரங்கம் | ஸ்டார் ஷோ |
| 17.00-17.30 | தமிழ் கார்ட்டூன் | தில்லானா தில்லானா | தமிழ் கார்ட்டூன் | மலரும் மொட்டும் | தமிழ் கார்ட்டூன் | பூஞ்சோலை | சன் டிவி நிகழ்ச்சிகள் |
| 17.30-18.00 | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | இளமை புதுமை | சன் டிவி நிகழ்ச்சிகள் |
| 18.00-18.30 | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | பெப்ஸி உங்கள் சாய்ஸ் | காற்றாய் வருவேன் | கேள்வியின் நாயகனே | இப்படிக்கு நீங்கள் |
| 18.30-19.00 | அம்மா | அம்மா | அம்மா | அம்மா | அம்மா | புதுப்பாடல் | ஆனந்தபவன் |
| 19.00-19.30 | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | சாவித்ரி | சப்தஸ்வரம் |
| 19.30-20.00 | கதைநேரம் | தித்திக்கும் ஓசை | சத்யா | சீமான்களே சீமாட்டிகளே | பணம், பெண் பாசம் | இளையகானம் | பஞ்சவர்ணம் |
| 20.00-20.30 | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் |
| 20.30-21.00 | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | நிம்மதி உங்கள்... | ஜன்னல் |

# மின்வெட்டில் புத்தளம் நகரம் 'றெக்கோட்': கின்னஸ் சாதனை!

மின்வெட்டில் புத்தளம் நகரம் றெக்கோட் அடித்திருக்கிறது. கின்னஸ் சாதனை படைத் திருக்கிறது.

இரவு பகல் என்று இல்லாமல் எந்த நேரத்திலும் மின்வெட்டு இடம் பெறுகிறது. இது நாளாந்த நிகழ்ச்சி. ஒரே நாளில் பலதடவைகளில் மின் வெட்டு இடம் பெறுவதும் உண்டு.

இந்த அவலம் நீண்ட காலமாகத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. புத்தளம் வாசிகள் பொறுமையின் எல்லையைக் கடந்து விட்டார்கள்.

கடைசிப்படியாக இந்த விடயத்தைச் 'சுடர் ஒளி' வெளியிட்டு சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக நிலையைச் சீராக்க வழி செய்து தரவேண்டும் என்று பலரும் கேட்டுக் கொண்டார்கள்.

பகல் நேரங்களில் மின் வெட்டு இடம் பெறுவதால் வர்த்தகர்களும் மற்றும் மின்சாரத்தைப் பயன்படுத்தித் தொழில் செய்பவர்களும் பெரிதும் பாதிக்கப் படுகின்றார்கள்.

இரவு வேளைகளில் மின் வெட்டு இடம் பெறுவதால் பாடங்களைப் படிக்கும் மாணவர்களும், பொதுமக்களும் பல சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

முன்னறிவித்தலின்றித் திடீர், திடீரென்று மின் விநியோகம் துண்டிக்கப்பட்டு பின்னர் மீண்டும் விநியோகிக்கப்படுகிறது. அந்த நேரம் கூடுதல் வலுவுடன் மின்சாரம் பாய்ந்து பல பெறுமதி மிக்க மின் உபகரணங்களையும் பழுதாக்கி அவற்றைச் செயல் இழக்கச் செய்து விடுகிறது.

மின்சாரத் துண்டிப்புக் குறித்து பலமுறை மின்சார சபையிடம் முறைப்பாடு செய்தும் அது செவிடன் காதில் ஊதியசங்காகவே அமைந்துள்ளது.

இதை விட இன்னொரு அதிர்ச்சித் தகவல் என்னவென்றால் புத்தளம் நகரிலுள்ள வர்த்தக நிறுவனங்களில் பண்டிகைக் காலங்களில் வியாபாரம் மும்முரமாக இடம்பெற்றுக் கொண்டிருக்கும் போது மின்வெட்டு இடம்பெறும். அப்போது வர்த்தக நிலையங்களில் இடம்பெறும் துக்ககரமான சம்பவங்களுக்குக் குறைவில்லை.

தற்சமயம் பெரும்பாலான வீடுகளில் மாலை வேளையில் மின் விளக்குகளை ஏற்றும் போது கூடவே மேசை லாம்புகளையும் ஏற்றி வைக்கின்றார்கள். வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்துள்ள இந்தக் காலகட்டத்தில் மக்களுக்கு இப்படியும் ஒரு மேலதிகச் செலவு.

ஏனைய இடங்களில் இல்லாத இந்த மின் வெட்டு புத்தளம் நகரில் மாத்திரம் அடிக்கடி இடம் பெறுவது ஏன்? எவரும் பதில் சொல்லவில்லை; சொல்ல விரும்புவதாகவும் தெரியவில்லை. புத்தளத்தில் நிலைமை படுமோசம்.

—ஏ. எஸ். புல்கி

## உடப்புக்கு சமய கலாசார மண்டபம்

வடக்கு – கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளுக்கு வெளியே தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழும் பகுதி புத்தளம். இங்குள்ள உடப்புக் கிராமத்தின் நீண்ட நாள் தேவையொன்று பூர்த்தி செய்யப்படவுள்ளது.

தமிழ் மக்கள் தமது சமய சம்பந்தமான நிகழ்வுகளை நடத்தவும், மற்றும் கலை, கலாசார நிகழ்ச்சிகளை அரங்கேற்றவும் மண்டபம் இல்லாத குறை விரைவில் நீங்கும்.

உடப்பு வாழ் பிரமுகரும், ஆராச்சிக் கட்டு பிரதேசசபைத் தலைவருமான கே.தட்சணாமூர்த்தி தலைமையில் புத்தி ஜீவிகள் அடங்கிய குழுவொன்று வடக்கு புனர்வாழ்வு, வடக்கு – கிழக்கு தமிழ்மொழி அமுலாக்கல், இந்து கலாசார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அவரது அமைச்சில் அண்மையில் சந்தித்தது. உடப்பில் இந்து கலாசார மண்டபமொன்று அமைய வேண்டியதன் அவசியத்தைக் குழுவினர் வலியுறுத்தினர்.

அதனையடுத்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்து கலாசார மண்டபத்தை அமைக்க 33 லட்சம் ரூபாவை ஒதுக்கிக் கொடுத்துள்ளார்.

உடப்பில் குடி கொண்டுள்ள அன்னை ஸ்ரீ திரௌபதை அன்னை ஆலயத்திற்கு அருகில் மேற்படி மண்டபம் அமையவிருக்கிறது என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

கற்பிட்டி பிரதேசத்திலுள்ள அகதி முகாம்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் தமக்கு வழங்கப்பட்டு வந்த உலர் உணவு நிவாரணப் பொருட்கள் குறைக்கப்பட்டதை ஆட்சேபித்திருக் கிறார்கள். கடந்த இரு மாதங்களாக உலர் உணவு நிவாரணப் பொருட்கள் வழங்கப்படாததற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் கற்பிட்டி பிரதேச செயலகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

விடயம் அறிந்து செயலகத்துக்கு விஜயம் செய்தார் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், இனவிவகார, தேசிய நல்லிணக்க பிரதியமைச்சருமான எம். நூர்தீன் மசூர்.

இவ்விடயம் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுப்பதாக அவர் உறுதியளித்தார். அதைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது.

– சியாஜ்

## இது வதைகளின் தேசம்

மீண்டு மொரு முறை எம் தேசத்தில்
'மனிதம்' காவலுக்கு நின்ற
இனவெறி நாய்களால் குதறப்பட்டது!
சூரியகந்த, செம்மணி வரிசையில்
இதோ மற்றொரு புதிய வெளியீடு!
மிருசுவில்!
மிருகங்களின் மிலேச்சத்தனத்தால்
உருவமே தெரியாமல் உருக்குலைந்த
எருக்குவியல் போலிங்கே
புதைக்கப்பட்ட
எம்மவர்கள் செய்த தவறென்ன?
யாரையாவது
கொள்ளையடித்தார்களா?
ஊரை ஏமாற்றி ஊழல்
புரிந்தார்களா?
பேரை மாற்றிப் பித்தலாட்டம்
செய்தார்களா?
இல்லையே!
சொந்த மண்ணில் வீசும் காற்றினை,
எந்தையும், தாயும் மகிழ்ந்து
குலவிய
வீட்டினை,
மந்தைகளை, தோப்புகளை,
வயல்களை
சிந்தை மகிழப் பார்க்கச் சென்றது
தவறா?
அழுகின்ற ஐந்து வயதுப்
பாலகனைக்கூட
புழுத்துப் போன புத்தியோடு
கழுத்தறுத்துக் கால்முறித்து
இழுத்துச் சென்று நாய்கள்
மூடினவாம்
பால் மணம் மாறாத பச்சிளம்
பாலகன் கூட
பாழாய்ப் போன எம் தேசத்தில்
பயங்கரவாதியாய்
பட்டங்கட்டப்பட்டு
பட்டப்பகலில்
வெட்டியெறியப்பட்டான்!
நெஞ்சுக் கூட்டுக்குள் ஒரு முறை
நெருப்பொன்று எழுகின்றது.
வெட்டிய புதைகுழியிலிருந்து
பட்டுப்போன உடல்கள் யாவும்
அரக்கத்தனமான அராஜகத்தின்
அழிவல்ல!
இன்னுமோர் செம்மணிக்கான
ஆரம்பம்!
சோதரா!
தோட்டம், துரவு, மலசலகூடம்,
வீட்டுவளவு, காணிவெளி, கிணறு,
பற்றைகள், ஒற்றைக் குடிசைகள்
அத்தனையும்
இப்போதே தோண்டிப்பார்!
இன்னுமின்னும் புதைகுழிகள்
புறப்படும்!
அவ்வளவு ஏன்?
நாம் கால் வைக்கும்
ஒவ்வொரு அடியின் கீழும்
புதிதாய் புதைகுழிகள் பிரசவமாகும்.
ஏனெனில் இது-
புதை குழிகளாலேயே புவியினில்
'புகழ்(?)' பெற்ற சிதைகளெரியும்
வதைகளின் தேசம்!

- த.பிரபாகரன்

### வாழ்வு உயரணும்

ஆன்மீகம் தழைக்கணும்
அறங்கள் மண்ணில்
நிலைக்கணும்
அன்பு எம்மில் வளரணும்
அமைதி எங்கும்
பிறக்கணும்

சண்டை ஓய்ந்து போகணும்
சமாதானம் பிறக்கணும்
மக்கள் ஒன்று கூடணும்
மகிழ்ச்சி பொங்க
வாழணும்

வறுமை ஒழிந்து போகணும்
வளங்கள் நாட்டில்
பெருகணும்
மனித நேயம் துலங்கணும்
மக்கள் வாழ்வு உயரணும்.

- க. கிருஷ்ணா

## விடிவெள்ளி பூக்கட்டும்!

உயிரில் வாழும் தமிழே – உன்மேல்
காதலாகி நின்றேன்
உயிரும் நீங்கிப் போனால் – மீண்டும்
ஈழம் வந்து பிறப்பேன்
வாழ்தல் சாதல் எல்லாம் – நின்மேல்
கொண்டு நிற்கும் அன்பே!
சூழ்ந்த பித்தும் ஒருநாள் – இங்கு
நம்மை வாழ வைக்கும்!
தொல்லை யாவும் நீங்கி – உலகில்
உன்னைப் போற்றி வாழ
எல்லை இன்றி நீயும் – ஒரு நாள்
ஆட்சி செய்து வாழ்வாய்
சூழும் மைந்தர் எல்லாம் – உந்தன்
அன்பை வேண்டி நிற்கும்;
வாழும் வாழ்க்கை கண்டு – நீயும்
இன்ப வாழ்க்கை கொள்வாய்!
சங்கம் வைத்து வாழ்ந்தார் – அன்று
அழகு ஆட்சி செய்தோர்
பொங்கும் வேள்வித் தீயில் – இனியும்
மங்கிப் போக மாட்டாய்!
பொழியும் ஷெல்கள் கூட – நினது
நாமம் சொல்லிச் சீறும்.
விழியில் வழியும் நீரும் – உனது
பாதம் கழுவிப் பாயும்!
விழுந்த சுவடு கூட – உணர்வில்
உன்னைத் தாங்கிக் கிடக்கும்!
எழுந்த ஆண்டில் இங்கே – விடி
வெள்ளி வந்து பூக்கும்!.

தாவை லோ.து(ள)ஷி

கவிதைப் பூங்கா

### உண்மைகள்

திட்ட மிடுவதில்
வெற்றியும்,
திருப்திப் படுவதில்
மகிழ்ச்சியும்,
திருந்திக் கொள்வதில்
மனநிறைவும்,
தீயவற்றை
விலக்கிக்கொள்வதில்
நன்மையும்,
சட்டம் மீறுவதில்
சஞ்சலமும்,
சண்டையிடுவதில்
சங்கடமும்
அன்றாடம்
நாம் காணும்
உண்மைகள்

அ.அரசரெத்தினம்



# வென்றார்; சென்றார் வந்தார்; திரும்பினார்

மட்டக்களப்பு மாவட்ட எம்.பியும் இனவிவகார நல்லிணக்கப் பிரதி அமைச்சருமான சோ.கணேசமூர்த்தி கடந்த அக்டோபர் 10 தேர்தலில் தமது வெற்றி உறுதியானதோடு கொழும்பு சென்றவர் மூன்று மாதங்களின் பின்னர் கடந்த முதலாம் திகதி மட்டக்களப்புக்குத் திரும்பி வந்தார்.

கல்லடியில் பிரதி அமைச்சரின் வீட்டுக்குப் பலத்த பாதுகாப்புப் போடப்பட்டு இருந்தது. அவரைச் சந்திக்கச் சென்றவர்கள் இராணுவத்தினரால் கடும் சோதனைகளுக்கு உள்ளாக்கப்பட்டனர்.

பிரதி அமைச்சர் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றுக்கு ஏற்பாடு செய்தார். மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்ற பத்திரிகையாளர்களும் சோதனைகளுக்கு உள்ளாக வேண்டியிருந்தது. அதனால் அவர்கள் மாநாட்டைப் பகிஷ்கரித்துத் திரும்பிவிட்டனர்.

பிரதி அமைச்சர் ஏழு நாட்கள் மட்டக்களப்பில் தங்கியிருந்தார்.

அந்த நாட்களில் அவர் முக்கியமாக ஏழு கருமங்களில் ஈடுபட்டார்.

1.சுதந்திர தினத்தில் தேசியக் கொடி ஏற்றினார்.

2. மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் நடந்த அபிவிருத்திக் குழுக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கினார்.

3. இருதயபுரத்தில் சமுர்த்தி வங்கியைத் திறந்து வைத்தார்.

4. புதுக்குடியிருப்பில் ஆயுள்வேத வைத்தியசாலைக்கு அடிக்கல் நட்டார்.

5. மகிளூரில் அரசினர் வைத்தியசாலைக்கு அடிக்கல் நட்டார்.

6. புதுக்குடியிருப்பு இளைஞர் சேவை மன்றத்தின் தொழிற்பயிற்சி நிலையத்தைத் திறந்துவைத்தார்.

7. களுவாஞ்சிக்குடியில் பிரதேச செயலாளர் பணிமனையைத் திறந்துவைத்தார்.

புதுக்குடியிருப்பு இளைஞர் சேவைகள் மன்றப் பயிற்சி நிலையத் திறப்பு விழாவில் முக்கிய அறிவிப்பு ஒன்றைச் செய்தார். இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

நீண்ட செயல் திட்டம் வகுத்து பல்துறைப் பயிற்சி வழங்கப்படும். அது மூன்று பிரிவுகளாக வழங்கப்படும்.

இளைஞர், யுவதிகளின் கல்வித்தகைமைக்கு ஏற்ப தொழில் பயிற்சி வழங்கப்படும்.

பயிற்சி அளிக்கப்படும் காலத்தில் ஒவ்வொருவருக்கும் மாதாந்தம் 3500 ரூபா வழங்கப்படும்.

இந்தத் திட்டம் இந்த வருடத்திலேயே செயற்படுத்தப்படும். இப்படிப் பிரதி அமைச்சர் கூறினார்.

பிரதி அமைச்சர் கணேசமூர்த்தி 4ஆம் திகதி சுதந்திர தினத்தன்று மட்டக்களப்பு மண்முனை வடக்குப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் தேசியக் (சிங்கக்) கொடியை ஏற்றிவைத்தார்.

வழமையாகக் கச்சேரி வளவில் நடைபெறும் சுதந்திரதின விழா இம்முறை அங்கு நடைபெறவில்லை. பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு இந்த இடமாற்றம்.

சுதந்திரதினத்தன்று தேசியக்கொடியோடு கறுப்புக்கொடியும் புலிக்கொடியும் ஏற்றப்பட்டன.

மட்டக்களப்பு நகரின் அதிபாதுகாப்புப் பகுதியில் உள்ள புனித மைக்கல் கல்லூரி முன்பாக உள்ள மின்கம்பத்தில் புலிக்கொடி ஏற்றப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு, கல்லடி, தாண்டவன்வெளிப் பகுதிகளில் கறுப்புக்கொடிகள் ஏற்றப்பட்டிருந்தன.

பிரதி அமைச்சர் சோ.கணேசமூர்த்தியின் கல்லடி வீட்டுச்சந்தியில் அமைந்துள்ள மணிக்கூட்டுக் கோபுரத்திலும் பெரிய கறுப்புக்கொடி பறக்கவிடப்பட்டிருந்தது.

4ஆம் திகதி மாலையில் இராணுவத்தினர் விரைந்து சென்று இந்தக் கொடிகளை எல்லாம் அகற்றினர்.

- நேரன்



அமெரிக்கத் துறவி சுவாமி தந்திரதேவா கல்லடி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்திற்கு பிள்ளையார் விக்கிரகம் அன்பளிப்புச் செய்கிறார்.

படம் : நேரன்

# மூடப்பட்டும் முடங்கியும் கிடக்கும் வைத்தியசாலைகள்

போர் அவலங்களில் ஒன்றாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பல வைத்திய சாலைகள் பல வருடகாலமாக மூடப்பட்டுள்ளன. அதனால் மக்கள் தொடர்ச்சியாக வைத்திய சேவையினைப் பெறமுடியாது பாதிப்படைந்து வருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்டபத்தடி, வாகரை, உன்னிச்சை, பெரியபுல்லுமலை, கதிரவெளி, மாங்கேணி, நாவற்காடு, பட்டிப்பளை, வவுணதீவு, கொக்கட்டிச்சோலை, துறை நீலாவணை முதலான இடங்களில் உள்ள வைத்தியசாலைகள் மூடப்பட்டுள்ளன.

அதேபோன்று வாழைச்சேனை, செங்கலடிப் பகுதி வைத்தியசாலைகள் குறைபாடுகள் பூர்த்தியாக்கப்பட வேண்டிய நிலையில் இயங்குகின்றன.

சந்திவெளி மருந்தகம் சுமார் 50 வருடகாலமாக எவ்வித அபிவிருத்திகளுமின்றி வெறுமையான மருந்தகமாகக் காட்சி தருகிறது.

மூடப்பட்டுள்ள வைத்தியசாலைகளில் உன்னிச்சை, மகிழவெட்டுவான், கொக்கட்டிச் சோலை, பெரியபுல்லுமலை, மண்டபத்தடி போன்றவை இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேச வைத்திய சாலைகளாகும்.

மூடப்பட்டுள்ள வைத்தியசாலைகளை மீள இயங்கச் செய்வதானால் மருத்துவ உத்தியோகத்தர்கள் மற்றும் உதவி மருத்துவ அதிகாரிகள் நியமனம் செய்யப்பட வேண்டும் என அரசு கூறுகிறது.

இவ்வைத்தியசாலைகளுக்கு மருத்துவ உத்தியோகத்தர்களும், முப்பத்திரெண்டு உதவி மருத்துவ உத்தியோகத்தர்களும் ஆளணி அடிப்படையில் தேவைப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களை நியமித்து மீண்டும் வைத்திய சாலைகளை இயங்கச் செய்வதற்கான நடவடிக்கைகள் இதுவரை எடுக்கப்படவில்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தின் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் இயங்கி வந்த வைத்தியசாலைகள் மூடப்பட்டுள்ளதால் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளை இடம் பெயர் மருத்துவ சிகிச்சை நிலையங்களை நடத்தி வருகிறது.

இரு வைத்தியர்கள், இருதாதியர்கள், பொது சுகாதாரப்பரிசோதகர், மருந்தாளர், உதவியாளர் கொண்ட மருத்துவ அணி, ஒரு சுகாதாரப் பிரதிநிதி, ஒரு வெளிக்கள உத்தியோகத்தர் ஆகியோரின் அனுசரணையுடன் வாரத்தில் ஐந்து நாட்கள் சேவை நடைபெறுகிறது.

மண்டபத்தடி, உன்னிச்சை, பால்சேனை, கொல்லனுலை, பாவற்கொடிச்சேனை, கரடியனாறு, காக்காச்சிவட்டை, இலுப்படிச் சேனை ஆகிய இடங்களில் இந்த இடம் பெயர் மருத்துவ சேவை நடத்தப்படுகிறது.

கடந்த வருடம் 50,563 பேருக்கு மருத்துவ ஆலோசனைகளும் சிகிச்சைகளும் வழங்கப்பட்டன என்று ஐ.சி.ஆர்.சி அறிக்கையொன்று தெரிவிக்கின்றது.

- சத்துருக்கன்

# மட்டக்களப்பு வெள்ள அவலம்

மட்டக்களப்பு மாவட்ட மக்களின் பெரும்பாலானவர்களின் மூலத்தொழில்கள் நெற்செய்கை, கால்நடை வளர்ப்பு மீன்பிடித்தல் ஆகியனவே ஆகும். இம்மூன்று தொழில்களும் மழை வெள்ளம் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

கடந்த வருடம் அக்டோபர் மாதம் முதல் இவ்வருடம் பெப்ரவரி வரை மட்டக்களப்பு மாவட்டத்தில் நான்கு தடவைகள் வெள்ள அபாயம் ஏற்பட்டன.

இம் முறை நெல் விதைப்பு தொடக்கம் அறுவடை வரையும் ஒரே இயற்கை அழிவுகள் தான். 90 சத வீதமான நெல்வயல்கள் அழியும் அவலங்கள் நேர்ந்தது.

நூற்றுக்கணக்கான கால்நடைகள் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டன. மீன் பிடித்து சீவியம் நடத்துவோர் காலநிலை சீர் கேடுகளினால் கடலுக்குப்போக முடியவில்லை.

சமூக சேவைத்திணைக்களத்தினால் வழங்கப்பட்ட நிவாரணம் அவர்களின் வாழ்க்கையைச் சீர் செய்யப்போதுமானதாக இல்லை.

இது வரை அரச ஊழியர்களுக்கான வெள்ள நிவாரணக்கடனும் நஷ்டம் அடைந்தவர்களுக்கான நிவாரண இழப்பீடுகளும் கிடைக்கவில்லை

-நேரன்




கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்துடன் இணைந்து பாதணிகள் தோல் பொருட்சங்கம் கந்தளாயில் நடத்திய பாதணி உற்பத்தி நெறிச்சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் திருமதி நிசாந்தி உரையாற்றுகிறார் படம்: ஐ.அன்வர் அலி




சித்தாண்டி வெள்ளத்தால் வீட்டை விட்டு வெளியேறுவோர்

படம் : சத்துருக்கன்

# பெண்

பிரதீபா — பசீனா



## மனதில் உறுதி வேண்டும்

வாழ்க்கையில் வெற்றிகளும், தோல்விகளும் ஏற்படுவது சாதாரணம். வெற்றிகளைச் சந்தோஷமாக ஏற்கும் மனநிலையுடைய நாம் தோல்விகளைச் சந்திக்கும் நேரத்தில் மட்டும் துவண்டு விடுகின்றோம்.

நாம் எப்போதும் மன உறுதியுடன் இருக்க வேண்டும். அதாவது தோல்விகளைச் சந்திக்கும் நேரத்தில் துவண்டுவிடாமல் இருக்க மன உறுதியை வளர்த்துக் கொள்வதுதான் முக்கியம்.

மன உறுதி இல்லாதவர்கள்தான் தோல்விகள் ஏற்பட்டவுடன் தற்கொலையை நாடுகின்றனர். இதனால் நமது சமுதாயத்தில் தற்கொலை வீதம் அதிகரித்துக் கொண்டு போகின்றது.

தோல்வி ஏற்படும் நேரத்தில் இந்தத் தோல்வி நிலையானதல்ல, இதற்குப் பின்தான் வெற்றிகாணும் வாய்ப்பு உண்டு என உறுதியாக நம்புங்கள்.

விரக்திகளும், வருத்தங்களும் உங்களைத் தாக்கும்போது அவற்றிற்கு உங்களை அடிமையாக்கிக் கொள்ளாதீர்கள்.

''நான் இப்படி இருக்கப் பிறந்தவள் அல்ல'' என்று கூறி மனதை உறுதியாக்குங்கள். இந்த விரக்திகளுக்கும், மன வருத்தங்களுக்கும் காரணம் என்ன என்பதை மன அமைதியுடன் ஆராய்ந்து சிந்தித்து அவற்றை நிவர்த்தி செய்து கொள்ளுங்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக இறை நம்பிக்கை உடையவராக இருங்கள். எல்லாம் அமைந்திருந்தும், சில வேளைகளில் துன்பத்திற்கு மேல் துன்பம் வந்து கொண்டிருக்கும். இந்த சந்தர்ப்பத்தில் இறைவன் மேல் முழு நம்பிக்கை வைத்து தொடர்ந்து செயற்பட்டு வந்தால் உங்களுக்கு நிச்சயம் நல்ல பலன் கிடைக்கும்.

இறை நம்பிக்கையுடன் செயற்படும் ஒருவருக்கு மற்றவருக்கு தீங்கிழைக்கும் எண்ணம் வராது.

எனவே மன உறுதியுடனும் இறை நம்பிக்கையுடனும்செயற்பட்டால் நமக்கு ஏற்படும் துன்பம் தூசு!

## பயண டிப்ஸ்

நீங்கள் அடிக்கடி வெளி இடங்களுக்குச் செல்பவரா?

எவ்வளவு தான் பார்த்துப் பார்த்து எடுத்து வைத்தாலும், சில முக்கிய பொருட்களை விட்டுச் சென்ற அனுபவம் இருக்கும்.

அப்படியான சந்தர்ப்பங்களில் ஏற்படும் அசௌகரியங்களைத் தவிர்த்துக் கொள்ள இந்த இலகுவான வழியைப் பின்பற்றுங்கள்.

ஒரு சிறிய பையை கைவசம் வைத்துக் கொள்ளுங்கள். நீங்களே தைத்தது என்றால் மிகவும் நல்லது.

அதில் சவர்க்காரம், சிறிய ஒரு போத்தலில் எண்ணெய், சீப்பு, பொட்டு அடங்கலாக பொருட்களை, பற்பசை, பற்றூரிகை என்பவற்றையும் போட்டு வையுங்கள்.

பயணம் போகும் போது அந்தப் பையை அப்படியே பயணப்பையில் வைக்க வேண்டியது தான்.





## அழகில் ஏற்றம் காண தோற்றத்தில் மாற்றம்

தொடர்ந்து ஒரே தோற்றத்துடன் இல்லாமல், காலத்திற்கொரு முறை உங்கள் தோற்றத்தை சற்று மாற்றிப் பாருங்கள்.

அவ்வாறு செய்து பார்ப்பதில் உங்களுக்கு ஆர்வம் இருந்தால் பின்வரும் மாற்றங்களைச் செய்து பார்க்கலாம்.

◆ தலை மயிரின் அமைப்பு நேராக இருந்தால் அதைச் சுருட்டையாக்கவும், சுருட்டையாக இருந்தால் அதை நேராக்கவும் முடியும்.

◆ மாறுதலுக்காக ஒட்டும் மூக்குத்தி ஒன்றை அணியலாம்.

◆ ஒரே மாதிரியான உடைகளை அணியாமல் எல்லா விதமான அமைப்புள்ள ஆடைகளையும் அணியவும்.

◆ கண் புருவங்களின் வடிவத்தை மாற்றிப் பாருங்கள்.

◆ தொடர்ந்து தங்க நகைகளையே அணியாமல் வெள்ளி, பிளாஸ்டிக் அணிகளையும் உபயோகியுங்கள்.

◆ உதட்டிற்கும் நகங்களுக்கும் சாயம் பூசும் பழக்கம் இருந்தால், அபூர்வமான நிறங்களை ஒருமுறை பூசிப் பாருங்கள்.

தோற்றத்தில் மாற்றம் செய்வது அழகில் ஏற்றம் காண உதவும்.

## குடியிருக்கும் வீடு சொர்க்கமாகிறது!

**நா**ம் வாழும் வீடு எப்போதும் சுத்தமானதாகவும், அமைதியானதாகவும் இருக்க வேண்டியது அவசியம். தேவையில்லாத பழைய பயன்படுத்தாத பொருட்களையும், அளவுக்கதிகமான தட்டுமுட்டுப் பொருட்களையும் வீட்டில் சேராது பார்த்துக் கொண்டு, வீட்டையும் சீராக வைத்துக் கொண்டால் உன்னதமான சூழல் உருவாகிவிடும்.

◆ நமது இல்லங்கள் லக்ஷ்மி கடாட்சம் நிறைந்தவையாக இருக்க வேண்டும். எனவே வீட்டுப் பராமரிப்பு, சுத்தம் செய்தல், சமையல் போன்ற வேலைகளைக் கடமை என்று நினைத்துச் செய்யாமல் விருப்பத்துடனும் ஆர்வத்துடனும் செய்யுங்கள்.

◆ தலைவாசலுக்கு மிக அருகில் வெளியிலோ அல்லது உள்ளேயோ செருப்புகளைக் கழட்டி விடாதீர்கள். அவை பல இடங்களுக்குச் சென்று வந்தவை.

எனவே அவற்றை வாசலுக்கு வெளியிலேயோ அல்லது பல்கனியிலோ மறைவாக வைப்பது நல்லது.

◆ வரவேற்பறை விருந்தினர்களை வரவேற்கத் தக்க நிலையில் இருக்க வேண்டும்.

இருக்கின்ற பொருட்களைப் பளிச் சென்று சுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள். திரைச் சீலைகள், அழுக்குகள் அதிகம் சேரும் அளவுக்கு விட்டு வைக்காமல் முறையாகத் துவைத்துப் பராமரியுங்கள். முடியாத பட்சத்தில் வீண் ஆடம்பரத்துக்காக அவைகளை மாட்டாதீர்கள்.

◆ மேசை மீது வேலை செய்வதற்கான இடத்தைச் சுத்தமாக ஒதுக்கி புத்தகங்களையும், பென்சில், பேனாக்களையும் ஒழுங்காக அடுக்கி வைத்தால் குடும்பத்தினருக்கு சிந்தனை தெளிவாகவும், ஒழுங்காகவும் இருக்கும்.

படிக்கும் பிள்ளைகளுக்கு இதை அடிக்கடி வலியுறுத்தி அவர்களை இப்பழக்கத்திற்குக் கொண்டுவர வேண்டியது மிகவும் அவசியம்.

◆ காலையில் எழுந்தவுடன் முதற் காரியமாக படுக்கையைச் சரி செய்துவிட்டு மற்றைய காரியங்களைக் கவனியுங்கள்.

தலையணை உறை, போர்வை, படுக்கை விரிப்பு ஆகியவற்றை அடிக்கடி துவைத்து மாற்றுங்கள்.

◆ கண்ணாடி மேசையில் (Dressing Table) உள்ள முடிந்து போன கண்மை டப்பா, காய்ந்து போன நகப்பூச்சுப் போத்தல், கண்ணாடியில் ஒட்டப்பட்டுள்ள பொட்டு, சீப்பிலே இருக்கின்ற முடி ஆகியவற்றைத் தினமும் நீக்கிச் சுத்தம் செய்வதைப் பழக்கமாக்கிக் கொள்ளுங்கள்.

◆ அலுமாரியில் உடைகளை அழகாக இடைவெளி விட்டு அடுக்கி வையுங்கள். எதையும் தேடி எடுக்க வேண்டும் என்றில்லாமல் கண்கள் தேடும் போது அவை கைகளில் கிடைத்துவிடுமாறு வைப்பது நல்லது.

◆ குளியலறையை மிக, மிகச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். மலசல கூடமும் சேர்ந்திருப்பதால் சுத்தமாகவும், வெளிச்சத்துடனும், காற்றோட்டத்துடனும் வைத்திருக்க வேண்டும்.

◆ சமையலறை மிகவும் உன்னதமான இடம். எனவே சமையலறையில் தேவையில்லாத சாமான்களை அவ்வப் போது அகற்றிப் பளிச் சென்று வைத்திருக்க வேண்டும்.

சமையல் முடிந்தவுடன் உபயோகப் படுத்திய பொருட்களைச் சுத்தப்படுத்த வேண்டும்.

அடுப்பைத் தினமும் சுத்தப்படுத்த வேண்டும். எண்ணெய்ப் பிசுக்கோடும், கொட்டிய, ஒட்டிய உணவுப் பொருட்களோடும் இருக்க விடக்கூடாது.

◆ சாப்பாட்டு மேசையை எப்போதும் துடைத்துச் சுத்தமாக வையுங்கள். சாப்பிடும் பொருட்களைத் தவிர கண்ட, கண்ட பொருட்களைச் சேர்த்து வைக்காதீர்கள்.

◆ தேவையில்லாத பொருட்களைச் சேர்த்து வைக்காமல் அவ்வப்போது அவற்றை அகற்றி விடுங்கள்.

இப்படிச் சொல்வது சிலருக்குத் தேவையில்லாத விஷயமாகத் தெரியலாம். இதற்கு முக்கிய காரணம் சோம்பல்.

மேற்கூறியவற்றை நாம் கடைப் பிடித்தால் வீடு சொர்க்கமாக இருக்கும். அதில் குடியிருக்கும் எல்லோருக்கும் சொர்க்க சுகானுபவம் கிடைக்கும்.



## கணவன் இப்படி முடிவு எடுத்தால் எப்படி?

**மா**லதி அலுவலகத்தில் இருந்து வரும் முன்பே அவள் கணவன் சுரேன் வீட்டிற்கு வந்திருந்தான்.

முகம் கழுவி விட்டு மாலதி வரும் போதே சுரேன் ஏதோ சொல்லப் போகிறான் என்பதை ஊகித்துக் கொண்டாள்.

''மாலதி நீ வேலையை விட்டால் என்ன? நான் சம்பாதிப்பது போதாதா? நமக்கு குழந்தைகள் பிறந்தால் நீ வேலைக்கும் போய்க் கொண்டு எப்படி? என்று தன் திட்டத்தை கேள்விகளாகவே கூறி முடித்தான்.

மாலதி அமைதியாக இருந்தாள். அன்றிலிருந்து தினந்தோறும் அதே நச்சரிப்பு.

வேறு வழியின்றி மாலதி ஒரு முடிவிற்கு வந்தாள். தன் வேலையை இராஜினாமாச் செய்தாள்.

சுரேனிற்கு ஒரே பெருமை தன் சொற்படி நடக்கும் மனைவியை அடைந்த மகிழ்ச்சியில் அவன் மிதந்தான்.

வருடங்கள் உருண்டோடின. மாலதிக்கும் சுரேனிற்கும் இரண்டு குழந்தைகள்.

அன்று சுரேன் அலுவலகத்திலிருந்து வந்து சற்று இளைப்பாறும் தருணம் பார்த்து மாலதி பேசினாள்.

''பிள்ளைகளுக்கு ஸ்போட்ஸ் மீட் பணம் கேட்டனுப்பி இருக்கிறார்கள்''. சுரேன் பெரு மூச்சு விட்டான்.

''இப்ப சரியான செலவுகள். நாளுக்கு நாள் சாமான் விலை கூடுகிறது. நீயும் சேர்ந்து வேலைக்குப் போனால் தான் சமாளிக்க முடியும்''.

மாலதிக்கு சிரிப்பும், கோபமும் ஒன்றாக வந்தன. தலையை அடித்துக் கொள்ள வேண்டும் போல் இருந்தது.



# கணவனின் கண் இந்தப் பெண்
# ஆமாம், வித்தியாசமானவர்!

இது வித்தியாசமான பார்வையில்நடந்த ஒரு வியத்தகு கல்யாணம்.

கண்பார்வையற்ற தமிழ் விரிவுரையாளர் வீரையனின் கண்ணாக இருப்பவர் அவருடைய மனைவி கார்த்திகாதேவி. காந்தக்கண்களும் கவர்ச்சிப் பார்வையும் உடையவர் அவர்.

வசதியான குடும்பத்தில் பிறந்து வசதியாக வாழ்பவர். இவர் ஏன் கண்பார்வையற்ற ஒருவரைக் கணவராகத் தேர்ந்தெடுத்தார்? அதில் ஏன் பெருமைப்படுகிறார்? மகிழ்ச்சியும் அடைகிறாரே! எப்படி?

இவற்றையெல்லாம் அறிய எவருக்கும் ஆவலாகத்தான் இருக்கும்.

வீரையன் கண்பார்வையற்றோர் பாடசாலையில் கல்வி கற்கத் தொடங்கி பி.ஏ.பட்டப்படிப்பு, எம்.ஏ.ஏ.எம்.பில் படிப்பு ஆசிரியர் பயிற்சிக்கான பி.எம். எட். படிப்பு எல்லாம் படித்துவிட்டு இப்போது பி.எச்.டி ஆய்வுத்தேர்வுக்குத் தோற்றும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்.

கார்த்திகாதேவியும் சும்மா அல்ல, பி.எஸ்.சியில் உடல்நலம் பேணுதல் மற்றும் மருத்துவமனை நிர்வாகம் பற்றிய பட்டப்படிப்பைமுடித்துக் கொண்டவர். அதன் பிறகு மருத்துவ சென்டரில் தொழில் புரிந்தவர்.

அப்படிப்பட்டவர் கண்பார்வையற்றவரை மணம் விரும்பித் திருமணம் செய்து கொண்டது எப்படி? காதலா? கிடையாது. பெற்றோர் ஒழுங்கு செய்த திருமணம் இது.

இந்தத் திருமணத்திற்குச் சம்மதிக்கும் படி பெற்றோரால் வற்புறுத்தப்பட்டாரா? இல்லை. மாறாக உற்றார், உறவினர்கள் இந்தத் திருமணம் வேண்டவே வேண்டாம் என்று ஒற்றைக்காலில் நின்றார்கள்.

கார்த்திகா கேட்கவில்லை. நான் முடிவு செய்தால் முடிவு செய்ததுதான். அவரைத்தான் (வீரையனை) திருமணம் செய்து கொள்வேன் என்று ஒரேயடியாகச் சொல்லிவிட்டார்.

அப்படியானால் இது தியாகமா? கார்த்திகாவிடமே கேட்டுவிடுவோமே.

'' எங்கள் திருமணத்தில் தியாகம் என்ற பேச்சுக்கே இடமில்லை'' என்கிறார் கார்த்திகா தேவி.

''வீரையன் பார்வையற்றவர் என்றாலும் ஒரு கல்லூரி விரிவுரையாளர்.நல்ல வருமானம், எதிர்காலம் பற்றிப் பயம் இல்லை. இந்த அடிப்படையில்தான் அவரை மணக்கச் சம்மதித்தீர்களா?''

''இந்தக் கேள்விக்கு இடமில்லை. உண்மையில் அவரைப் பார்த்தபோது அவர் பார்வையற்றவர் என்ற உண்மை எனக்குத் தெரியாது.

அதெப்படி?

''உண்மைதான், தனக்கு மணப்பெண் தேவை என்று அவர் பத்திரிகையில் வெளியிட்ட விளம்பரத்தை அப்பாதான் என்னிடம் காட்டினார். அவருக்குச் சிறு ஊனம் இருப்பதாக


கண் பார்வையற்ற தன் கணவருக்கு உணவு ஊட்டி மகிழ்கிறார் கார்த்திகா.

அப்பா சொன்னாரே தவிர அவர் கண் பார்வையற்றவர் என்று சொல்லவே இல்லை.


அப்படியானால் அவர் பார்வையற்றவர் என்பதைத் தெரிந்து கொண்டபோது அதிர்ச்சியாக இருக்கவில்லையா?

எங்கள் குடும்பம் தந்தை பெரியாரின் இயக்கத்தில் ஈடுபாடு கொண்டது. அதனால் எனக்குள்ளும் அந்த ஈடுபாடு நிலைத்திருக்கிறது. வாழ்க்கையின் எந்தவொரு நிலைக்கும் நாம் பக்குவப்பட வேண்டும் என்ற எண்ணம் எனக்குண்டு ''நாம் ஏதாவது சாதித்தாக வேண்டும். அதன் மூலம் நாம் சார்ந்த இயக்கத்துக்குப் பெருமை சேர்க்க வேண்டும் என்ற எண்ணம் எனக்குள் வலுப்பெற்றிருந்த நேரத்தில் வந்ததுதான் இந்த சம்பந்தம்.

இந்த நிலையில் மாப்பிள்ளை பார்க்கப் புறப்பட்டோம். விருத்தாசலம் போய் மாப்பிள்ளை வீட்டை அடைந்த நேரத்தில் கூட அவரது பார்வையற்ற நிலை எனக்குத் தெரியாது.

மாப்பிள்ளை வீட்டில் அவரை அறிமுகப்படுத்திய நேரத்தில், ஒரு கல்லூரிப் பேராசிரியரின் கம்பீரம் மட்டுமே என் கண்ணில் பட்டது.

அப்போதுதான் அவர் அந்த விஷயத்தை உடைத்தார். ''எனக்குப் பார்வை கிடையாது என்பதைத் தெரிந்து கொண்ட பிறகும் என்னைப் பற்றித் தெரிந்து கொள்ள வந்த உங்கள் பரந்த மனசுக்கு நன்றி'' என்றார்.


கணவருடன் கார்த்திகா

இப்படிச் சொன்னதும் எனக்கு தூக்கிவாரிப் போட்டது. அந்த அதிர்ச்சியை ஜீரணிக்க முடியாமல் திணறிய நேரத்தில், அவரது குடும்பத்தார் அவரது குணநலன்கள், சின்சியாரிட்டி உள்ளிட்ட பல விஷயங்களைச் சொன்னார்கள். அதோடு பார்வையில்லாத நிலையில் அவராக முயன்று கல்லூரிப் பேராசிரியர் என்ற நிலைவரை தன்னை மேம்படுத்திக் கொண்டிருப்பது எனக்கு அவர்மீது ஒரு தனி மரியாதையை ஏற்படுத்தியிருந்தது.

நாங்கள் வந்திருப்பதை எப்படியோ தெரிந்து கொண்ட அவரது கல்லூரி ஆசிரியர்கள் சிலர் என்னைப் பார்த்துப் பேசினார்கள். அப்போது அவரது நல்ல பழக்க வழக்கங்கள் எவர் மனதையும் புண்படுத்த விரும்பாத குணம் பற்றியெல்லாம் சொன்னார்கள்.

இதெல்லாம் நடந்து முடிந்த நேரத்தில் எனக்கு அவர் பார்வைக்குறைவு ஒரு குறையாகவே தெரியவில்லை. முழு மனதோடு என் சம்மதத்தைத் தெரிவித்தேன்.

''உடனே திருமணத்திற்கு நாள் பார்த்துவிட்டீர்களா?

''அப்படி நடந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்? நாங்கள் வேறு சாதி, அவர் வேறு சாதி எனவே கலப்புத் திருமணம் நடக்கப்போகிறது என்பதைத் தெரிந்துகொண்ட எங்கள் உறவினர்கள் பலத்த எதிர்ப்புக் காட்ட ஆரம்பித்தனர். எப்படிக் கல்யாணத்தை நடத்துவீர்கள் பார்க்கலாம் என்று வரிந்து கட்டியவர்களும் உண்டு.

என்னையே வந்து கலைத்தவர்களும் உண்டு. உடலில் வேறு ஏதாவது குறைகள் இருந்தால் கூடப் பரவாயில்லை. பார்வை இல்லாதவரைக் கட்டிக்கொண்டு என்ன செய்ய முடியும் உன்னால்? என்று கேட்டவர்களும் உண்டு.

எல்லோருக்கும் ஒரே பதில் தான் சொன்னேன். 'என் முடிவில் எந்த வித மாற்றமும் இல்லை' என்பது தான் அந்தப் பதில்.

ஊனமுற்றவர்களும் நம்மைப்போன்று மனிதர்கள் தான். அவர்களை நாம் மதித்து நடக்க வேண்டும். அவர்களிடம் என்ன குறை என்று பார்ப்பதை விட எது நிறை (வானது) என்றே பார்க்க வேண்டும் என்ற எண்ணம் மனதில் எப்போதோ வேரூன்றிவிட்டது.

பார்வையற்ற ஒருவர் தன் விடா முயற்சியால் எட்டிய நிலையை எண்ணிப்பார்த்த போது, நான் ஏதோ தியாக உணர்வால் தான் அவரை மணக்கச் சம்மதித்தேன் என்ற பேச்சுக்கே இடமில்லை.

''கணவருடன் வெளியே செல்லும் போது உங்கள் உணர்வு எத்தகையது?''

''எனக்கு அவரது பெருமை, சிறப்புத் தெரியும். ஆனால் எதிரில் எங்களைப் பார்க்கிறவர்களுக்கு அவரது குறை மட்டுமே தெரிகிறது. அதனால் என்னைப் பார்ப்பவர்களின் பார்வை அனுதாபப்பார்வையாக மாறிவிடுகிறது. ஆரம்பத்தில் இது என்னை சங்கடப்படுத்தினாலும் இப்போது பழகிவிட்டேன். அப்படிப்பட்டவர்களின் பார்வையைப் பொருட்படுத்துவதில்லை, அது அனுதாபப் பார்வையாக இருந்தாலும்''.

''கணவர் பற்றி?''

''மென்மையானவர். அதிர்ந்து பேசத் தெரியாதவர். என் மீது உன் பார்வை பதிந்த பிறகு நான் இன்னும் உயர்ந்து நிற்கிறேன்'' என்று அவர் சொன்னபோது அவரது மனத்தின் உயரம் தெரிந்தது. எனக்கு இப்படி ஒரு கணவர் அமைய நான் நிச்சயம் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

''கணவருடன் முதலமைச்சர் கருணாநிதியை சந்தித்த அனுபவம் எப்படி?''

''எங்கள் திருமணம் முடிந்த நேரத்தில் நாங்கள் இருவரும் சேர்ந்து எடுத்த முதல் முடிவு, சென்னை சென்று முதலமைச்சரைப் பார்ப்பது. அதன் படியே நான், எனது கணவர், எனது பெற்றோர் என்று 4 பேர் சென்னைக்குச் சென்றோம்.

உள்ளே வரவழைத்து எங்களை வாழ்த்தினார். அன்று முதல்வரின் பிறந்தநாள். அதனால் அவரை எனது தமிழில் பாராட்ட விரும்பினேன்.

''அய்யா... உங்கள் நடை தளர்ந்தாலும் தமிழ் உரை நடை தளராது. உங்கள் திறமையான ஆட்சிக்கு எங்கள் பாராட்டு. உங்கள் பிறந்த நாளுக்கு எங்கள் வாழ்த்து'' என்று சொன்னேன்.

இதைக்கேட்டதும் முதலமைச்சர் மகிழ்ந்து போனார். ''பெரியாரின் கொள்கைப்பற்றுக் கொண்ட குடும்பப் பெண்ணுக்கு பேசக் கற்றுக்கொடுக்கவா வேண்டும்?'' என்று பாராட்டினார்.

''முதலமைச்சரைப் பார்த்து விட்டீர்கள் இனி ஏதாவது அரசு வேலை கிடைத்தால் பார்ப்பீர்களா?''

''ஏன் பார்த்தால் என்ன?''

''கணவரைக் கவனிக்க வேண்டியிருக்குமே''

அவர் வேலைக்குப் போகிறவர். மாலையில் அவர் வீடு வரும் நேரத்தில் நானும் தான் வேலை முடித்து வீட்டில் இருப்பேனே.

இப்போது இரண்டு பக்க உறவினர்களும் உங்கள் வீட்டுக்கு வருகிறார்களா?

''வருகிறார்கள். அவர்களில் சிலருக்கு இன்னும்கூட இது நிஜந்தானா என்ற அதிர்ச்சிப் பார்வை போகவில்லை. தவிரவும் எங்கள் தேவைக்கு நாங்கள் யாரையும் நம்பி இல்லையே.''

''பார்வையற்ற ஒருவரை மணந்து கொண்டபிறகு அந்தக் குறையுள்ளவர்கள் பற்றி உங்களுக்கு என்ன தோன்றுகிறது?''

''அவர்கள் நம்மிடம் உதவி எதையும் எதிர்பார்க்கவில்லை. அதே நேரம் அனுதாபத்தை விரும்பவே இல்லை. 'எங்களுக்கான வேலைகளைத் தடையின்றிச் செய்ய எங்களை , எங்கள் போக்கில் விடுங்கள்' என்பதே அவர்களின் விருப்பம். நிச்சயமாக நம் அனுதாபப் பார்வை அவர்கள் மீது இல்லாமல் இருந்தாலே அவர்களின் சாதனைப் பணி தொடர்ந்துகொண்டிருக்கும்.''

''கணவர் விஷயத்தில் இந்த அனுதாபம் எப்படி?''

''ஆரம்ப நாட்களில் அவர் இது மாதிரி ரொம்ப பாதிக்கப்பட்டு இருக்கிறார். அவர் தங்கிப் படித்த விடுதியில் மொத்தம் 300 பேரில் 50 பேர் பார்வையற்றவர்கள். மற்றவர்கள் இவர்களை ஒருவித தாழ்வு மனப்பான்மையுடனேயே நடத்தியிருக்கிறார்கள். இவரோ படிப்போடு பேச்சுப்போட்டியிலும் கலந்துகொண்டு பல பரிசுகள் பெற்றிருக்கிறார். 100 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் ஒரு முறை வென்று பரிசுபெற்றதாகச் சொன்னார். சாதிக்கத் துடிப்பவர்களுக்கு எதுவுமே தடையில்லை என்பதை இவர் விஷயத்தில் தெளிவாகவே உணர்ந்து கொண்டேன்.

இன்னொரு விஷயம். பிறக்கும் போது என் கணவர் குபேர குடும்பத்தில் பிறக்கவில்லை. சாதாரண ஏழை விவசாயக் குடும்பம்தான் அவருடையது. பார்வையில்லை என்ற காரணத்துக்காகத் தன்னை அவநம்பிக்கைக் கூட்டுக்குள் அடைத்துக்கொண்டுவிடாமல், முயன்று முன்னேறினார் பாருங்கள்.... இந்த வீம்பு முயற்சிதான் எனக்கு அவரிடம் ரொம்பவே பிடித்திருக்கிறது.''

''கணவரால் உங்களைப் பார்க்கமுடியவில்லையே என்ற ஆதங்கம் உங்களுக்குள் இருக்கிறதா?''

''இல்லேங்க...அது மனசு சம்பந்தப்பட்ட விஷயம். ஒருத்தர் மனசை இன்னொருத்தர் புரிஞ்சு வெச்சிருந்தோம். உருவங்கள் பத்தின சிந்தனை இல்லாம நேசிக்கிற நேசம் எவ்வளவு உயர்வானது தெரியுமா. அனுபவிச்சுப் பார்த்தவங்களுக்கு மட்டுமே அது தெரியும்.'' என்றார் கார்த்திகாதேவி.

அவர் ஒரு வித்தியாசமான பெண். இல்லையா?

வீரையனின் சொந்த ஊர் தமிழ்நாடு சிவகங்கை மாவட்டம் காரைக்குடிப் பகுதியில் உள்ள சிறுசாக்கவயல் கிராமம்.

கார்த்திகாதேவியின் சொந்த ஊர் பட்டுக்கோட்டை

# அரசியல் அம்பலம்



புலிகள் இயக்கத்தைத் தடை செய்யக் கூடாது என்றும், தடை செய்வதனால் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஏற்படக் கூடிய தடங்களைப் பற்றி பிரிட்டிஷ் பிரதமர் டொனி பிளேயரிடம் நேரில் விளக்கவும் தமிழ் முஸ்லிம் கட்சிகளின் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளிடையே புரிந்துணர்வு ஏற்பட்டிருக்கிறதாம்.

பிரிட்டிஷ் தூதரகத்துக்குச் சென்று இவ்விடயங்கள் குறித்து பிரிட்டிஷ் பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என்று இக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழ்க் கட்சிகளின் முக்கிய பிரமுகர்கள் சிலர் வேண்டுகோள் விடுத்திருப்பதாகத் தகவல்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான முயற்சிகளில் தற்போது ஏற்பட்டுள்ள சந்தர்ப்பத்தைத் தவற விட்டால் இனி எந்தக் காலத்திலும் இப்படியான ஒரு வாய்ப்பு வருமா?

தமக்கிருக்கும் இந்தச் சந்தேகத்தை இவர்கள் பிரிட்டிஷ் தூதரகத்தில் சுட்டிக் காட்டியிருப்பதாகத் தமிழ்க்கட்சி வட்டாரங்களில் பேச்சு அடிபடுகிறது.

தமிழ் முஸ்லிம் கட்சிகளின் இவ்வேண்டுகோள் குறித்து உடனடியாக உரிய இடத்துக்கு அறிவித்து நடவடிக்கை எடுப்பதாக உறுதியளிக்கப் பட்டிருக்கிறது.

அதே நேரம் பிரிட்டனுக்குச் சென்று பிரதமர் டொனி பிளேயருடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான செலவுகள் மிக அதிகமாக இருப்பதனால் குறைந்த பட்ச உறுப்பினர்கள் மட்டும் செல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படலாம் என்று சொல்லப்படுகிறது.

## விட்டுக்கொடுத்த காரணம்

இணைத்தலைமை விவகாரத்தில் அதிகம் பிடிவாதம் காட்டியதற்கு தாய்க்குலத்தலைவி அப்போது கூறிய காரணங்கள் உண்மை அல்லவாம்.

சட்டத்தரணியாரின் இல்லத்தில் நடைபெற்ற பேச்சுக்களின் போது அருமந்த புத்திரரின் எதிர் காலம் குறித்து தலைவியின் கவலைகள் வெளிப்படுத்தப்பட்டன. அது மட்டுமின்றி தந்தையின் வழியில் மகனையும் ஆற்றுப்படுத்த வேண்டும் என்ற விருப்பமும் வெளிக்காட்டப்பட்டதாம்.

ஆனால் சட்டம் தெரிந்த இடைநிலையாளர் வேறு விதமாகச் சிந்தித்து விளக்கிய காரணங்களினால்தான் அம்மணியின் மனம் விட்டுக் கொடுக்கத் தயாராகியது என்று தகவல் கசிகிறது

இணைத் தலைமைக்காரர்கள் இருவரும் மலையகப் பகுதியைச் சேர்ந்தவர்கள். இருவரில் ஒருவர் விட்டுக் கொடுக்க வேண்டிய வலுவான காரணம் இருக்கிறது.

தாய்க்குலத்தலைமை கட்சியில் இருந்தால் ஒரு பிரச்சினை. இறைவனின் வாள் எனப் பொருள்படும் கிழக்கு மாகாண முன்னாள் பிரதியமைச்சர் தலைமையிலான குழு தொல்லை கொடுக்கும். அந்தப் பிரதியமைச்சர் தாய்க்குலத்தலைமையிடம் இருந்து பதவியை எப்படியாவது பறித்துவிடலாம். அப்படி நடந்தால் இரு தலைமைக்காரர்களுக்கு இறுதியில் தலைமைத்துவப் பதவி இல்லாமலே போய்விடும். இப்படிக் காரண காரியங்களுடன் விளக்கியதனாலேயே இணைத்தலைமையை விட்டுக்கொடுக்கத் தாய்க்குலத் தலைவி இணங்கினாராம்.

## வாயடைப்பு ஏன்?

நடை பயின்று வந்த பச்சை அரசியல் கட்சி முக்கியமான காலகட்டத்தில் தமிழ் மக்கள் பிரச்சினைகள் பற்றி வாயே திறக்காமல் இருப்பதை தமிழ்க் கட்சிகள் கண்டு கொள்ளாமல் இருக்கின்றன என்று ஒரு சில தமிழ்க் கட்சி உறுப்பினர்கள் குறைப்பட்டுக் கொள்கிறார்கள்.

பச்சைக் கட்சி இப்படி நடப்பதற்குக் காரணம் என்ன? கடைசி நேரத்தில் நன்மையாக ஏதும் நடக்க இருந்தால் அதைக் குழப்புவது தான் அந்தக் கட்சியின் நோக்கமாகும். இது பற்றி ஒரு கட்சியின் செயலர் இப்படிச் சொன்னார்.

"பேச்சுவார்த்தை விவகாரங்களின் அடுத்தகட்ட நடவடிக்கை என்ன என்று அறிந்து, உண்மையான பேச்சுவார்த்தை ஆரம்பமாகப் போகிறது என்று தெரிந்து பச்சைக் கட்சியுடன் பேசினால் தான் அர்த்தம் இருக்கும்".

வருமுன் காப்போம் என்று இல்லாமல் வந்தபின் கூப்பாடு போடுவதா என்று கேட்கிறார்கள் குறைப்பட்டுக் கொள்வோர்.

## விடுபட்ட மூத்த தலைவர்

தலைமைப்பதவிகளில் ஒன்றைத் தாங்கி நிற்கும் மூத்த உதவித் தலைவரை அங்கீகரிப்பது மாதிரி அங்கீகரித்து அப்படியே குப்புறத்தள்ளிவிடும் நோக்கில் முஸ்லிம் காங்கிரஸ் அதிகாரமற்ற அங்கத்தவர்கள் செயற்படுகிறார்களாம்.

ஐந்து நட்சத்திர ஹோட்டலில் சந்தித்துப் பேசிய முஸ்லிம் காங்கிரஸ் காரர்களின் அதிகார மன்ற உறுப்பினர்கள் உதவியாளனான மூத்த தலைவரை வேண்டுமென்றேதான் கூட்டத்துக்கு அழைக்கவில்லையாம்.

"வீண் பிடிவாதக்காரர். எங்களுடன் ஒத்து வருவாரா என்று எங்களுக்குச் சந்தேகம். வைத்தியரான வெப்பையும். இவரும் 'அன்கண்டிசனல் சப்போர்ட்' என்று தான்தோன்றித்தனமாக அறிக்கை விட்டதனால்தானே அதிகாரத்தரப்பினருடன் பேரம் பேச முடியவில்லை. அதனால் தான் வேண்டுமென்றே அவரை அழைக்கவில்லை.

ஏன் அழைக்கவில்லை என்று அவர் எங்களிடம் கேட்டால் எங்களிடம் பதில் இருக்கிறது.

"நீங்கள் மூத்த துணைத்தலைவர் நாங்கள் எம்.பிமார்கள் மட்டுமே கூடிப்பேசுகிறோம்" என்று கூறி விடுவோம் என்று நக்கலாகச் சொன்னார் ஒரு பிரதியமைச்சர்.

## உத்தேச இந்தியப் பயணம்

தமிழ்க்கட்சிகளின் தற்போதைய கூட்டமைப்பு இந்தியாவில் பெரும் தலைகளைச் சந்திக்க ஆர்வம் கொண்டிருந்தது. அடைக்கல மானவரும், அன்புச் சந்திரனும்தான் இதற்குப் பொறுப்பானவர்களாக நியமிக்கப்பட்டனர். ஆனால் அது இப்போதைக்கு சாத்தியமில்லையாம்.

"இந்தியாக்காரர்களுக்கு இப்போது இலங்கைப் பிரச்சினையில் அவ்வளவு நாட்டமில்லையாம். இப்போது தமிழ்நாடு சட்டசபைத் தேர்தல் சூடு அங்கு பரவியிருக்கிறது. கூட்டுக்கள் அமைப்பது, பேச்சுவார்த்தைகள் நடத்துவது என்று அவர்கள் ஏகப்பட்ட பிஸி"

இப்படித்தான் இவர்களது சென்னைப் பிரதிநிதிகள் தகவல் அனுப்பி இயலாமைக்குக் காரணம் தெரிவித்திருக்கிறார்கள்.

## மதமும் தேசிய மயமா?

நாட்டில் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பதிலாக பிரச்சினைகளில் இருந்து மக்களை ஏமாற்றித் திசை திருப்புவதற்குத் தான் எத்தனையோ வழிகள்.

தேசிய மீலாத் விழா என்று தேசிய ஐக்கியத்துக்கு கொண்டு வரப்பட்ட விடயம் ஒரு இனத்துக்குள்ளேயே பிரதேச வேற்றுமையை வளர்த்ததைப் பழைய சம்பவமாகக் கருதலாம்.

தேசிய தைப்பொங்கல் விழா எட்டியாந்தோட்டையில் நடந்தது போல வடக்கு முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவதாகக் கூறிக் கொள்ளும் பிரதியமைச்சர் பாலாவியில் தேசிய ஹஜ் ஜுப் பெருநாளைக் கொண்டாடத் தடல் புடலாக ஏற்பாடுகளைச் செய்கிறார்.

ஆனால் பாலாவியில் தேசிய ஹஜ்ஜுப் பெருநாள் விழா கொண்டாடப்படும் போது வடக்கு முஸ்லிம்களுக்கு என்ன செய்யப்படவுள்ளது என்று சில முக்கியஸ்தர்கள் கேள்வி எழுப்பியுள்ளார்கள். பதில் இன்னும் கிடைக்கவில்லையாம்.

கோபம் கொண்டிருக்கும் இவர்கள் இப்படிக் கூறுகிறார்கள். "இவர்களை இப்படியே விட்டுவிட்டால் கடைசியில் இப்படித் தேசிய ஜும்மாத் திருநாள், தேசிய அசர் திருநாள், தேசிய மஹ்ரிப் திருநாள்..... என்றெல்லாம் திருநாள் நடத்தி இஸ்லாத்தையே தேசிய மயமாக்கி விடுவார்கள்"

## மகஜர்கள்

புலிகளைத் தடை செய்ய வேண்டாம் என்று பிரிட்டிஷ் காரர்களைக் கேட்டுக் கொள்வோர் மற்றும் மகஜர் அனுப்புவோர் ஆகியோரின் எண்ணிக்கை கூடிவருகிறது.

பிரிட்டிஷ் காரர்களும் கிடைக்கும் மகஜர்களுக்கு உடனுக்குடன் பதில் அனுப்பிவிடுவதில் அதிக கரிசனை காட்டுகிறார்களாம்.

பொது நலவாய செயலாளருக்கும் பிரிட்டிஷ் உள்துறை செயலாளருக்கும் மகஜர்களைக் கவனத்தில் கொள்ளுமாறு கேட்டு அவற்றை அனுப்பியிருக்கிறோம். ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கிறோம் என்று பதில்கள் வந்துள்ளனவாம்.

## முசல்மானின் கொதிப்பு

முசல்மானான அவர் கம்யூனிச சித்தாந்தங்களில் தான் ஊறிப் போயிருப்பதாகக் கூறுபவர். வடக்கு கிழக்கிலும் அமைச்சர் பதவி வகித்த அவர் முஸ். காங்பற்றிப் பேச வேண்டிய சூழ்நிலை ஏற்பட்ட போது கொதித்த கொதிப்பு இது.

"இவர்கள் என்ன தான் சாதித்தார்கள்? பதவிகளுக்காகத்தானே பேரம்பேசத் தயாராகிறார்கள். முக்கியத்துவம் குறைந்த ஒன்றுக்காகக் காலக்கெடு விதிப்பதைக் கைவிட்டு கிழக்கின் கைத்தறித் துணிக்கும் அறுவடை செய்த நெல்லுக்கும் உரிய விலையைக் கொடுக்காவிட்டால் பதவி விலகுவேன் என்று சொல்லத் தைரியம் இருக்குமா? கூடவே சிங்கள விவசாயிகளும் பின்னால் வந்திருப்பார்களே. நாரே தக்பீர் என்று கோஷமிட்டால் மட்டும் போதாது".

## காரைநகர் மணிவாசகர் சபை கடிதம்

'சுடர் ஒளி' 28-01-2001 இதழில் அரசியல் அம்பலம் பகுதியில் வந்த செய்திக் குறிப்பு ஒன்று சம்பந்தமாகக் காரைநகர் மணிவாசகர் சபை கடிதம் எழுதியிருக்கின்றது.

"மணிவாசகர் சபை கடந்த அறுபது வருடங்களாக அரசியல் கலப்பின்றிச் செயற்பட்டு வருகிறது. தொடர்ந்தும் அவ்வாறே செயற்பட விரும்புகிறது" என்று கடிதத்தில் சபைத் தலைவர் எம்.எஸ்.வேலாயுதபிள்ளையும் செயலாளர் து.நாகேந்திரனும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

# இரு தலைவர்களுடனும் அழுத்தக் குழு சந்திப்பு

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரஊப் ஹக்கீமையும், தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவி பேரியல் அஷ்ரப்பையும் ஒரே நேரத்தில் சந்தித்து கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் நிலை குறித்தும் செய்யப்பட வேண்டிய மாற்றங்கள் குறித்தும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படவுள்ளன.

முஸ்லிம் காங்கிரஸ் அழுத்தக்குழு என வர்ணிக்கப்படும் எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவே இப்பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பேச்சுவார்த்தைகள் எதிர்வரும் நாடாளுமன்றக் கூட்டத்துக்கு முன் நடத்தப்படவேண்டும் என்று தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. அநேகமாக 19ஆம், 20ஆம் திகதிகளில் இப்பேச்சுவார்த்தைகள் இடம் பெறலாம் என்று இனவிவகார, தேசிய நல்லிணக்க, கனிவள அபிவிருத்திப் பிரதியமைச்சர் நூர்டீன் மசூர் நம்பிக்கை தெரிவித்தார்.

இது தொடர்பாக பிரதியமைச்சர் நூர்டீன் மசூர் 'சுடர் ஒளி'க்கு மேலும் தெரிவித்ததாவது:-

முஸ்லிம் காங்கிரஸும், தேசிய ஐக்கிய முன்னணியும் சுய லாபங்களுக்காகப் போராடும் கட்சிகள் அல்ல. இவை மக்கள் உரிமைகளுக்காகப் போராடும் கட்சிகள். எனவே அந்த விஷயங்கள் தொடர்பாக கட்சித் தலைவர்கள் மத்தியில் அழுத்தம் கொடுக்கப்பட வேண்டியிருக்கிறது. இதற்காக அரசாங்கத்திடம் பேரம்பேசும் சூழ்நிலையை உருவாக்கவேண்டியிருக்கிறது. அம்பாறை கரையோரமாவட்டம், வடக்கு முஸ்லிம்கள் மீள் குடியேற்றம் போன்ற பல விடயங்கள் இச்சந்திப்பின்போது கவனத்தில் கொள்ளப்படும். இப்படி அவர் கூறினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பசீர் சேகுதாவுத் தெரிவித்ததாவது :-

எதிர்வரும் 22ஆம் திகதி முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் ஹஜ் யாத்திரைக்காக மக்கா செல்கிறார். அதற்கு முன்பு பேச்சுவார்த்தைகளை நடத்த அவர் இணக்கம் தெரிவித்திருக்கிறார்.

இரண்டு கட்சிகளின் தலைவர்களிடமும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உரிய மதிப்பு வழங்கப்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தவுள்ளோம்.

ஆயுதம் தாங்கிய குழுக்களுக்கு எம்.பி மாரின் முக்கியத்துவம் தெரிவதில்லை. ஜனநாயக அமைப்பான முஸ்லிம் காங்கிரஸின் நிலைமை வேறு. மக்கள் சக்திதான் கட்சியின் பலம். அந்த மக்கள் சக்தியைத் திரட்டித் தருபவர்கள் எம்.பிமார். அதனால் கட்சியின் எம்.பிமாருக்கு மதிப்பும் முக்கியத்துவமும் அளிக்கப்படவேண்டும்.

முஸ்லிம் காங்கிரஸ், தேசிய ஐக்கிய முன்னணி ஆகிய இரண்டு கட்சிகளின் தலைவர்களும் அமைச்சர்களாகவும் இருக்கிறார்கள். அமைச்சர்கள் என்ற வகையில் மேற்கொள்ளும் மக்கள் நலப்பணிகள் எம்.பிக்கள் ஊடாகவே மக்களைச் சென்றடைய வேண்டும். இதை அழுத்தக்குழு இரண்டு தலைவர்களையும் சந்தித்துப் பேசும்போது வலியுறுத்தும்.

சிறுபான்மைக் கட்சிகளைச் சேர்ந்த எம்.பிக்கள் செய்த சேவைகள் மழுங்கடிக்கப் பட்டதற்கும் அந்த நிலைமை தொடர்வதற்கும் எம்.பி மாரின் முக்கியத்துவம் உணரப்படாமையே காரணமாகும். இனப்பிரச்சினை தொடர்பான முக்கியமான காலகட்டத்தில் இருக்கிறோம். சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸின் "ஆயத்தப் படுத்தல்கள்" போதியனவாக இல்லை. இதுபற்றியும் தலைவர்களுடன் ஆராய்வோம்.

கட்சிகளை மீளமைத்துச் செயற்பட அடிமட்டத்தில் இருந்து புனரமைப்புச் செய்ய வேண்டியிருக்கிறது. அதற்கு முன்பாக தலைமைத்துவ மோதல்களின் பின் ஏற்பட்ட தீர்வை உறுதிப்படுத்தி நிரந்தரமாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இல்லாவிடின் இப்பிரச்சினை மீள மீள எழும் வாய்ப்பு இருக்கிறது.

எம்.பிமார்கள் சந்தித்து அழுத்தக் குழுவை உருவாக்கியபோது கட்சி யாப்பில் திருத்தங்கள் செய்வது பற்றிப் பேசப்படவில்லை. எனவே தலைவர்களுடனான சந்திப்பின்போது, முஸ்லிம் காங்கிரஸின் அதியுயர் பீடத்தில் எம்.பி மாருக்கு இடமளிப்பது பற்றிப் பேசப்பட மாட்டாது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.


அழுத்தக்குழுவில் முஸ்லிம் காங்கிரஸ்காரர்கள் - தேசிய ஐக்கியமுன்னணி எம்.பிக்கள் பதினொரு பேரில் 8 பேர் இடம்பெற்றிருக்கிறார்கள். மற்ற மூவரில் இருவர் இரண்டு கட்சிகளினதும் தலைவர்களாக இருக்கிறார்கள். ஒருவர் நியமன எம்.பி மருதூர்க்கனி. அவர் முஸ்லிம் காங்கிரஸின் சிரேஷ்ட உப தலைவர்.


சுடர் ஒளி

மட்டக்களப்பு மாநகரத்தில்
"சுடர் ஒளி" விநியோகஸ்தர்
V. ஏகாம்பரநாதன்
முருகேசு அன் பிரதர்ஸ்
33, மத்திய வீதி, மட்டக்களப்பு.

"சுடர் ஒளி" பத்திரிகை வாசகர்கள், அபிமானிகள், உப விநியோகஸ்தர்கள் ஆகியோரை மேற்படி விலாசதாரருடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.
- "சுடர் ஒளி" நிர்வாகம்.

# தமிழகத்தில் புது கூட்டணியால் குழப்பங்கள், கொந்தளிப்புகள்!



ராமதாஸ்

தமிழக அரசியலில் கடந்த வாரம் ஒரு திடீர் திருப்பம் ஏற்பட்டது. ஜெயலலிதாவுடன் ராமதாஸ் கூட்டு வியாபாரம் செய்ய வந்திருக்கிறார்

தேர்தல்கள் நடைபெறும் காலங்களில் எல்லாம் இடம்மாறும் பறவையாக மாறிவிடுவது ராமதாஸின் வழக்கமாக இருக்கிறது. "அரசியலில் நிரந்தர நண்பர்களும் இல்லை நிரந்தரப் பகைவர்களும் இல்லை" என்பது ஒரு சித்தாந்தம். இந்த சித்தாந்தத்தின் வழியில் வந்தவர் ராமதாஸ் எனலாம்.

கருணாநிதியின் அணியில் இருக்கும்வரை அவரை இந்திரன் சந்திரன் என்று போற்றினார் ராமதாஸ். இன்று திடீர் குத்துக்கரணம் அடித்ததும் அவரால் புகழ் மாலை சூட்டப்படுபவராக இருப்பவர் ஜெயலலிதா. "கேட்டதெல்லாம் தருவார் சகோதரி" என்று கூறியிருக்கிறார். அவர் கேட்டது என்ன என்பது எவருக்கும் தெரியாது.

ராமதாஸ் காலைவாரி விடுவார் என்பதைக் கருணாநிதி முன்னமே அறிந்திருந்தார் போலும். எனவே அவர் அவ்வளவு தூரம் பதற்றம் அடையவில்லை. பிரச்சினைக்குரிய மனிதர் தாமாகவே வெளியேறிவிட்டார். எனவே புதிய நண்பர்கள் தம்முடன் சேர்ந்து கொள்வார்கள் என்று தி.மு.க அணியினர் எதிர்பார்க்கிறார்கள்.

அவர்கள் ஆரத்தி எடுத்து வரவேற்பதற்குத் தகுதியானவராக மூப்பனார் இருக்கிறார். மூப்பனாருடன் சேர்ந்து தலித் பிரிவைச் சேர்ந்த விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவரான டாக்டர் திருமாவளவனும் வருவார் என்று எதிர்பார்க்கிறார்கள்.

ராமதாஸின் வரவினால் ஜெயலலிதா குதூகலம் அடைந்திருக்கிறார் என்பது என்னவோ உண்மைதான். ஆனால் அவர் அணியில் இடம்பெறும் சிலருக்குப் பதற்றமும் கொந்தளிப்பும் ஏற்பட்டிருப்பதை மறுக்க முடியாது.

இலங்கையில் விடுதலைப்புலிகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு வெளிப்படையாகவே ஆதரவு தருபவர் ராமதாஸ். ஆனால் ஜெயலலிதாவோ விடுதலைப்புலிகளுக்கு எதிரானவர். கருணாநிதி விடுதலைப்புலிகளின் ஆதரவாளர் என்று கூறி முன்னர் ஒரு தடவை மத்திய அரசாங்கத்தினால் ஆட்சி நீக்கம் செய்யப்பட்டவர்.

அதன் பின்னரும் கருணாநிதியைப் புலிகளுடன் சம்பந்தப்படுத்திப் பேசி வந்தவர் ஜெயலலிதா. கருணாநிதியுடன் ராமதாஸ் சேர்ந்தபோது கருணாநிதியை மீண்டும் விரட்டியடிக்க அதே கோஷத்தை எழுப்பியவர் ஜெயலலிதா.

ராமதாஸ் இன்று தமது அணிக்கு வந்த பின்னர் தமிழ் ஈழம் வேறு தனித் தமிழ் நாடு வேறு என்று வியாக்கியானம் கூறுகிறார் ஜெயலலிதா.

ராமதாஸ் அ.தி.மு.க அணிக்கு வந்ததன் மூலம் ஜெயலலிதாவிடமிருந்து பெருமளவு சலுகைகளை எதிர்பார்க்கிறார் என்பது புலனாகிறது. பாண்டிச்சேரியில் பாட்டாளி மக்கள் கட்சி ஆட்சி அமைக்க உதவினால் தமிழ் நாட்டில் ஜெயலலிதா ஆட்சி அமைக்க உதவி புரிவேன் என்று அவர் கூறியிருக்கலாம் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜெயலலிதாவுக்குத் தமிழகத்தின் மீதுதான் கண். எனவே பாண்டிச்சேரியைக் கை கழுவி விட அவர் சம்மதிக்கக் கூடும். ஆனால் அவர் அணியிலுள்ள இந்திரா காங்கிரஸ், தமிழ் மாநில காங்கிரஸ் ஆகியன அதனை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.

ராமதாஸ் பிரிந்து சென்றதால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்புவதற்காக மூப்பனாரைத் தமது அணிக்குள் இழுத்துக்கொள்ளப் பார்க்கிறார் கருணாநிதி. அதனால் மூப்பனாரின் கட்சிக்குள் பெரும் பரபரப்புத் தோன்றியுள்ளது என்னவோ உண்மைதான். கருணாநிதிக்குச் சார்பாக இருப்பவர் ப.சிதம்பரம்.

மூப்பனார் தமது கட்சியுடன் இந்திரா காங்கிரஸ் கட்சியையும் சேர்த்து தேர்தலைச் சந்திக்கவே விரும்புகிறார். ஜெயலலிதா அணியில் தொடர்ந்து இருந்தால் அந்த நோக்கம் நிறைவேறலாம். ஆனால் தி.மு.க அணியுடன் சேர மூப்பனார் முயன்றால் இந்திரா காங்கிரஸ் அதற்கு இணங்கப்போவதில்லை.

ஆனால் அதற்காகத் தொடர்ந்து ஜெயலலிதா அணியில் இருக்க அவர் முடிவு செய்தால் அவருடைய கட்சியில் பிளவு ஏற்படுவது தவிர்க்க முடியாதது. இவ்விதமே உதிரிக்கட்சிகள் சில அங்கே போவதா? இங்கே போவதா? என்று முடிவு செய்ய முடியாத நிலையில் இருப்பதாகத் தெரிகிறது.

தமிழ் மாநில காங்கிரஸ் மத்திய குழுக் கூட்டத்தில் சிதம்பரம் கலந்துகொள்ளவில்லை. அவருடைய ஆதரவாளர்கள் தி.மு.க அணியில் சேருவதன் மூலமே தமது கட்சிக்கு வெற்றியைத் தேடிக் கொள்ளலாம் என்று கூறியிருக்கிறார்கள். மூப்பனாரின் சட்டசபை உறுப்பினர்கள் சிலர் கருணாநிதியுடன் இரகசியத் தொடர்பு கொண்டிருக்கிறார்கள்.

மொத்தத்தில் ராமதாஸ் கட்சி விலகியதால் பெரும் நெருக்கடிக்குள்ளாகியிருப்பவர் மூப்பனாரே என்று சொல்லலாம்.

தி.மு.க எதிர்ப்பு அணியில் அனைவரும் ஒன்று கூடிப் பாடுபட்டால் கருணாநிதியை விரட்டியடிக்கலாம் என்பது ஜெயலலிதாவின் அபிலாஷை.

ஜெயலலிதா தேர்தலில் போட்டியிட முடியாது என்று தேர்தல் ஆணையாளர் தடுத்தால் அ.தி.மு.கவை அழித்துவிடலாம் என்பது கருணாநிதியின் ஆவல்.

அவ்விதம் தேர்தல் நியமனம் தமக்குக் கிடைக்காவிட்டால் அதனையே ஒரு பெரும் பிரச்சினையாக எடுத்து தமிழக மக்களின் மத்தியில் தமக்கு அனுதாபத்தைத் திரட்டிவிட ஜெயலலிதாவுக்கு பெருந் துடிப்பு.

இப்படியே இருவரும் பிரம்மப் பிரயத்தனம் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இருவருக்கும் இடையில்தான் மோதல். எனவே உதிரிக் கட்சிகள் எல்லாம் ஏதோ ஒரு அணியில் சேரவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.



மூப்பனார்

மூன்றாவது அணி ஒன்றை ஆரம்பித்து கடை பரப்பி வியாபாரம் செய்யும் நிலையில் எவரும் இல்லை. முதுகில் குத்தியவர்களையும் அரவணைத்துக் கொண்டு கோஷ்டி சேரவேண்டிய நிலை அனைத்துத் தமிழகக் கட்சிகளின் தலைவர்களுக்கும் இருக்கிறது. இது தமிழக மக்களின் தலையெழுத்து.

"எனது எதிரியின் எதிரி எனக்கு நண்பன்" என்ற கோதாவில் தமிழகத் தலைவர்கள் தேர்தல் காலக் கூட்டணிகளை அமைப்பார்கள். சாதி, மத ரீதியில் அரசியல் நடத்தும் கட்சிகளும் அங்கு அதிகம். எனவே இறுதி நேரம் வரை யார் ஒன்று சேருகிறார்கள்? யார் பிரிந்து நிற்கிறார்கள்? – இந்தக் கேள்விகளுக்கு விடை கிடைக்கப் போவதில்லை.

தமிழக அரசியலில் நடிகர் ரஜினி காந்துக்கு ஒரு வாக்கு வங்கி இருக்கிறது. அவர் யார் பக்கம் சேருவார் என்பது உடனடியாகத் தெரியவில்லை. மூப்பனாரும் கருணாநிதியும் ஒன்றிணைந்தால் ரஜினியின் பக்க பலம் அவர்களுக்குக் கிடைக்கக்கூடும்.

இல்லையேல் தி.மு.க எதிர்ப்பு சக்திகள் அனைத்தையும் தம்முடன் ஒன்று சேர்த்து ஆட்சியைப் பிடிக்கும் முயற்சியில் ஜெயலலிதா முன்னேறிச் செல்ல வாய்ப்பு இருக்கிறது.

–கதாசி–

# இரத்மலானை இந்துவின் பொன்விழா

இரத்மலானை இந்துக் கல்லூரி பொன் விழா நிகழ்வின் ஆரம்ப வைபவம் நடைபெற்றது. பொறுப்பனை சந்தியிலிருந்து பிரதம விருந்தினர்கள் மங்கள வாத்தியம் சகிதம் அழைத்து வரப்பட்டனர். மாணவ மாணவியர் வரிசையாக நின்று மலர்தூவி அவர்களை வரவேற்றனர். கல்லூரிவளாகத்தில் அமைந்திருக்கும் கற்பக விநாயகருக்கு விசேட பூசை இடம் பெற்றது.

கல்லூரியின் சிவகாமி மண்டபத்தில் தமிழ் வாழ்த்துடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. பிரதம அதிதியான இராமகிருஷ்ண மிஷன் சுவாமி ஆத்மகணானந்தஜி ஆசியுரை வழங்கினார். சுவாமி ரமண சைதன்யா, சந்திரசேகர சுவாமிகள் ஆகியோரும் ஆசிவழங்கினர்.

அகில இலங்கை இந்து மாமன்றச் செயலாளர் கந்தையா நீலகண்டன் சிறப்புரை ஆற்றுகையில் "ஒரு தாயின் சூலின் உருவாகியவையே பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியும் இரத்மலானை இந்துக் கல்லூரியும் என்றார்.

கல்லூரி அதிபர் ந.மன்மதராஜன் தனது உரையில் கல்லூரியின் வளர்ச்சிக்கு மேற்கொள்ளப்படும் பிரயத்தனம் பற்றி விளக்கினார்.

"மீண்டும் விஞ்ஞான ஆய்வுகூடத்தைத் திறக்கவுள்ளோம். மைதானமும் சீரமைக்கப்படவுள்ளது" என்று அதிபர் தெரிவித்தார்.

இராஜமனோகரி புலேந்திரன் தமது செலவில் கூடைப்பந்தாட்ட மைதானம் அமைத்துத் தருவதாகவாக்களித்தார்.

இந்துமாமன்றத்தலைவர் திரு.வி.கைலாச பிள்ளை பேசுகையில் "ஏழைமாணவர்களே அதிகம்பேர் இங்கு படிக்கிறார்கள்" என்றார்.

கம்பவாரிதி இ. ஜெயராஜ் தமது உரையில் கல்லூரி தேசிய கல்லூரியாக தரமுயர்த்தப்பட வேண்டும்" என்றார்.

பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி அதிபர் திரு. த.முத்துக்குமாரசுவாமியும் விழாவில் கலந்து கொண்டார்.

## குறிஞ்சிச் சாரல்

பேராதனைப் பல்கலைக்கழகத் தின் தமிழ்ச்சங்கம் வழங்கும் "குறிஞ்சிச் சாரல்" பல்சுவைக் கதம்ப நிகழ்ச்சி 17–02–2001 (சனிக்கிழமை) கொழும்பில் நடைபெறுகிறது.

பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு ஆரம்பமாகும் விழாவுக்கு பேராதனை பல்கலைக்கழக தமிழ்ச்சங்கத் தலைவர் வ.சுகந்தன் தலைமை வகிப்பார். பிரதம அதிதி ஆ.சிவநேசச்செல்வன் (தினக்குரல் ஆசிரியர்) சிறப்பு அதிதிகள் பேராசிரியர் வி.தில்லைநாதன், பேராசிரியர் அ.சிவராசா. பல்சுவைக் கதம்ப நிகழ்ச்சிகளும் மேடையேறும்.

# 2001 கல்விக் கண்காட்சி

பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி பொன்விழாவை முன்னிட்டு "2001 – கல்விக் கண்காட்சி" மூன்று தினங்கள் நடைபெறுகின்றன.

கணினி தினம், விஞ்ஞான தினம், வணிக தினம் என்று மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு 15ஆம் 16ஆம் 17ஆம் திகதிகளில் இந்தக் கல்விக் கண்காட்சி நடைபெறுகின்றது. காலை 8.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை கண்காட்சியைப் பார்வையிடலாம்.

இந்துவின் கல்விக் கண்காட்சியை வியாழக்கிழமை காலை கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த திறந்து வைத்தார். கல்வி அமைச்சர் கண்காட்சியைப் பார்வையிட்ட பின்னர் உரை நிகழ்த்தினார். "இந்துக் கல்லூரி கொழும்பில் சிறப்புப் பெற்று முன்னணியில் திகழ்கிறது. பெற்றோரும் மாணவர்களும் பாடசாலையின் முன்னேற்றத்திற்கு உதவுவதைப் பார்த்துப் பெருமகிழ்ச்சி அடைகிறேன். மாணவர்கள் பல சவால்களை எதிர் கொண்டு பல வெற்றிகளைப் பெற்றுள்ளார்கள். கடந்த வருடம் நடைபெற்ற ஜி.சி.ஈ (உயர்தர) பரீட்சையில் அதிக மாணவர்கள் சித்தி பெற்றது பாராட்டுக்குரியது"

இவ்வாறு கூறினார் கல்வி அமைச்சர்.

கல்லூரி அதிபர் த. முத்துக்குமாரசுவாமி தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் முன்னாள் அதிபர் திரு. த. சங்கரலிங்கம், பாடசாலை அபிவிருத்திச் சபை செயலாளர் கந்தையா நீலகண்டன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கணினி தின பிரதம அதிதி பட்டயக் கணக்காளர் எஸ்.ஸ்ரீகணநாதன், விஞ்ஞான தின பிரதம அதிதி கிழக்கிலங்கைப் பல்கலைக் கழக பௌதிகவியல் தலைவர் கலாநிதி ஜே.சி.எஸ்.ராஜேந்திரா, வணிக தின பிரதம அதிதி வடபிராந்திய மக்கள் வங்கி உதவிப் பொது முகாமையாளர் க.திருநாவுக்கரசு.

- கே.மயூரன்


தமிழகத்தின் தலை சிறந்த

சோதிடர் M.S. இராமலிங்கம்

தற்போது கொழும்பு வந்துள்ளார்.

உங்கள் பிரச்சினைகளுக்கு ஜாதகம் மூலம் தீர்வுகாண உடனே அணுகவேண்டிய முகவரி:-

எம்ப்ரெஸ் ஹோட்டல்

Room No- 19

383, R.A.DE MEL MAWATHIA,
COLOMBO - 3.
T.P: -577405, 577406

# ராசி பலன்



**மேடம்: அச்சுவினி,பரணி, கார்த்திகை1.**

இராசியில் சனி இருந்தாலும் இராசிநாதன் ஆட்சியாகக் குருபார்வை பெற்று இருப்பது விசேஷமே. பொருளாதாரம் தாராளமாக இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதரங்களுக்கிடையில் கருத்து வேறுபாடு தோன்றலாம். வீடு, வாகனம் இலாபம் தரும். உற்றார், உறவினர் விசுவாசமாக இருப்பர். மன வேதனையும் துன்பமும் இருக்கும். காரணமின்றிப் பயம் தோன்றும். வீண் கற்பனையில் மனம் ஈடுபடும். எதிரிகள் சின்னாபின்னமாகிச் சீரழிவர். குடும்பத்தில் வாக்குவாதம் முற்றி பகை கொள்ள இடமுண்டு. காதலர்களுள்ளும் கருத்துவேறுபாடு தோன்றலாம். தொழில் துறையில் வெற்றி உண்டு.



**இடபம்: கார்த்திகை, 2,3,4. ரோகிணி, மிருகசீரிடம் 1,2.**

இராசிநாதன் சுக்கிரன் பூரண பலம் பெற்று இலாபத் தானமான பதினோராம் வீட்டில் உச்சம் பெறுவது நல்ல அம்சம். பொருளாதாரம் தடைப்பட்டாலும் சமாளிப்பீர்கள். கல்வியில் ஆர்வம் குன்றலாம். சகோதரங்கள் சிறப்படைவார்கள். வீடு, வாகனம் இலாபம் தரும். வாகனம் ஓட்டுவதில் கவனம் தேவை. சொந்தக்காரர் சில சமயம் விலகி இருக்கக்கூடும். மனத் தெளிவு இருக்கும். ஆனந்தம் இருக்கும். ஆரோக்கியமான சிந்தனைகள் தோன்றும். கற்பனை சுகம் உண்டு. எதிரிகளால் நேரடியாகவோ மறைமுகமாகவோ எதிர்ப்புத் தோன்றும். அவதானம் வேண்டும். குடும்பத்தில் எச்சரிக்கையுடன் கூடிய அமைதி நிலவும். விசுவாசம் இருக்கும். காதலர்களுக்கு பொற்காலம். தொழிலில் வேலைப்பளு கூடினாலும் மதிப்பு உண்டு.



**மிதுனம்: மிருகசீரிடம்3, 4. திருவாதிரை, புனர்பூசம்1,2,3.**

இராசியில் ராகு இருப்பதால் சனியின்,செவ்வாயின் பார்வையைப் பெறுவது சற்றுப் பின்னடைவை ஏற்படுத்தலாம். கையில் காசு இருக்கும். சகோதர உதவியுண்டு. உற்றார், உறவினர் விசுவாசமாக இருப்பர். வீடு, வாகனம் செலவை உண்டாக்கும். மனம் ஆழ்ந்த யோசனையில் ஈடுபட்டாலும் மனச் சந்தோசம் உண்டு. எதிரியின் கை ஓங்கியுள்ளதால் சற்றுப் பணிந்துபோக வேண்டியிருக்கும். குடும்பத்திலும் சுமுக உறவு இல்லை. மனத்தளவில் விலகியே இருப்பர். காதலருள்ளும் இருந்து மோதல் வரவாய்ப்புண்டு. தேக சுகத்திலும் சிறிய பாதிப்பு ஏற்படலாம். தொழில் போட்டி இருந்தாலும் வெற்றிகிட்டும்.



**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

இராசிநாதன் சந்திரன் ஆறாம், ஏழாம், எட்டாம் வீடுகளில் சஞ்சரிக்கிறார். புதனோடு கூடி தன் இராசியைப் பார்ப்பதால் சுபமான வாரமாக அமையலாம். பணத் தட்டுப்பாடு வர வாய்ப்பில்லை. கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதர உதவியுண்டு. வீடு, வாகனங்களால் இலாபம் உண்டு. இன பந்துக்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் இருக்கும். பிரயாணம் அமையும். மனத் தைரியம் இருக்கும். யதார்த்த எண்ணங்கள் தோன்றும். இது வரை மனதை வருத்திய துன்பம் விலகும். எதிரிகளின் பலம் குறைந்திருப்பதால் அவர்களின் கோட்டைக்குள் உங்களால் புகமுடியும். குடும்பத்தில் அமைதி நிலவும். குடும்ப விசுவாசம் இருக்கும். காதலர் சந்திக்க வாய்ப்புண்டு. தொழில் துறையில் புதிய உத்தியைக் கையாண்டு புகழ் பெறுவீர்.



**சிங்கம்: மகம், பூரம், உத்தரம்1.**

இராசிநாதன் சூரியன் இன்பத் தானமான ஏழாம் வீட்டில் இருந்து இராசியை நோக்குவது புதுப்பலம். அத்துடன் சுக்கிரனின் பார்வையும் கிடைப்பது யோகமே. கையில் பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதரங்கள் உதவுவர். வீடு, வாகனங்களால் இலாபம் உண்டு. இன பந்துக்கள் ஆதரவாக செயற்படுவர். மனம் ஆழ்ந்த சிந்தனையில் இருந்தாலும் பெரும்பாலும் பயனுள்ளவையாகவே இருக்கும். தெய்வீக பக்தி தோன்றும். எதிரிகள் எதிர்ப்பைக் கைவிட்டு நட்புப் பாராட்டக்கூடும். குடும்பத்தில் அமைதி நிலவும். குடும்ப இரகசியம் பேணப்படும். காதலர்கள் காதலின் புனிதத்தையும் தூய்மையையும் பாதுகாப்பர். தொழில் சிறப்பு உண்டு.



**கன்னி: உத்தரம் 2,3,4. அத்தம், சித்திரை1,2.**

இராசி நாதன் புதன் பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் குருவினதும் சனியினதும் பார்வை பெற்று இருப்பது நலமே. பணத்தட்டுப்பாடு இருக்காது. கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதரர்கள் சிறப்படைவார்கள். வீடு, வாகன சுகம் உண்டு. இனபந்துக்களின் உறவு பலமடையும். பிரயாண வாய்ப்புண்டு. மனம் அலைமோதும். வக்கிர எண்ணங்கள் மன விரக்தியைக் கொடுக்கும். வீண் கற்பனையில் நேரம் செலவாகும். எதிரிகள் பலம் குன்றி அலைந்து திரிவர். குடும்ப சுகம் உண்டு. முந்தைய இனிய கனவு பலிக்கலாம். காதலர்கள் காதல் மயக்கத்தை அனுபவிப்பர். தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழில் துறையில் சங்கடம் தோன்றும். சமாளிப்பீர்கள்.



**துலாம்: சித்திரை 3,4. சுவாதி, விசாகம்1,2,3.**

இராசிக்கு சனியின் பார்வை கிடைத்தாலும் இராசிநாதன் சுக்கிரன் பூரண பலம்பெற்று உச்சமாக இருப்பது விசேஷம். கையில் பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் தோன்றும். சகோதர உதவியுண்டு. வீடு, வாகனம் செலவை உண்டுபண்ணும். உற்றார், உறவினர் குறை குற்றம் காண முனைவர். மன சஞ்சலம் உண்டு. மனக்கோட்டை கட்டுவதோடு நில்லாமல் வாழ முற்படுவர். எதிரிகளின் பலம் குறையும். பெண்பாலாரின் பகை கொள்ள நேரிடலாம். குடும்பத்தில் சஞ்சலம், சலசலப்பு தோன்றலாம். வீண் சண்டை வரலாம். காதலர் வாழ்வில் புயல் வீசலாம். தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழில் துறையில் முன்னேற்றம் உண்டு.



**விருச்சிகம்: விசாகம்4. அனுஷம். கேட்டை.**

இராசிநாதன் செவ்வாய் தன் சொந்த வீட்டில் பூரண பலத்துடன் குருவின் பார்வை பெற்று இருப்பது சிறப்பைத் தரும். கையில் பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதர உதவியுண்டு. வீடு, வாகனம் செலவை உண்டுபண்ணும். உற்றார், உறவினர் அயலவர் சில சமயம் பகை கொள்ள இடமுண்டு. மனம் பரிபூரண ஆனந்தத்தில் இருக்கும். ஆரோக்கியமான எண்ணங்கள் உதயமாகும். உலகியல் இன்பத்தை நாடும். நாங்களே பொல்லைக்கொடுத்து அடிவாங்க நேரிடலாம். அவதானம் வேண்டும். குடும்பத்தில் பூரண அமைதி நிலவும். குடும்ப இன்பம் உண்டு. காதலர் வாழ்வில் இளம் தென்றல் வீசும். தொழில் சிறப்புண்டு.



**தனு: மூலம், பூராடம், உததராடம் 1.**

இராசி நாதன் குரு எதிரியின் வீட்டில். ராசிக்கு கரும்பாம்பு, செம்பாம்புகளின் தொடர்பு அவ்வளவு 'நல்லதல்ல. பணத்தட்டுப்பாடு வரலாம் சமாளிப்பீர்கள். சகோதரருக்கு உதவ முடியாத நிலை தோன்றலாம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தினாலும் வாகன யோகம் உண்டு. உறவினர் வேண்டா வெறுப்பாக நடக்கலாம். சில சமயம் பகைவர வாய்ப்புண்டு. மனச்சஞ்சலம் இருக்கும் தேவை இல்லாத சிந்தனையில் ஈடுபட்டு மனவேதனை அடையும். எதிரிகளின் கை ஓங்கி உள்ளதால் மிக நிதானமாக நடக்க வேண்டும். தேக ஆரோக்கியம் சிறிது பாதிக்க வாய்ப்புண்டு. குடும்பத்தில் சிறு பகை தோன்றி மறையும். காதலர்களும் எச்சரிக்கையாயிருப்பர். தொழில் மதிப்புண்டு.



**மகரம்: உத்தராடம், திருவோணம், அவிட்டம் 1,2.**

இராசியிலும் இராசிநாதனுக்கு இருபுறமும் புதன் இருப்பது விசேஷமே. பணத்தட்டுப்பாடு வரலாம். கல்வியில் ஆர்வம் குன்றலாம். பிரயாண வாய்ப்புண்டு. உற்றார், உறவினர் களுக்குள் உட்பகை இருப்பினும் உறவாடுவர். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தும். மனம் அமைதியாய் இருக்கும். ஆரோக்கியமான எண்ணங்கள் தோன்றும். நல்ல எதிர்காலத் திட்டம் வகுப்பீர். எதிரிகள் உங்களுடன் சமபலம் பொருந்தி இருப்பதால் விலகி நடப்பது நல்லது. குடும்ப ஐக்கியமும் விசுவாசமும் இருக்கும். காதலர் வாழ்வு களை கட்டும் தேக ஆரோக்கியம் நல்லதாக இருக்கும். தொழில் சிறப்புண்டு.



**கும்பம்: அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3 .**

இராசிக்கும் இராசிநாதனுக்கும் இருபுறமும் சுவர் இருப்பது யோகமே. கையில் பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதர உதவி பரஸ்பரம் உண்டு. வீடு, வாகனம் இலாபம் தரும். உற்றார், உறவினர் அன்பாய் நடப்பர். மனச்சஞ்சலம் இருக்கும். இனம் புரியாத பயம் இருக்கும். வீண் கற்பனையில் கால விரயம் ஏற்படும். எதிரிகள் தங்களுக்குள் பிளவு அடைந்திருப்பதால் உடனடி ஆபத்தில்லை. குடும்ப அமைதி உண்டு. குடும்ப விசுவாசம் உண்டு. காதலர்கள் இதய அன்பைப் பரிமாறுவர். தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழில் துறையில் இருந்த போட்டி நீங்கி புகழ் பெறுவீர்கள்.



**மீனம்: பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி**

இராசியில் சுக்கிரன் பூரண பலம் பொருந்தி இருக்கிறான். இருபுறமும் தீயவர் இருப்பதால் மத்திம பலனே. பொருளாதாரம் தடைப்படும் சமாளிப்பீர்கள், கல்வியில் ஆர்வம் இருக்காது. சகோதர உதவி இருக்கும். வீடு. வாகனம் இலாபம் தரும். உறவினர்களுக்குள் தகராறுகள் வர வாய்ப்புண்டு. மனம் பூரண சாந்த நிலையில் இருக்கும். அறிவின்பால் மனம் செயற்படும். செயல் வடிவம் பெறக்கூடிய எண்ணங்களை சிந்திக்கும். எதிரி பலமற்று இருப்பதால் நீங்கள் ஆறுதலடையலாம். குடும்ப ஐக்கியம் பலப்படும். குடும்ப சுகம் உண்டு. காதலர்கள் இதய மொழி பேசி கண்களால் கதை சொல்வர். தொழில் லாபம் உண்டு.

**18.2.2001 முதல் 24.2.2001 வரை**
**பொ.சந்திரன்.**

# பார்வையற்ற பெண்ணின் யானைச் சவாரி

கண்பார்வையற்ற ஜரிஷ் நாட்டுப் பெண் கரோலின் கேசி இந்தியாவில் ஒரு மாதகால யானைச் சவாரியை மேற்கொள்கிறார்.

500 ஆண்டுகளுக்கு முன்பு வாஸ் கொடகாமா எட்டிப்பார்த்த காப்பாடு கடற்கரையில் இருந்து இந்தப் புதுமையான யானைச் சவாரியைத் தொடங்கினார். கண்ணூர், குடகு, வயநாடு, நீலகிரி போன்ற பகுதிகளைச் சுற்றிவிட்டு கோவையில் உள்ள காமகோடி கண் ஆஸ்பத்திரியில் சவாரி நிறைவடைகிறது.

கண்பார்வையற்ற கரோலின் இந்த யானைச் சவாரியை நடத்த இரண்டு காரணங்கள் இருக்கின்றன.

ஒன்று: நவீன இந்தியாவை உலகுக்கு எடுத்துக்காட்டுவது.

இரண்டு: கரோலினின் 'அஸ்லிங்' என்ற சேவை அமைப்புக்கு பணம் திரட்டுவது.

கரோலின் சவாரி செய்யும் யானையின் பெயர் பத்ரா. இதற்கு 20 வயது. இமாசலப் பிரதேசத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட இந்த யானைக்கும் கரோலினுக்கும் நல்ல நெருக்கம் ஏற்பட்டு விட்டது.



யானைப்பயணத்தில் இவரோடு இங்கிலாந்தைச் சேர்ந்த ஆதித்யாப் பட்டாங்கர், இமாசலப் பிரதேசத்தைச் சேர்ந்த நீரஜ், கேரளாவைச் சேர்ந்த சுற்றுலா வழிகாட்டி கோசிஜான், யானைப்பாகன் ஜெயன், விக்ரமன் ஆகியோர் இருக்கிறார்கள்.

ஒலிபர்ணாம் பயணத்தை முழுமையாக வீடியோவில் பதிவு செய்கிறார். இது சர்வதேச டெலிவிஷன்களில் மூன்று தொடராக ஒளிபரப்பப்பட இருக்கிறது.

பயணத்தின் போதே செயற்கைக் கோள் தொடர்புடன் கூடிய டெலிபோனில் ஜரிஸ், இங்கிலாந்து ரேடியோக்களுக்கு பேட்டியும் நேரடி வர்ணனையும் கரோலின் கொடுக்கிறார்.

இதன் மூலம் சுமார் 1 - 3/4 கோடி ரூபா கரோலினுக்கு வசூலாகிறது. இதில் 60 சதவீதத் தொகையை இந்தியாவில் இயங்கும் கண் பாதுகாப்பு அமைப்புக்கு வழங்குகிறார். மீதி பணத்தை அயர்லாந்தில் இயங்கும் கண் பாதுகாப்பு அமைப்புகளுக்குத் தர இருக்கிறார்.

# செயற்கைக் காது கைகொடுத்தது

உடல் உறுப்புகள் பாதிக்கப்பட்டால் செயற்கை உறுப்புகள் மூலம் மறுவாழ்வுகாணும் வசதி ஏற்பட்டுள்ள காலம் இது.

இதன் அடிப்படையில் செயற்கைக்காது ஒன்று உருவாக்கப்பட்டிருக்கிறது.

விலா எலும்புகளுக்கும் மார்புச்சுவருக்கும் இடையேயுள்ள பகுதியை எடுத்து அதில் காது உருவாக்கப்பட்டிருக்கிறது. லண்டன் மருத்துவர்கள் இவ்வாறு சாதனை புரிந்துள்ளனர்.

லண்டனைச் சேர்ந்த சிறுமி எம்மா பேலிஸ் (வயது 9) பிறந்த போது இரண்டு காது மடல்களும் இருக்கவில்லை.

சிறுமி வளர்ந்த பிறகு காது சீரமைப்பு அறுவைச் சிகிச்சை செய்ய டாக்டர்கள் முடிவு செய்தனர்.

அதன்படி சிறுமிக்கு அண்மையில் அறுவைச் சிகிச்சை நடத்தப்பட்டது. விலா எலும்பு மார்புச்சுவருக்கு இடையேயுள்ள பகுதியை எடுத்து அதைத் தலையுடன் இணைத்து தோல் மூலம் டாக்டர்கள் ஒட்டினார்கள். அந்தக் காது மடல்கள் நன்றாக ஒட்டிக்கொண்டன.

செயற்கைக் காது பொருத்தி காது மறு சீரமைப்பு செய்யப்படுவது இங்கிலாந்தில் இதுவே முதல் தடவை. மவுண்ட் வெர்னோன் ஆஸ்பத்திரியில் இந்த அறுவைச் சிகிச்சை நடத்தப்பட்டது.

# கொழும்பு வீதியில் ஆழக் குழி வாய்பிளந்த நிலையில்!

## 7 ஆண்டுகள்; கவனிப்பார் இல்லை; எப்போது யாரைப் பலி எடுக்குமோ!

இரண்டு வார விடுமுறைக்குப் பின்னர் மிஸ்டர் க்றோ அலுவலகத்துக்கு வந்த போது அங்கே அவருக்காக ஒரு கடிதக் குவியல் காத்துக் கிடந்தது.

அத்தனையும் முறைப்பாட்டுக் கடிதங்களும் பாராட்டுக் கடிதங்களும்.

முறைப்பாட்டுக் கடிதங்களுக்குத் தானே முன்னுரிமை.

முறைப்பாட்டுக் கடிதங்களில் பெரும்பாலானவை கொழும்பு வீதி ஒன்றில் ஏற்பட்டுள்ள கிணறு போன்ற ஆழக்குழி சம்பந்தமானவை.




கடிதங்களில் ''லொக்கேஷன்'' தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. ஸ்ரீ கதிரேசன் வீதியில் (பழையபெயர் செக்கடித்தெரு) ஆண்டிவால் வீதி சந்திக்கும் இடம்.

கரும்பு தின்னக் கூலி வேண்டுமா? மிஸ்டர் க்றோவுக்கு உடனே பறக்க வேண்டும் போல் இருந்தது. தனது போட்டோ கிராபர் நண்பரை உசுப்பினார்.

இருவரும் இப்போது ஸ்ரீகதிரேசன் வீதி– ஆண்டிவால் வீதிச் சந்தியில். மிஸ்டர் க்றோவின் ஓரக் கண் அதைப் பார்க்கக் கூசியது.

ஆண்டிவால் வீதிக்கு நுழையும் பாதை நடுவிலே கிணறு போன்ற பெரிய குழி– ராட்சதக் குழி வாயைப் பிளந்து கொண்டு இருந்தது. 15 அடிக்கு மேல் ஆழம் இருக்கும்.

குப்பையோடு கலந்திருந்த கழிவு நீர் கடல் அலை போல் இரைச்சலுடன் ஓடிக்கொண்டிருந்தது. ஆமாம். கீழே வடிகால். யாராவது விழுந்தால் அவ்வளவுதான்.



ஆழக் குழியில் குப்பை கூளங்களுடன் அலை மோதும் அழுக்குநீர்.

குழியுடன் சேர்ந்தாற் போல பாதையோரத்தில் சாப்பாட்டுக்கடை. அதன் ஒரு பக்கச் சுவரின் அத்திவாரம் குழிக்குள்ளாக வெளியே தெரிந்தது. சாப்பாட்டுக் கடைச்சுவர் எப்பொழுதும் இடிந்து விழும் ஆபத்து தொங்கிக்கொண்டிருக்கிறது.

விஷயங்களை முழுமையாக அறிவதற்கு சாப்பாட்டுக் கடைக்குள் நுழைந்தார் மிஸ்டர் க்றோ. அறிமுகப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. கடை முதலாளி மிஸ்டர் க்றோவை அடையாளம் கண்டுகொண்டு முகமலர்ச்சியோடு வரவேற்றார். அந்த அளவுக்கு மிஸ்டர் க்றோவுக்கு வி.ஐ.பி அந்தஸ்து. மகிழ்ச்சியைக்காட்டிக் கொள்ளவில்லை.

கடை முதலாளி கதையைத் தொடங்கினார்.

1992ஆம் ஆண்டிலிருந்து குத்தகைக்கு எடுத்துக் கடையை நடத்தி வருகிறேன். 1994இல் இந்த இடத்தில் உடைப்பு ஏற்பட்டு குழி விழுந்தது கவனிப்பாரில்லை. இன்று ஒரு கிணற்றைப் போல் உருவெடுத்துள்ளது. ஆழம் மட்டுமல்ல, அகலத்தையும் பாருங்கள். வீதியில் பாதியை விழுங்கிவிட்டது.

கடையின் ஒரு பக்க மதிற்சுவர் உடைந்து திருத்தினேன்.

நுளம்புத்தொல்லை, துர்நாற்றம் தாங்கமுடியவில்லை. வடிகாலைத் திருத்தப் போகிறார்கள் எனச் சொல்லி ஜனாதிபதி தேர்தலின் போது கொன்கிரீட் வளையங்களை இங்கே கொண்டுவந்து போட்டார்கள். தேர்தல் முடிந்ததும் மீண்டும் எடுத்துச் சென்று விட்டார்கள்.



குழியினூடாகச் சாப்பாட்டுக்கடைச் சுவரின் அத்திவாரம் தெரிகிறது.

கடந்த வருடப் பொதுத்தேர்தலின் போது–

''அதோ அங்கே பாருங்கள்'' எனப் பாரிய கொன்கிரீட் வளையங்களைக் காட்டி ''அவற்றைக் கொண்டுவந்து போட்டுள்ளனர். ஆனால் வேலை எதுவும் நடக்கவில்லை'' என்று கவலை தோய்ந்த ஆவேசத்தோடு கூறிமுடித்தார் கடை முதலாளி.

''இது தொடர்பாக யாரிடமாவது முறையிட்டீர்களா?'' இது மிஸ்டர் க்றோவின் கேள்வி.

ஒரு வர்த்தகரின் பெயரைக் குறிப்பிட்டு அவரைப் போய்ச் சந்திக்கச் சொன்னார் கடை முதலாளி. அங்கிருந்து கிளம்புவதற்கு முன் போட்டோ கிராபர்– அவர் ஸ்மார்ட்டான ஆள் – தன்னுடைய வேலையை முடித்து விட்டார். கமெரா தன் கழுகுக் கண்ணைத் திறந்து மூடி விட்டது. மேலதிக விவரம் பெறுவதற்காக வர்த்தகரிடம் பறந்தார் மிஸ்டர் க்றோ. ஆஜானுபாகுவாக மீசையுடன் இருந்தார் அந்த இளம் வர்த்தகர். கடை முதலாளி எல்லாவற்றையும் அவருக்கு டெலிபோனில் சொல்லியிருக்க வேண்டும். புன்சிரிப்போடு வரவேற்றார். பேச்சைத் தொடங்கினார்.

ஐயா நான் ஒரு சமாதான நீதிவான் இது தொடர்பாக இப்பிரதேசத்தில் இருக்கும் அனைத்து சமாதான நீதிவான்களும் இணைந்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குக் குறையைச் சுட்டிக்காட்டினோம் மக்களும் அக்கறை எடுத்தார்கள். ஆயினும் வேலை நடக்கவில்லை அத்துடன் அனைத்து முன்னெடுப்புக்களும் ஸ்தம்பித்துவிட்டன. குழியைநிரப்பி வடிகாலைத் திருத்தி அமைக்க செலவு அதிகமாகுமாம்.

இது ஒரு முக்கியமான நுழைவாயில் இந்துக் கோயில்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள் உள்ளன. அதிகமான மக்கள் வசிக்கும் பிரதேசம். இங்குள்ள கோயில்களையும் செட்டித் தெருக் கோயில்களையும் பார்க்க வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் வருகிறார்கள். அப்படிப்பட்ட இடம் எப்படி இருக்கிறது பாருங்கள். சுகாதாரச் சீர்கேடுகள் அனைத்தும் இவ்விடத்திலேதான் ஆரம்பம். கட்டாக்காலியாய் அலைந்து திரிபவர்களின் வசிப்பிடமாய் மாறிவிட்டது. கொன்கிரீட் வளையங்கள் பலருக்கு மலம் கழிக்கும் இடமாகிவிட்டது. சிறுநீர் நாற்றம் வேறு.

பிரதேசத்திலுள்ள குப்பைகள் அனைத்தும் இவ்விடத்திலே சேகரிக்கப்படுகின்றன. உடனே அவற்றை அகற்றுவதில்லை. தொற்று நோய்களின் பிறப்பிடம் ஆகிவிடுகிறது என மிக்வும் வேதனையோடு தெரிவித்தார் அந்த இளம் வர்த்தகர்.

தகவல்களுக்கு நன்றி கூறிவிட்டு அவ்விடத்தைவிட்டு நேராக ஆபிசுக்கு பறந்தார் மிஸ்டர் க்றோ.

எடுத்தார் டெலிபோன் ரிசிவரை.

சுழற்றினார் மாநகரசபைக்குரிய எண்களை. டெலிபோன் எடுத்தவரிடம் விஷயத்தைக் கூற ''நீங்கள் இது தொடர்பாக மாளிகாகந்த நகரசபை டிப்போவில் விசாரியுங்கள் எனப்பதில் வந்தது.

அங்கு தொடர்பு கொண்டார் மிஸ்டர் க்றோ.

''இங்கில்லை. இது தொடர்பாக கோட்டடியிலுள்ள மிகிந்து மாவத்தை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும் எனப் பதில் வந்தது.

மிஸ்டர் க்றோவுக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது. என்ன செய்வது ?விஷயம் ஆக வேண்டுமே. மிகிந்து மாவத்தை அலுவலகத்துக்கு அழைப்பு எடுத்தார்.

என்ஜினியர் திரு. குருப்புவிடம் விவரம் கேட்டார்.

''உண்மைதான். மக்களுக்கு ஆபத்து விளைவிக்கக்கூடியதாய் உள்ளது. நீண்டகாலப் பிரச்சினை'' கொஞ்சம் லைனில் இருங்கள் எனக் கூறிவிட்டு இன்னொருவருக்குத் தொடர்பை மாற்றினார்.

திரு சந்திரபால என்ற 2A டிஸ்ட்ரிக் என்ஜினியர் பேசினார். ''நான் அண்மையில்தான் இங்கு வந்தேன். இது ஒரு பெரிய புரொஜக்ட். விபரமறிய மாநகர சபையிலுள்ள சலீமுடன் (சீப் என்ஜினியருடன்) தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார். மிஸ்டர் க்றோவின் பொறுமைக்குப் பெரிய சோதனையாகி விட்டது. என்றாலும் முயற்சியைக் கைவிட மனமில்லை. சலீமுடன் தொடர்பு கொண்டு கேட்டார்.

''ஓ ஆண்டிவால் டிரேயினேஜ் விஷயமா? உடனடியாகத் திருத்தங்களை மேற்கொள்ளத் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு ஒப்பந்தம் கொடுத்தாகி விட்டது. இப்போது வேலையை ஆரம்பித்திருப்பார்களே எனப்பதிலளித்துவிட்டு போனை வைத்து விட்டார். அவர் இப்படிச் சொன்னார். ஆனால் அவர் சொன்னபடி அங்கே வேலை ஆரம்பிக்கப்படவில்லை. இனி அந்தக் குழி ஆட்களைப் பலி எடுத்தபின்னர் அல்லது சாப்பாட்டுக்கடைச் சுவரை விழுங்கி அனர்த்தம் விளைவித்த பின்னர்தான் எல்லோரும் விழிப்பார்கள்!

இப்படிப்பட்ட அதிகாரிகளை என்ன செய்வது? மிஸ்டர் க்றோ மிகவும் நொந்து கொண்டார்.

—படங்கள்: த. வேலுசாமி

குப்பை கூளங்கள் இங்கே சேகரிக்கப்படுகின்றன. அருகில் காங்கிரீட் வளையங்கள்.














இப்பத்திரிகை கொழும்பு 06, வெள்ளவத்தை பெரக்கும்பா பிளேஸ் 1/5ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் என்டர்பிரைசஸ் ஸ்தாபனத்தினால் 2001 பெப்ரவரி 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.